கோகுலம்


GOKULAM


மே '92 விலை ரூ. 3.00




சபாஷ்! சரவண வடிவு!

DIAMOND COMICS PRESENTS

















Participate in Diamond Cartoon-Story-Title Contest! And Win the fabulous Prizes. Entry forms in new Diamond Comics



PUZZLE PACK

SECOND SET OF FOUR BOOKS

(With the concept of 'knowledge', coated with 'fun' to develop your brain and to Sharpen the intelligence.)

Now available

Second Set (No. 5 to 8) of PUZZLE PACK

after success of First set.

Hurry! pick you favourite Second set from the nearest book shop.

Price : For each book Rs. 5/-

Mahabali Shaka's 20 Comics Set
20 Sticker Free Price Rs. 6.00 Each

NEW DIAMOND COMICS (Ist April 1992)

Phantom-18 (Digest)	15.00

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER.

Look, Who all are There in the Club!

Chacha Chaudhary, Lambu-Motu, Zaab, Pinki, Billoo, Tauji, Fauladi Singh, Channi Chachi, Dabu, Mahabali Shaka, Chacha Bhatija, Rajan-Iqbal, James Bond, Phantom, Mandrake... and so many more such 'favourites' of yours.

All of them are brought to you by Diamond Comics, the largest selling comics in India.

The hair-raising and hilarious actions of these famous characters come to you in English, Hindi, Bengali, Gujrati & Marathi.

How Convenient to Meet Them All!

Once you join the club, you don't have to worry about your parents forgetting to bring the latest Diamond Comics home or your news agent/book seller finishing all the copies before you got yours.

That's because as a member of the Diamond Book Club, you would get your set of 6 comics in time at your doorstep, every month. Moreover, as a special privilege, you will be informed in advance about our forthcoming publications from time to time.

Gifts Galore!

For instance, 'The Children Jokes' with first V.P. and some other gifts on your birthday.

Then, there are many other 'surprises' in store for you on different occasion.

Postage Free!

To avoid delays, your parcel will be sent to you by V.P. every month. You just hu make your parents agree to pay the postman who brings the packet.

How Easy it is to Become a Member!

Just fill in the coupon given below and send it to us along with a Money Orc Postage Stamps worth Rs. 10/-

These ten rupees will bring you the benefit of saving Rs. 3/- on V.P.P. and Rs. 7 postage. Plus, a Digest worth Rs. 12/- is yours FREE, if you receive 12 continuously.

Tell your Friends Too about the Club!

If 4 of your friends become members, you will receive a Digest of your choice w Rs. 12/- FREE of cost. You have to send their names and Rs. 10/- (membership per member.

Yes! I would like to become a member of "DIAMOND BOOK CLUB" and t advantage of the benefits. I have read all your rules and shall abide by thes promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps with Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

DISTRIBUTORS : Madras : • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. **Hyderabad :** • Neelkamal Book Distributors, Sultan Ba **Bangalore :** • Sapna Book Stall, Opp. Tribhuvan Theatre, Gandhi Nagar. • A.K. Agencies, 2094, 8 'A', Main Road, 'E' Block, Rajaji Nagar, 2nd st

கோகுலம்

1992 - மே மாத இதழ்
மலர் : 10 இதழ் : 4





அருமைச் சிறுவர் சிறுமியரே!

விடுமுறை தொடங்கியிருக்குமே? இந்த விடுமுறையை வெறும் பொழுது போக்குக்காகச் செலவிடாமல் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பயன்படும்படி ஏதாவது நல்ல பணிகளில் செலவிடலாமே? இதற்கு உங்களுக்கு வழிகாட்ட உதவும் வகையில் இந்த இதழில் 'நற்பணிகள் செய்தேன்' என்ற தலைப்பில் சில தம்பி தங்கைகள் தங்கள் அனுபவங்களைக் கூறியிருக்கிறார்கள். நீங்கள் மனது வைத்தால் உங்கள் அளவில் கண்டிப்பாக ஏதாவது நற்பணிகளைச் செய்யலாம். இப்படி நீங்கள் செய்த நற்பணிகளை ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி உங்கள் முழு முகவரியையும் வயதையும் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புங்கள். சிறப்பானவற்றைக் கண்டிப்பாகக் கோகுலத்தில் வெளியிடுகிறோம்.

ஏப்ரல் மாத இதழின் அட்டைப்படத்தைப் பாராட்டிப் பலர், குறிப்பாக, இஸ்லாமிய வாசகர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த இதழில், வழக்கமாக வரும் போட்டியுடன் கூட விடுமுறைப் போட்டி ஒன்றும் வெளியாகிறது. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

இந்த இதழில் 'மலைக் கோட்டை மர்மம்' தொடர்கதை முடிவடைகிறது. சுயநலம் மிக்க சமூக விரோதியான பாஞ்சாலின் சட்டவிரோத நடவடிக்கைகளை அஞ்சாது எதிர்த்துப் போராடி அபாயங்களில் சிக்கிக் கொள்ளும் மணிமாறன், தனது நண்பர்களான ஆனந்த் அஸ்வினியின் உதவியுடன், பாஞ்சாலின் கொடுமைகளுக்கு முடிவு கட்டி, அப்பாவிக் கிராம மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் முயற்சியில் வெற்றி பெறுகிறான். மணிமாறனுக்குப் பிரியாவிடை தருகிறோம். பன்னிரெண்டு மாதங்களாக இதழுக்கு இதழ் சுவைகுன்றாது இதை எழுதிய வீ. ர. வசந்தன் பாராட்டுக்கு உரியவர்.

புதிய தொடர்கதையைப் பற்றிய அறிவிப்பும் வெளியாகியுள்ளது. உங்கள் பாடு கொண்டாட்டம்தான். மகிழ்ச்சிதானே?



அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்

இந்த இதழில்...


1. அருமைச் சிறுவர் சிறுமியரே 1
2. இந்த இதழில் 2
3. யாருடைய குதிரை? 4
4. முதலை கறா நண்பன்! 6
5. பல்லிகள் - சித்திர அறிவியல் 10




பல்லிகள் - பக்கம் 10


6. பாலைவன நண்பன் 12
7. பிருந்தாவனக் கவியரங்கம் 14
8. பலே கிண்டன்! - சித்திரக்கதை 17
99. விடிந்தது! 20
10. அட்டைக்கு இருதயம் உண்டா? 21
11. வாய்மூடா வளவன்! 25
12. சூரியனா, சந்திரனா? 29
13. கேட்கட்டுமா டாக்டர்? 30
14. பேராசை! 32
15. சிரிப் 33
16. ஏழாவது பெண்! 34
17. தேவதை மகள்! 40
18. ஏகநாதர் - சித்திரக்கதை 41
19. உருட்டு விழி ஆந்தையார்!
- செய்து பாருங்கள் 45
20. விடுமுறைப் போட்டி 48
21. எலிக்கு லட்டு இருக்கும்
இடத்தைக் காட்டுங்கள் 50
22. எத்தனை மிருகங்கள்? 51
23. வட்ட வட்ட வெண்ணிலா 52
24. மலைக்கோட்டை மர்மம் 58
25. நற்பணி செய்தேன் 66
26. எந்த வால் எதற்கு? - போட்டி 70

பாலவன நண்பன்
- பக்கம் 12



அட்டைக்கு இருதயம்
உண்டா? - பக்கம் 21





ஏகநாதர் - பக்கம் 41



மக்கள் மனதில் நிலைத்தவர் - பக்கம்.71

27. மக்கள் மனத்தில் நிலைத்தவர் 71
28. மாமரம் 74
29. பிருந்தாவனம் 75
30. குழந்தையும் தெய்வமும் 78
31. கேளுங்கள் சொல்லப்படும் 79
32. ரஞ்சிக் கோப்பை 82




வாய்மூடா வளவன்! - பக்கம் 25



எங்களது இல்லை! - பக்கம் 89

33. உங்கள் நூலகம் 87
34. விட்டுப் போனவை எவை? - போட்டி முடிவு 88
35. எங்களது இல்லை! 89
36. சபாஷ் சரவணவடிவு! 92
37. சார் தபால்! 96



யாருடைய குதிரை?

அக்பர் சக்ரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில் சிற்றரசர் சந்திரகாந்த் என்பவர் ஆட்சி புரிந்து வந்தார்.

அக்பர் சபையின் அறிஞர்களில் மதிநுட்பம் வாய்ந்த பீர்பலின் அறிவுத் திறனைக் கேள்வியுற்று அவரை நேரில் பார்த்து மகிழக் கருதினார் சந்திரகாந்த். ஒரு நாள் மாற்று உடையில் குதிரையில் டில்லிக்குப் புறப்பட்டார். வரும் வழியில் களைப்புற்று விட்டபடியால் ஓர் விடுதியில் தங்கி, சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டார். மறுநாள் புறப்படும் சமயத்தில், ஒற்றைக் காலில்லாத ஒருவன் தானும் டில்லிக்குப் போக வேண்டும் எனவும் தன்னால் நடக்க இயலாததால் அவருடைய குதிரையிலேயே தன்னையும் ஏற்றிக் கொண்டு செல்லவும் சந்திரகாந்திடம் வேண்டினான்.

சந்திரகாந்தும் மனமிரங்கி அவரைத் தன் குதிரையில் ஏற்றிக் கொண்டார்.. இருவரும் டில்லி வந்து சேர்ந்தனர்.

'இறங்கிக் கொள்ளும். இதுவே டில்லி நகரம்!' என்று கூறினார் சந்திரகாந்த்.

ஆனால், அந்த நடக்க இயலா மனிதனோ இறங்க மறுத்ததோடு, ''குதிரை என்னுடையது, உமக்கு உதவி செய்யும் பொருட்டு உம்மை என் குதிரையில் ஏற்றிக் கொண்டு வந்தேன். இப்பொழுது என்னையே இறங்கச் சொல்லி, என் குதிரையை அபகரித்துக் கொள்வதற்குச் சூழ்ச்சி செய்கிறீரா? குதிரையிலிருந்து இறங்கிப் போக வேண்டியவர் நீர்தான், நான் அல்ல?'' எனக் கூச்சல் போட்டதோடு, அருகில் இருந்த பொது மக்களிடம் தனக்கு நியாயம் கிடைக்க உதவும்படி கேட்டுக் கொண்டான்.

பொது மக்களும் இரக்க மிகுதியால் அவனுடைய கூற்றை நம்பினர். ''பலவீனமான இவரது குதிரையை, பலசாலியான இவன் அபகரிக்கப் பார்க்கிறான்; குதிரை நடக்க இயலா இவருடையதே என நியாயம் வழங்கினார்கள்.

சந்திரகாந்த் வேதனையோடு அரச சபைக்குப் போய், தனக்கும் நடக்க இயலாத மனிதனுக்கும் ஏற்பட்ட குதிரைத் தகராறைக் கூறி தனக்கு நியாயம் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

வழக்கு பீர்பலிடம் விசாரணைக்கு வந்தது.

வழக்கு சம்பந்தமான இருவருடைய விளக்கத்தையும் கேட்ட பீர்பல் அந்த குதிரையை மற்ற குதிரைகளுடன் லாயத்தில் கட்டி வைக்கும்படி உத்தரவிட்டார்.

மறுநாள் நடக்க இயலா அந்த மனிதனை மட்டும் அழைத்து கொண்டு குதிரை லாயத்துக்குச் சென்று, ''இந்தக் குதிரைகளில், உங்கள் குதிரை எது?'' என்று கேட்டார் பீர்பல்.

அந்த மனிதனால் குதிரையை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவருடைய சொந்தக் குதிரையாக இருந்தால்தானே தெரியும்? குதிரையும் அவனைக் கண்டு கொள்ளவில்லை. அ வ ன் தா ன் உண்மையான எஜமானன் இல்லையே!

சந்திரகாந்தை அ ழை த் து க் கொண்டு மறுபடி குதிரை லாயத்துக்குச் சென்றார் பீர்பல். தன்னுடைய குதிரையைச் சரியாக அடையாளம் காட்டினார் சந்திரகாந்த். அவரைப் பார்த்துக் குதிரையும் மகிழ்ச்சியாகக் கனைத்தது!

குதிரை, சந்திரகாந்துக்கே சொந்தமானது என நியாயம் வழங்கிய பீர்பல் மோசடிக் குற்றத்திற்காக அந்த மனிதருக்குத் தண்டனை வழங்கினார்!

சந்திரகாந்த் தான் யார் என்பதையும், வந்த நோக்கம் பற்றியும் விளக்கியதோடு பீர்பலின் அறிவுக் கூர்மையைத் தானே உணரும்படி செய்ததற்கு மகிழ்ச்சியும் தெரிவித்தார்!

- ஆர். பரமசிவம்.



'ப்ளோவர்' என்று ஒரு சிறு பறவை. இது முதலைகளுடைய பற்களைச் சுத்தம் செய்யும் வைத்தியராகப் பணியாற்றுகிறது.

முதலை உயிரினங்கள் எல்லாவற்றையும் தின்னக்கூடியது. இரையின் எச்சங்கள் அதன் கோரமான பெரிய பற்களுக்கிடையிலே சிக்கிக் கொண்டிருக்கும்.

முதலை 'ஆ'வென்று வாயைச் சாதுவாகத் திறந்து வைத்துக் கொண்டிருக்க, ப்ளோவர் பறவை அதன் வாய்க்குள் சென்று அமர்ந்து ஒவ்வொரு பல்லாகச் சுத்தம் செய்யத் தொடங்கும். இடுக்குகளில் சிக்கிக் கொண்டுள்ள இறைச்சித் துண்டுகளைக் கொத்தி எடுக்கும். உண்டு விடும்!

முதலை அசந்து வாயை மூடினால் போதும்! பறவையின் உயிர் போய் விடும். ஆனால் முதலை அப்படிச் செய்வதில்லை. தன் பற்கள் சுத்தப்படுவதற்காகப் பொறுமையாகக் காத்திருக்கிறது. அதே நேரத்தில், பறவைக்கும் ஒரே இடத்தில் தாராளமாக இரை கிடைத்திவிடுகிறது!

இதே போல், கடல் மீன்களைச் சுத்தப் படுத்தும் தோட்டி மீன் ஒன்றுள்ளது. அவை ஒரு கோஷ்டியாக இருக்கும். தம் உடலைச் சுத்தப் படுத்திக் கொள்ள மீன்கள் இவைகளிடம் வருகின்றன. பற்களின் இடுக்குகளில் சிக்கிக் கொண்டிருக்கும் ஒட்டுண்ணிகள், காளான், பாக்டீரியா ஆகியவற்றை நீக்கி இவை சுத்தப் படுத்துகின்றன, வேலை முடியும் வரை மீன் பொறுமையாக ஒத்துழைக்கிறது. சுறா மீன்கள் கூட இவ்வாறு பற்களைச் சுத்தம் செய்து கொண்டு போய் விடுகின்றன!

- சிவரஞ்சன்

எனக்கென்ன தெரியும்?



ஒரு சமயம் முல்லா தம் கழுதையின் மேல் ஏறி உலாவச் சென்ற போது, கழுதை திடீரென்று மிரண்டு அதன் போக்கில் தலைதெறிக்க ஓடியதால், முல்லா கீழே விழுந்து விடாமல் சமாளித்துக் கொண்டிருந்தார்.

வழியில் சென்ற ஒருவர், இக் காட்சியைக் கண்டு, ''முல்லா, இவ்வளவு விரைவாக எங்கே செல்கிறீர்கள்?'' என்று முல்லாவைப் பார்த்துக் கேட்டார்.

கழுதையின் மேல் சவாரி செய்து கொண்டிருந்த முல்லா, ''எனக்கு என்ன தெரியும்? என் கழுதையைக் கேளுங்கள்'' என்று கேட்டவருக்குப் பதிலளித்தார்.


-வே. பூங்குன்றன், தி. ச. மாவட்டம்.

பல்லிகள்

ஆழி




கால்கள் உள்ள பல்லிகள், கால்கள் இல்லாத பாம்புகள் மாதிரி 'ஊர்வன' வகுப்பைச் சேர்ந்தவையே! பல்லிகளில் சுமார் 3000 வகைகள் இருக்கின்றன. இந்தியாவில் சுமார் 150 வகைகள் இருக்கின்றன. பல்லிகள் வெப்ப இரத்தம் கொண்டவை; முட்டையிட்டு இன விருத்தி செய்கிறவை. பச்சோந்தி, அரணை, ஓணான், உடும்பு முதலியவை பல்லி இனமே. பல்லிகள் சுமார் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்!




'கெக்கோ' என்று ஒரு பல்லி இனம் இருக்கிறது. இது கத்துவது 'கெக்கோ' என்று ஒலிப்பதால் இதற்கு இந்தப் பெயர். தனக்கு ஆபத்து வரும் போல் தெரிந்தால், இது தன் வாலைத் தானே துண்டித்துக் கொள்ளும்! இதன் துடிக்கும் வாலையே பார்த்துக் கொண்டிருக்கும் எதிரிகளிடமிருந்து இது தப்பிவிடும்! வால் மீண்டும் வளரும்.



இந்த 'ஆபிமோரஸ் ட்ரிடாக்டைலஸ்' (ஜாலிம் சண்டா) என்னும் பல்லிக்கு 'மணல் மீன்' என்ற பெயரும் உண்டு. மற்ற ஊர்வன போக முடியாத பாலைவன மணலில், இது மீன் நீந்துவது போல எளிதாக ஊர்ந்து போகும்!





பல்லி இனத்தைச் சேர்ந்த, ஆஸ்திரேலியாவிலுள்ள 'நீலநாக்கு' என்ற அரணை எப்போதும் 12 முட்டைகள் தாம் இடும். இந்த எண்ணிக்கை மாறுவதில்லை!



'கிலா மான்ஸ்டர்' என்னும் பல்லிக்கு அடித்தாடையில் விஷம் உண்டு. இது கடித்தால் சிறு பிராணிகள் இறந்து போகும்!


ஆப்பிரிக்காவில் உள்ள 'பொங்குப் பல்லி' முன்னால் ஓடுவதைப் போலவே தலையைத் திருப்பாமல் பின்னாலும் ஓடும்!






வட அமெரிக்காவில் உள்ள 'கொம்புப் பல்லியைப் பிடித்துவிட்டால், அதன் கண்களிலிருந்து இரத்தத்தைச் சுமார் 40 செ.மீ. தூரத்திற்குப் பீச்சியடிக்கும்! இது 12 செ.மீ. நீளம் இருக்கும். இதன் ஒரு வேளை இரை 1000 முதல் 1500 எறும்புகள்!

'கழுத்துக் குஞ்சப் பல்லி' தன் எதிரிகளைப் பயமுறுத்த, தன் கழுத்தில் உள்ள தோல் மடிப்பைச் சிலிர்த்துக்கொள்ளும்!







பறக்கும் பல்லிகளும் இருக்கின்றன. இதன் விலாப்பக்கம் உள்ள தோல்கள் விரிந்து இறக்கைகளைப் போல் உதவுகின்றன. அதன் உதவியால் இந்தப் பல்லி ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குச் சுமார் 50 மீட்டர் தூரம் பறந்து தாவும்! சாதாரண நேரங்களில் இந்த இறக்கை உடலோடு மடிந்து இருக்கும். இந்த வகைப் பல்லிகள் மலேசியாவிலும், இந்தோனேஷியாவிலும் இருக்கின்றன!



'நியூட்' என்னும் பல்லியின் கண்களைத் தோண்டி எடுத்துவிட்டால் மறுபடியும் கண்கள் உருவாகிவிடுகின்றன! கால்களை வெட்டி எடுத்துவிட்டால், மறுபடியும் வளர்ந்துவிடுகின்றன! 1761- ஆம் ஆண்டு இதைச் சோதனை செய்து கண்டுபிடித்துச் சொன்னவர் 'ஸ்பால்லன்ஸனி' என்னும் இத்தாலிய விஞ்ஞானி.



பல்லி இனத்தைச் சேர்ந்த பச்சோந்தி, தன் உடலின் நீளத்திற்கு ஏற்ப தன் நாக்கை நீட்ட முடியும்!



உலகிலேயே மிகவும் பெரிய பல்லி இந்தோனேஷ்யாவின் பக்கத்தில் உள்ள கோமோடோ தீவில் இருக்கிறது. இந்த 'கோமோடோ பல்லி'யின் நீளம் சுமார் 3.75 மீட்டர்! எடை 115.5 கிலோ! இது, மான், காட்டுப் பன்றி முதலியவற்றை அப்படியே விழுங்கிவிடும்! 30 ஆண்டுகள் உயிர்வாழும்! மனிதர்களுக்கும் இது பயப்படுவதில்லை!



ஆனால், பல்லிகளில் மிகவும் பயங்கரமான தோற்றமுடையது தென் அமெரிக்கக் கடற்கரைப் பகுதிகளில் உள்ள சிறு தீவுகளில் வாழும், 2.17 மீட்டர் நீளம் உள்ள 'கடல் பல்லிகள்' தாம்!

பாலைவன நண்பன்

ஒட்டகத்தைத் தமிழில் ஒட்டை என்றும் சொல்லலாம். பாலைவன வாழ்க்கைக்காகவே ஆண்டவனால் படைக்கப்பட்ட அற்புதவிலங்கு ஒட்டகம்! எனவேதான் இதற்குப் ''பாலைவனக் கப்பல்'' என்றும் உருவகப் பெயரும் வழங்குகிறது!

மணலில் நடப்பதற்காகவே வடிவமைந்த பாதங்கள் - மணற்புயல் வீசும் போது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மூக்குத் துவாரங்களை லாவகமாக மூடிக் கொள்ளும் திறன் - கண்களைப் பாதுகாக்க அமைந்த இருவரிசைக் கண் இமைகள் - குடிக்க சொட்டு நீர் கூட இன்றிப் பல வாரங்கள் வாழக் கூடிய ஆற்றல் - இவையெல்லாம் ஒட்டகத்தின் சிறப்பு அம்சங்கள். ஆனால், நீர் கிடைத்தால் முப்பது காலன் நீரைக் கூட ஒரே நேரத்தில் காலி பண்ணி விடும்!

பாக்டீரியா ஒட்டகங்களுக்கு முதுகில் இரண்டு திமில்கள் உள்ளன. அதில் சேமித்து வைத்துள்ள கொழுப்புப் பொருள்களைக் கொண்டு பல நாட்கள் உணவு இல்லாமலும் வாழும். மத்திய ஆசிய நாடுகளிலுள்ள ஒட்டகங்களுக்கு அடர்ந்த ரோமப் போர்வையும் உண்டு. பாம்பு, தோலை உரிப்பதைப் போல இவைகளும் தம் உரோமப் போர்வையை ஒரு பருவத்தில் உதிர்த்து விடுகின்றன.

மேற்கு ஆசியா, வட ஆப்பிரிக்கா





(சஹாரா) அரேபிய நாடுகள், இந்தியாவில் ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களின் 'கிராமங்களிலும் ஒட்டகங்கள் உள்ளன. குறிப்பாக வட ஆப்பிரிக்க நாடுகளில், ஒருவனது செல்வத்தின் அளவும் சமுதாய அந்தஸ்தும் அவனிடமுள்ள ஒட்டகங்களின் எண்ணிக்கையைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது.

சுமைகளை ஏற்றிச் செல்லவும், விவசாய வேலைகளுக்கும், போக்குவரத்துக்கும் ஒட்டகங்கள் பயன்படுவதுடன் பாலுக்கும், மாமிசத்திற்கும், ஆடை நெய்யும் உரோமத்திற்கும் கூட அவை பெருமளவு உபயோகப்படுகின்றன.

அரபு நாடுகளிலும் வட ஆப்பிரிக்க நாடுகளிலும் ஒட்டக மாமிசம் இல்லாத விருந்து ஒரு விருந்தாகக் கருதப்படுவதில்லை!

குவைத், பஹ்ரைன் முதலிய அரபு நாடுகளில், நாம் குதிரைப் பந்தயம் நடத்துவதைப் போல ஒட்டகப் பந்தயம் நடத்துகின்றனர். (Camel race) மில்லியன்கணக்கான டாலர்களைப் பந்தயத் தொகையாக வைக்கின்றனர்!

இஸ்ரேலிலுள்ள பென்குரியன் பல்கலைக் கழகத்தில் ஒட்டகங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் ரிவென்யாகில் கூறுவது இது : ''மற்ற மிருகங்கள் உயிர் வாழவே முடியாத நிலைமையில், வறண்ட நிலங்களிலுள்ள தூறுகளையும் புதர்ச் செடிகளையும் தின்று பாலைப் பொழிந்து தருவன ஒட்டகங்கள். ஒட்டகத்தின் பால், ஊட்டச் சத்து மிகுந்த முழுமையான உணவு மட்டுமல்ல; ஆயிரக்கணக்கான மக்களின் அன்றாட முக்கிய உணவுப் பொருளாகவும் (Staple food) உள்ளது.''

1984 இல் எதியோப்பியா, கென்யா முதலிய நாடகளில் ஏற்பட்ட பஞ்சத்தில், மற்ற வீட்டு விலங்குகள் அழிந்துவிட்ட போது, ஒட்டகங்கள் மட்டும் ஆரோக்கியமாக இருந்தனவாம்!

ஒட்டகங்களின் மற்றொரு சிறப்பு அம்சம் என்னவெனில், ஆடுகளும் மாடுகளும் புல் புதர்களை மேயும் போது அவற்றை வேருடன் தின்று பாழாக்கி விடும். ஒட்டகங்களோ மேலோட்டமாக மேய்ந்து அவை மீண்டும் துளிர்க்க உதவுகின்றன. இதனால், மேய்ச்சல் நிலம் ஒட்டகங்களால் பாழாவதில்லை.

பார்வைக்கு அழகில்லாமல் காட்சியளிக்கும் ஒட்டகம், வறண்ட நிலப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைக்கு வளம் தரும் அமுதசுரபி என்பதில் ஐயமில்லை.

வெ.வரதராசன்

பிருந்தாவனக் கவியரங்கம்

குயிலக்கா!



கூண்டில் இருக்கும் குயிலக்கா
கொஞ்சம் என்னைப் பாரக்கா!
வம்பு எதுவும் நான் செய்யேன்
விரும்பி எனக்கு விடைசொல்வாய்!

காக்கை அண்ணனை ஏமாற்றி
கூட்டில் முட்டை இடலாமோ?
தப்பு இதனை அறியாயோ
தயவு செய்து மாறிடுவாய்!

இனிய குரலில் பாடாயோ?
எமக்கு இன்பம் தாராயோ?
சீனி மிட்டாய் தந்திடுவேன்
சீக்கிரம் விடுதலை வழங்கிடுவேன்!

- கோ. பாலதாஸ்,
பாடியுந்தல்.



பின்னால் அமர்வாய்!



சிட்டுக் குருவி வா இங்கே!
சிறிய பொம்மை தருகின்றேன்!
பட்டுப் போன்ற உன்னுடலை
பெற்றுத் தந்தவர் பெயரென்ன?


தென்னை மரத்தின் கிளையினிலே
தினமும் ஊஞ்சல் ஆடுகிறாய்
என்னை உன்னுடன் சேர்த்துக் கொள்
இருவரும் பாடி ஆடிடலாம்!

அம்மா தந்திடும் தின்பண்டம்
அதிலே பங்கும் தந்திடுவேன்
பொம்மை, சைக்கிள் எனக்குண்டு
பின்னால் அமர்வாய் ஓட்டிடுவேன்!

- எஸ். இளங்கோ, (வயது 10),
பொன்மலை.



பார் பார் பார்!



பாயும் புலியின் வீரம் பார்
பந்தயக் குதிரையின் வேகம் பார்
தீய குணங்களின் விளைவைப் பார்
தேனிக் கூட்டத்தின் உழைப்பைப் பார்

சிறிய பாம்பின் எதிர்ப்பைப் பார்
சிலிர்க்கும் சிங்கத்தின் நடையைப் பார்
கரிய காகத்தின் ஒற்றுமை பார்
காட்டு நரியின் தந்திரம் பார்

வண்ண மயிலின் நடனம் பார்
வண்டி மாட்டின் ஒழுங்கைப் பார்
எண்ணம் சிறக்கின் உயர்வைப் பார்
இறைவன் படைப்பின் அதிசயம் பார்

- பி. குமார் (வயது 14),
சேலம் - 6.



வெற்றி தருபவர்!

அரச மரத் தடியிலே!
ஆல மர நிழலிலே!
கருணை வடி வாகவே!
காட்சி யளிக் கின்றவர்!

கல்வி அறிவு செல்வத்தை
கருணை யோடு தருபவர்!
தொல்லை பிணி நீக்கியே
துணையாய் நின்று காப்பவர்!

ஏழை களுக் கினியவர்!
எங்கும் காணக் கிடைப்பவர்!
வேழ முக பிள்ளையார்!
வெற்றி தரும் பிள்ளையார்!

- வே. சுந்தரம், கூடலூர்.



பிருந்தாவனக் கவியரங்கம்

நிலைத்திருக்கும்

வானும் மழையைத் தவறிடலாம்
மண்ணுள் நடுக்கம் ஏற்படலாம்
தேனும் கூடப் புளித்திடலாம்
சிரிப்பும் ஒருநாள் மறைந்திடலாம்

பளிங்குத் தண்ணீர் குளநீரும்
பாசி படிந்து கெட்டிடலாம்
வளங்கள் மிக்க நன்னிலமும்
வறண்டு களராய் மாறிடலாம்

விளங்கும் மாட கூடங்கள்
விழுந்து மண்ணில் புதைந்திடலாம்
உள்ளத்தில் ஊறும் அன்புணர்வே
உயர்ந்து என்றும் நிலைத்திருக்கும்
- சி. ஜெயச்சந்திரன்,
பாடியுந்தல் போஸ்ட்.

படைத்திடு

வண்ண வண்ண மலர்களிங்கு
மலர்ந்து மணம் வீசுது
கண்ணைக் கவரும் வண்ணமாய்
காணப் பூத்துக் குலுங்குது

நீலம், மஞ்சள், சிவப்பெனவே
நல்ல மலர்கள் பூக்குது
கோல எழில் இதனைக்காண
கோடி இன்பம் பொங்குது

பனி தாங்கும் எழில்மலரைப்
படைத்த எங்கள் இறைவனே
இனிப் படைத்தால் எனையுமொரு
இனிய மலராய்ப் படைத்திடு!
- பி. கே. நித்யகல்யாணி,
கடையம்.



பஞ்சம் பசி ஓடும்!

செடிக்கும் உயிருண்டு பாப்பா!
சிரிக்கும் பூக்களடி பாப்பா!
கடுமையைக் காட்டினாலே பாப்பா!
கசிந்தது அழுகுமடி பாப்பா!

தாவரம் மனிதனின் தோழன்
தவறாது நேசித்து வாழ்வாய்
பாவம் மரங்களை அழித்தல்
பதிலுக்கு நாமழிதல் உறுதி.

மழையைக் கொடுத்திடும் காடு
மதியாது அழிப்பது கேடு
விளைந்ததைக் காத்திட ஓடு!
விலகிடும் பஞ்சம் பசி, பாடு!
- செ. கணபதி,
சுருளிப்பட்டு.

ஏற்காடு வாருங்கள்

இயற்கை அன்னை சிரிப்பது
எங்கள் ஊராம் ஏற்காடு
உயர்ந்த மரங்கள் நிறைந்தது
உலகம் புகழும் ஏற்காடு

மலைகள் ஏறிப் பயிற்சிபெற
முதியோர் தங்கி இளைப்பாற
மாலையில் படகை ஓட்டிடவே
மகிழ்ச்சி தந்திடும் ஏற்காடு!

ஏற்காட்டிற்கு வாருங்கள்
எல்லாம் புதுமை காணுங்கள்
மறுத்துப் பேசவே இல்லையென
முழுதும் நீங்களே உணர்வீர்கள்!
- பி. விஜய் சங்கர்,
சென்னை - 2.



பிருந்தாவனக் கவியரங்கம்

கேரம் ஆட வா!



மாயக் கண்ணா அழைக்கிறேனே வாவாவா!
மம்மி எதுவும் சொல்லிடாளே வாவாவா!
வாயைத் திறந்து காட்டிடுவாய் வாவாவா!
வையம் எல்லாம் தெரியுமாமே வாவாவா!

வெண்ணெய் தயிர் வைத்திருக்கேன் வாவாவா!
வேண்டும் வரை தின்றிடலாம் வாவாவா!
உன்னை யாரும் திட்டிடாரே வாவாவா!
உயர்ந்த கீதை தந்தவனே வாவாவா

காளிங்கனைக் கொன்ற கதையைச் சொல் சொல் சொல்
கோவர்த்தனக் குடை பிடித்ததைச் சொல் சொல் சொல்
நாளெல்லாம் கேரம் ஆட வாவாவா
நானுனக்கு சொல்லித்தரேன் வாவாவா!

- என். ராஜலட்சுமி (வயது 13), ஸ்ரீரங்கம்.




தெரியுமா?

பொங்கல் வந்ததே தெரியுமா?
புதுநெல் விளைந்ததே தெரியுமா?
எங்கும் மகிழ்ச்சி தெரியுமா?
எல்லோரும் மகிழ்ந்தது தெரியுமா?

உழைத்த மக்களைத் தெரியுமா?
உழவர்கள் கூடினர் தெரியுமா?
உழைப்பைத் தந்தனர் தெரியுமா?
உலகை உயர்த்தினர் தெரியுமா?

- சி. ராமையா (வயது 10),
சேலம்.




மதுரை

மகிமை மிக்க மதுரை
மன்னர் வாழ்ந்த மதுரை
தமிழ் வளர்த்த மதுரை
தரணி புகழ் மதுரை

வைகை ஆறு ஓடியே
வளம் கொழிக்கும் மதுரை
ஈகை தியாகம் கலைகள்
எல்லாம் நிறைந்த மதுரை

- பா. ராமநாதன்,
சென்னை - 101.



காக்கையார்!


காலை நேரம் கரையுமாம்
கருப்பு வண்ணக் காகமாம்
மாலை கூட்டை அடையுமாம்
மக்கள் தோழன் காகமாம்

ஓரக் கண்ணால் பார்க்குமாம்
ஒடிந்து ஒடிந்து நடக்குமாம்

இரையைக் கண்டால் போதுமாம்
இரைந்து நண்பரை அழைக்குமாம்


தெருவில் கிடக்கும் கழிவையே.
திரட்டி உண்டு களிக்குமாம்!
மறந்து விட்டால் எதனையும்
மகிழ்ச்சி பொங்கத் திருடுமாம்!

- ராதா விஸ்வநாதன்,
சென்னை - 34.





பலே கிண்டன்!
மூலம்: ஆந்திர நாடோடிக் கதை.
தொகுப்பு: ஓர / படம்: ராஜ்
பலே கிண்டன் ஏமாற்றுவதில் வல்லவன். ஒரு நாள்- பல் தேய்க்கும் பிரஷ்ஷை விற்றான்-
பல் தேய்க்கும் பிரஷ் நூறு ரூபாய்!
கூட்டத்தில் ஒருவர்-
ஒரு பிரஷ் நூறு ரூபாயா? அநியாயம்...
இது சாதா பிரஷ் இல்லே இருபது வருஷம் வரும்!
ஒருவர் பிரஷ்ஷை வாங்கினார்-
இருபது வருஷம் வரலேன்னா!
1


பிரஷ்ஷை வாங்கி
என்ன தண்டனை வேணுமானாலும் கொடுங்க! என் வீடுதான் உங்களுக்கு தெரியுமே!
பிரஷ்ஷை வாங்கிய சில நாட்களில்..
ஒரு வாரம் கூட ஆகலே குச்சம் பிஞ்சு போறதே! யாரங்கே கிண்டனை இழுத்து வாங்க!
— கிண்டனிடம்..
இருபது வருஷம் வரும்னு சொன்னே! இரண்டு வாரம் கூட வரலே! பெரிய எத்தனா இருக்கியே!
பிரபு! பிரஷ்ஷை எப்படித் தேய்ச்சீங்க!
என்னா கேள்வி! பேஸ்ட்டை வைச்சி கையிலே பிடிச்சித் தேய்ச்சேன்!
அதானே பார்த்தேன்!


என்னடா சொல்றே?
பிரஷ் இருபது வருஷம் வர–ணும்னா எப்படித் தேய்க்கணும் தெரியுமா?
பிரஷ்ல பேஸ்டை வச்சு, வாய்க்கு நேரா கையில பிடிச்சுக்கணும். கையையோ பிரஷ்ஷையோ அசைக்கவே கூடாது!
அப்புறம் !
வாயைத் திறந்து ஈ...ன்னு வைச்சுக்கிட்டு, பல்லுல பிரஷ் படும்படி செய்துக்கிட்டு...
தலையை ஆட்டி ஆட்டித் தேச்சுக்கணும். பிரஷ்ஷையோ இல்லை கையையோ அசைக்கவே கூடாது.... இப்படிச் செஞ்சால் வரும்!



விடிந்தது!

பள்ளியூர் என்று ஒரு கிராமம். பெயர் அழகாக இருந்தாலும், பெயருக்கேற்ப அந்த ஊரில் ஒரு பள்ளிகூட இல்லை! இதற்குக் காரணம் அந்த ஊர் பண்ணையார்தான். அவர் படிக்காதவர். கல்வியின் அவசியத்தை அறியாதவர். அதனால், அந்த ஊரில் ஒரு சிறிய பள்ளியைத் தொடங்கக்கூட அவர் ஆர்வம் காட்டவில்லை. அப்படித் தொடங்க வந்தவர்களுக்கும் ஒத்துழைப்புத் தரவில்லை. பண்ணையாரைப் பகைத்துக் கொள்ள யாரும் விரும்பாததால், பள்ளியூர் பள்ளி இல்லாத ஊராகவே இருந்தது!

பண்ணையாரின் ஒரே மகன் கந்தசாமி. அவனுக்குக் கற்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. தங்கள் ஊரில் ஒரு ஆரம்பப் பள்ளிகூட இல்லையே என்று அவனுக்குத் தாங்க முடியாத வருத்தம். எப்படியாவது தந்தையின் மனத்தை மாற்றி, பள்ளியூரில் ஒரு பள்ளியைத் தொடங்க வைக்க வேண்டும் என்று அவன் முயன்றான்.

ஒருநாள் சென்னையில் இருந்து பண்ணையாருக்கு ஒரு தந்தி வந்தது. தந்தி வந்த போது அவர் வீட்டில் இல்லை. இருந்திருந்தால் தந்திச் சேவகனையே தந்தியைப் படித்துச் சொல்லும்படி கேட்டிருப்பார். வெளியில் இருந்து திரும்பியதும் தந்தி வந்திருப்பது தெரிந்தது. மகன் கந்தசாமியை அழைத்துக் கூறினார்.

''ஆமாம், இந்த ஊரில் யாரை நீங்கள் படிக்க அனுமதித்தீங்க? நீங்கள் படிக்கலேங்கறதுக்காக என்னையும் படிக்க வேண்டாம்னுட்டீங்க. இப்ப இந்தத் தந்தியைப் படிச்சு சொல்லக்கூட இந்த ஊரில் ஒரு படிப்பாளி இல்லையே!'' என்றான் கந்தசாமி.

கணக்குப் பிள்ளை வீட்டுக்கு இருவரும் போனார்கள். அவருக்கு ''மெட்ராஸ் ஐ''. கண்களைத் திறந்து பார்க்கக்கூட முடியவில்லை!

''பண்ணையாரே... ஒரு படிச்சவன் கூட இந்த ஊர்ல இல்லையே....! ஒரு ஆரம்பப் பள்ளி திறக்கக்கூட நீங்க ஒத்துழைப்புத் தர மாட்டேங்கறீங்களே!'' என்று அரற்றினார் கணக்குப்பிள்ளை.

வந்திருக்கும் தந்தியைப் படித்துச் சொல்லக்கூட ஒரு படித்தவன் இல்லாமல் ஊரை அறியாமையில் மூழ்க வைத்திருப்பதன் விளைவைப் பண்ணையார் உணர்ந்தார்.


''கந்தசாமி, இனிமே முதல் வேலை, நம்ம ஊருக்குப் பள்ளிக்கூடம்தான்'' என்றார் பண்ணையார் மகனிடம்.

''அப்ப தந்தியை இங்க கொண்டாங்க நான் படிச்சு சொல்றேன்'' என்றான் கந்தசாமி.

பண்ணையார் மகனை வியப்புடன் நோக்கினார்.

''உங்களுக்குத் தெரியாம நான் எழுதப் படிக்க இரகசியமா கத்துக்கிட்டேன். தந்தியில நல்ல செய்திதான். நம்ம பெரியப்பா மகளுக்குத் திருமணம் நிச்சயமாயிருக்காம். உடனே கிளம்பி வரச் சொல்லியிருக்காங்க.'' என்றான் கந்தசாமி சிரித்துக்கொண்டே.

- அ.கு. பாலசுப்ரமணி, அடூர்.



அட்டைக்கு இருதயம் உண்டா?

கன்றுக்குட்டி விடாமல் கத்திக் கொண்டிருந்தது. அம்மாப் பசு நாவால் நக்கி அதை சமாதானப்படுத்த முயன்று தோல்வியுற்றது.

முரளியின் அம்மா உள்ளேயிருந்து வந்து, கன்றுக் குட்டியைத் தட்டிக் கொடுத்துப் பார்த்தாள். கன்று வேதனையோடு கத்துவது நிற்கவில்லை!

''முரளி, கன்றுக்குட்டி என்னமோ இப்படி வேதனைக் குரல் கொடுத்து அழுற மாதிரி கத்துதே! உனக்குக் கேட்கலே? மனசு கஷ்டப்படலே? உனக்கு இருதயமே இல்லையாடா?'' என்று கேட்டாள் அம்மா.

கன்றுக் குட்டியின் வலது காதில் மேல் பக்கம் ஒட்டிக் கொண்டிருந்த அட்டை, கீழ்ப் பக்கம் ஒட்டிக் கொண்டிருந்த அட்டையிடம் கேட்டது.

''அந்த அம்மா இதயம் இருக்கான்னு பையனைப் பார்த்துக் கேட்கிறாங்களே... இது நம்மைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி. நமக்குத்தானே இதயம் இல்லை!''

''நல்ல வேடிக்கை அண்ணே... நமக்கு மட்டும் மற்ற உயிர்களுக்கு இருப்பது போல் இதயம் மட்டும் இருந்தது... மனிதர்கள் சும்மா விட மாட்டார்கள். நம்மைப் பிடித்து வேக வைத்துத் தின்று விடுவாங்க. இந்த வரை ஆண்டவன் தோலினாலேயே சுவாசிக்கும் வசதியைத் தந்திருக்கிறானே.''

''உனக்குத் தெரியுமா... குட்டையில இருந்த நம்ம இனத்தார்களில் பலரை அந்தப் பரிசோதனைக்காரன் வந்து புடிச்சுக்கிட்டுப் போயிட்டான்?''

''அதான் பாதிப் பேருக்கு மேல் காணலையா? நம்மைப் புடிச்சிக்கிட்டுப் போய் அவன் என்ன செய்யறான்!''

''நாம, நம்ம முன் உறிஞ்சியால் ஏதாவது பிராணியின் உடம்பைப் புடிச்சு ஏறிக்கிடறோம் இல்லையா? இது நீளவாட்டத்தில் சின்னக் கிண்ணம் மாதிரித்தானே இருக்குது? இதை, பிடிப்பட்ட பிராணியின் தோலில் தட்டையா பதிய வைத்து அழுத்தித் தூக்கிடறோம். அதனால் அங்கே அழுத்தக் குறைவு ஏற்பட்டு நம்ம உறிஞ்சி கெட்டியா ஒட்டிக்குது. முன்னுறிஞ்சி வாயில் உள்ள பற்களால் காயப்படுத்தி, இரத்தத்தை உறிஞ்சறோம் இல்லையா? நாம உறிஞ்சற இரத்தம் உறைந்து போகாமல் இருக்க நம்ம உமிழ்நீரில் ஹிருடின் என்ற ஒரு சத்து சுரக்கிறதாம். இந்த சத்துக்காக நம்மைப் புடிச்சுக்கிட்டுப் போறாங்க. நம்மிடமிருந்து இந்த ஹிருடினை எடுத்து, ரணசிகிச்சை செய்யும் போது

ரேவதி

இரத்தம் உறைவதைத் தடுக்க ஊசி போடறாங்களாம்.''

''சரி, நீ போதிய அளவுக்கு இரத்தம் குடிச்சிட்டியா? எனக்குப் போதும்.''

''நானும் நல்லா குடிச்சிட்டேன். இனிமே பத்துப் பன்னிரண்டு மாதம் வரை கவலை இல்லை.''

''அப்ப, இங்கேயே நம்ம பிடியை விட்டு விழுந்துடலாமா?''

''வேண்டாம். விஷயம் தெரிஞ்சவங்க யாராவது கண்டுபுடிச்சிட்டாங்கன்னா உயிருக்கே ஆபத்து. இப்படியே காதுக்குள்ளே ஊர்ந்து போயிடுவோம். கன்றுக் குட்டியைக் கழுவ எப்படியும் குட்டைக்கு நாளைக்குக் கொண்டு போவாங்க. அப்ப வெளியே வந்து நம்ம இடத்துக்குப் போய்டலாம் அண்ணே.''

''இந்த உறவு முறையெல்லாம் மனிதங்க கிட்டதான். நம் இனத்தில் ஆண் பெண் என்ற வித்தியாசமே இல்லை. சும்மா ஏன் அண்ணே அண்ணேன்னு கூப்பிட்டுக் கோமாளியாறே?''

இரண்டு அட்டைகளும் ஊர்ந்து கன்றுக் குட்டியின் காதிற்குள் சென்றுவிட்டன! மெல்லிய அதன் தோல், அட்டைகளின் நெருடலைத் தாங்க முடியாது. அதைத் தவிக்க வைத்தது. வேதனை தாங்காது, நிலை கொள்ளாது துள்ளிக் குதித்தது கன்று. தாயிடம் விட்டாலும் பால் குடிக்காது தவித்து இங்குமங்கும் ஓடியது.

முரளி சென்று கால்நடை மருத்துவரை அழைத்து வந்தான். கீழே அமர்ந்து கன்றுக் குட்டியை மார்போடு அணைத்துக் கொண்டு பரிசோதித்தார் அவர்.


''கன்றுக் குட்டிக்கு நோய் ஏதுமில்லை.''

''பின்னே ஏன் சார் இப்படிப் பிடி கொடுக்காது தவிக்கிறது?'' என்று கவலையோடு கேட்டான் முரளி.

''அதுதான் எனக்கும் புரியலே,'' என்று திகைத்த டாக்டர், ''முரளி, எப்பத்தில் இருந்து இது இப்படி நிலை கொள்ளாமல் தவிக்கிறது?'' என்று கேட்டார்.

''மேய்ச்சலில் இருந்து திரும்பும் வரை சரியாகத்தான் இருந்தது சார். அது திரும்பி வந்ததும், அம்மா, அதைத் தேய்த்துக் குளிப்பாட்டி வரும்படி கந்தப்பனிடம் சொன்னாங்க. அங்கே போயிட்டு வந்ததில் இருந்துதான் இது இப்படித் தவிக்குது!''

''கந்தப்பன் கன்றுக் குட்டியை எங்கே குளிப்பாட்டினான்? வயல் வெளிக் கிணற்றிலா?''





''இல்லை சார். தெற்குப் பட்டிக் குட்டையில சார். அதுதானே பக்கத்தில் இருக்கு?''

கன்றைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி விட்டு அதன் உடலை அங் குலம் அங்குலமாக விரலால் மயிர்க் கால்களைப் பிரித்துப் பிரித்து ஆராய்ந் தார் டாக்டர். வால் குஞ்சத்தையும் பிரித்துப் பார்த்தார். கன்றுக்குட்டியின் மூக்கில் விரலை நுழைத்துப் பார்த்தார். கன்று தும்மியது.

பூதக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு காது மடலைப் பிரித்து, இழுத்து உள்ளே நோக்கினார். ''டார்ச் இருந்தால் கொண்டு வா'' என்று பணித்தார்.

''இந்த கால்நடை டாக்டர் பொல் லாதவர். நம்மைக் கண்டுபிடித்து விட் டால் அவ்வளவுதான்'' என்றது அட்டைகளில் ஒன்று.

''கெட்டியாப் புடிச்சுக்க. நாமும் இயன்றவரை போராடிப் பார்ப் போம்!'' என்றது இரண்டாவது அட்டை.

இதற்குள் டார்ச் வெளிச்சம் உள்ளே விழுந்தது. அட்டைகள் இரண்டும் இன்னும் உள்ளே நகர்ந்தன. ஆனாலும் டாக்டர் அவைகளைப் பார்த்து விட் டார்.

''முரளி, என் பையில் இருந்து முள் இடுக்கியை எடு. உள்ளே அட்டை இருக்கிறது.''

முள் இடுக்கியை நுழைத்து ஒரு அட்டையைப் பிடித்து இழுத்துப் பார்த் தார். அட்டையின் பிடிப்பு கெட்டியாக இருந்தது. அதோடு கன்றுக் குட்டியின் காதில் இருந்தது மிக மென்மையான தோல் அல்லவா. டாக்டர் அட்டையை இழுத்ததும், தோலும் இழுபட்டது. சதையே பிய்ந்து வந்து விடும் போல் இருந்தது! கன்று வலிதாங்காது திமிறிக் கத்திக் குதித்தது.

''இடுக்கியில் இழுத்தால் கூட சதையோடு பிய்க்கும்படி இருக் கிறதே...! அட்டை எப்படி நகர்ந்து சென்றது?'' என்று வியப்புடன் கேட் டான் முரளி.

''வாயில் ஒரு கிண்ணத்தை

வைத்துக் கொண்டு காற்றை உறிஞ்சி எடுத்து விட்டால், இன்னும் கெட்டியாக நம் வாயில் ஒட்டிக் கொள்வதில்லை... அதே தத்துவம்தான். அட்டை வெளியே இருந்தால், அதன் ஒரு பக்கத்தின் அடியில் சின்னக் குச்சியைத் துருத்தி, காற்றுப்புக வைத்து விட்டால் பிடிமானம் இன்றி விழுந்து விடும். குச்சியைத் துருத்தக் கூட இடம் விடாது தடுக்கும் பயங்கர அட்டைகளும் உண்டு.''

''அந்த மாதிரி அட்டைகளை எப்படி எடுப்பீங்க?''

''இதோ... அதே முறையைப் பயன்படுத்தித்தான் இந்த அட்டைகளை இப்ப எடுக்கப் போறேன்!''

டாக்டர் தன் பெட்டியில் இருந்து ஒரு சிறிய டப்பாவை எடுத்தார். அதிலிருந்து காப்பிப் பொடி வண்ணத்தில் ஒரு பொடியை இரண்டு மூன்று சிமிட்டா எடுத்து, ஒரு கொட்டாங்குச்சியில் போட்டு, நீரை விட்டுக் கலக்கினார். ஒரு நீண்ட இங்க் ஃபில்லரில் அதை எடுத்து, கன்றின் காதில், அட்டை இருந்த இடத்தில் இரண்டு மூன்று சொட்டு விட்டார். பிறகு முள் இடுக்கியால் பிடித்தார். இப்பொழுது இரண்டு அட்டைகளும் எளிதாக வந்து விட்டன!

''மூக்குப் பொடி நெடி அடிக்கிறதே!'' என்றாள் அம்மா.

டாக்டர் சிரித்தார்.

''நான் இங்க் ஃபில்லரில் எடுத்து விட்டது மூக்குப் பொடி கலந்த நீரைத்தான். அட்டைகளுக்கு நிகோடின் என்றால் அலர்ஜி'' என்று கூறி விட்டு எழுந்த டாக்டர், ''தெற்குப் பட்டிக் குட்டையில் அட்டைகள் இருக்கு போல இருக்கு. கன்று அங்கே போனபோது அட்டைகள் அதன் காதில் தொற்றிக் கொண்டு புகுந்து விட்டன. அதுதான் கன்று அப்படி வேதனைப் பட்டுத் தவித்திருக்கு. இனி பயமில்லை. இந்தவரை காதில் ஏறியதுடன் விட்டதே. மூக்கில் ஏறியிருந்தால் கன்றுக் குட்டியின் உயிருக்கே கூட ஆபத்து ஏற்பட்டிருக்கும்,'' என்று கிளம்பினார்.

''குட்டையில் 'அட்டைகள் ஜாக்கிரதை'ன்னு ஒரு போர்டு எழுதி வைக்கிறேன்'' என்றான் முரளி.

எல்லோரும் சிரித்தனர்.

அறிவியல் உண்மைகள்

★ அட்டைக்கு இருதயம் கிடையாது. தோல் செல்களுக்கிடையே ஓடும் நுண் குழாய்கள் வழியாகவே இது சுவாசிக்கிறது.

★ இதன் உணவு இரத்தம். இரத்தத்தை உறையச் செய்யாது தடுக்கும் ஹருடின் சத்து இதன் உறிஞ்சிப் பாகத்தில் சுரக்கிறது. ரணசிகிச்சையின் போது இது பெரிதும் பயன்படுகிறது.

★ குளம் குட்டைகளில் புழு, பூச்சி, லார்வா, அழுக்குகளையே உண்டு வாழும் அட்டை இனமும் உண்டு. ஆனால் முக்கிய உணவு இரத்தமே.


★ புகையிலையில் உள்ள நிகோடின் இதற்கு அலர்ஜி!

★ அட்டை ஒரு இருபால் உயிர். ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கும்.

★ ஒருமுறை இரத்தத்தை உறிஞ்சினால் பத்துப் பன்னிரண்டு மாதங்கள் கூட உணவின்றித் தாக்குப் பிடிக்கும்.

★ அட்டைக்கு ஐந்து ஜோடிக் கண்கள் உண்டு. இதன் உடல் நெடுகிலும், ஏராளமான மடிப்புகளும் 33 வளையங்களும் இருக்கும்.

★ அட்டை நன்றாக உடலை முன்னுக்குத் தள்ளி நீந்தும்.



வாய்மூடா வளவன்!



தடுக்கி விழுந்தான் பட்டணத்தை ஓர் அசட்டு ராஜா ஆண்டு வந்தார். அவருக்குப் பெயர் என்ன தெரியுமா? வாய் மூடா வளவன்! பெயரில் இருந்தே ராஜா எப்படிப்பட்டவர் என் பதை நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

ராஜாவின் சொந்தப் பெயர் 'தவிடு பொடி நாயகர் தங்கவேல் வளவர்!' ஆனால், தனக்கு இப்படி ஒரு பெயர் இருப்பதை ராஜாவே கூட மறந்திருக் கலாம். அந்த அளவுக்கு செல்லப் பெயரே, சொந்தப் பெயரை மறைத்து விட்டது! இன்னும் கூறப் போனால் அந்தப் பெயரைக் கூறி யாராவது அழைத்தால் யாருக்குமே தெரியாது. செல்லப் பெயரைச் சொன்னால்தான் தெரியும்.

வாய்க்கு ஓய்வு கொடுக்காது சதா சர்வகாலமும் தின்றபடி இருந்ததால் ராஜாவுக்கு பெரிய தொப்பை போட்டு விட்டது! 'காலையில் நடங்கள், நீச்ச லடியுங்கள், தொப்பை குறையும்' என்று தலைமை வைத்தியர் பலமுறை கூறிப் பார்த்தார். ராஜா அதைக் கேட்கவில்லை!

அதன் பலன் என்னவாச்சு தெரி யுமா? பட்டத்துக் குதிரை அவருக்குப் போதவில்லை. பரம்பரையாக முன் னோர்கள் அமர்ந்து ஆட்சி செய்த சிங்காதனத்தில் அவருக்கு உட்கார இடம் போதவில்லை! இரண்டு குதிரை கள் இழுத்த தேரை நான்கு குதிரைகள் சேர்ந்து இழுக்கும்படி ஆயிற்று. இத் தனை ஆன பிறகும் அவர் தொடர்ந்து வாய் மூடா வளவனாகவே இருந்து வந்தார்.

சின்னபாபு

அரசர் வாய்மூடா வளவனின் மூடாத வாய் எத்தனை புகழ் பெற்றதோ, அதைவிடப் பல மடங்கு புகழ் பெற்றது அவரது தும்மல்! அவர் தும்மத் தொடங்கினால் தொடர்ந்து ஐந்து தும்மல் போடுவார். ஐந்தும் படு அதிர்ச்சியாக, தூக்கிவாரிப் போட்டு மிரளும்படி இருக்கும்.

ஒருமுறை வாய்மூடா வளவனார் போருக்குப் போகும்படி இருந்தது. இரண்டு படைகளும் அணிவகுத்து எதிர் எதிரே மோதிக் கொள்ளத் தயாராக இருந்தன. பகை மன்னரின் சேனை, வீரத்துடன் ஒப்பிடுகையில், ராஜாவின் சேனையும் வீரமும் தூசு தான்! அது வாய்மூடா... க்கும் தெரியும் அவருக்குப் போர்க்களம் போகவே விருப்பமில்லை. இரண்டு வண்டிகள் நிறைய பலகார வகைகளைப் பண்ணி எடுத்துக் கொண்டு, இரவோடு இரவாகத் தலை நகரை விட்டு ஓடிப்போக இருந்தார். அமைச்சரும் தளபதியும் பிடித்து இழுத்து வந்தார்கள். ராஜாவைக் குண்டுக் கட்டாகக் குதிரையில் கட்டி போர்க்களத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

தாக்குதலைத் தொடங்கப் போகும் போது, எதிர் பாராத விதமாக ராஜா புகழ் பெற்ற தனது தும்மலைப் போட்டார். அவ்வளவுதான்!

ராஜாவின் சேனைகளுக்கும், குதிரை யானைகளுக்கும் அவரது தும்மல் புதிதல்ல. ஆனால், பகையரசனின் படைகளுக்கு அப்படியல்லவே. அவை அதிர்ந்து ஒடுங்கித் திகைத்தன! குறிப்பாகப் பகையரசரின் யானையும், தளபதியின் குதிரையும் பீதியடைந்தன. அவ்வளவுதான், பாகன் எவ்வளவு அடக்கியும் கட்டுப்படாது, பட்டத்து யானை பயங்கரமாகப் பிளிறி, திரும்பி ஓடத் தொடங்கியது.

தன்பக்கப் படையினருக்கு ஒரு சிறிதும் இழப்பு இல்லாது வாய்.....ன் மகத்தான வெற்றி பெற்று சாதனை படைத்தார்!

ஒருமுறை வாய்.....ன் வேட்டையாடக் கிளம்பினார். அவரைச் சுமந்து கொண்டு குதிரையால் வெகுதூரம் போக முடியவில்லை. மற்ற குதிரைகள் அவர் ஏற அருகில் வந்ததும் ஓட்டம் பிடித்தன. வேறு வழியில்லாமல் ராஜா ஒரு பார வண்டியைக் கொண்டு வரச் சொல்லி அதில் ஏறிக் காட்டுக்குப் போனார். காட்டு வழியில் பாதி தூரம் போன பிறகு வாய்...னுக்கு தும்மல் வந்து விட்டது. அவ்வளவுதான், மிரண்டுபோன பார வண்டியின் மாடுகள் தலைதெறிக்க ஓடத் தொடங்கின.

''மகாராஜா, நீங்களும் குதிச்சுடுங்க!'' என்று கத்தினான் அவன். வண்டி நின்று கொண்டிருக்கும் போதே இறங்கத் தடுமாறும் வாய்.....னால் ஓடும் வண்டியிலிருந்து குதிக்க எப்படி முடியும்? உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மகாராஜா வண்டிக்குள் கெட்டியாக உட்கார்ந்து கொண்டார்! மாடுகள் தலைதெறிக்க ஓடின. மேடு பள்ளங்களில் ஏறி இறங்கித் தாண்டிய போது வண்டிக்குள் இருந்த ராஜா தவலைக்குள் சிக்கிக் கொண்ட பந்தாக அலைக்கழிக்கப்பட்டார். கால்கள் வலியெடுத்து சோர்வு தட்டும் வரை ஓடிய மாடுகள் ஓரிடத்தில் நின்றன. மகாராஜா மெதுவாகக் கீழே இறங்கிக் கொண்டார்.

அந்த இடம் காட்டின் ஒரு அடர்ந்த பகுதி. அங்கே கிராமத்துச் சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள். பொழுது போக்குக்காக அவர்கள் நொண்டியடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். மகாராஜா வாய்.....ன்



அவர்களிடம் போனார்.


சிறுவர்கள் பார்த்த பிறகும் கூட ராஜாவை யாரும் சட்டை செய்யவே இல்லை. விளையாட்டில் மும்முரமாக இருந்தனர்.

பொறுமை இழந்த ராஜா, ''டேய் பையங்களா... நான் யார் தெரியுமா? இந்த நாட்டின் ராஜா'' என்று சுய அறிமுகம் செய்து கொண்டார்.

''அதனால எங்களுக்கு என்ன வந்தது? நொண்டி ஆடற இடத்துல குறுக்கே நிக்காதே. அப்படி ஓரமா மரத்தடிக்குப் போய்க்க'' என்றான் நொண்டியடித்து நண்பர்களைப் பிடித்துக் கொண்டிருந்த சிறுவன்.

ராஜாவால் எதுவும் பேசிக் கொள்ள முடியவில்லை. வேறு வழியில்லாமல் ஓரமாகப் போய் மரத்





''பால் வியாபாரம் எப்படி? பரவாயில்லையா?''

''மாட்டின் சொந்தக்காரன் கண்ணில் படாதவரை பரவாயில்லை!''

- ஏ. ஹரிகிருஷ்ணன்

தடியில் உட்கார்ந்து கொண்டார். ராஜாவுக்குப் பசித்தது.

''தம்பி.... எனக்குப் பசிக்கிறது.....'' என்றார் நொண்டியடித்த சிறுவனிடம்.

''எங்களுக்குக் கூடத்தான் பசிக்கிறது. இன்னும் கொஞ்ச நேரம் போனால் எங்க அக்கா கஞ்சி எடுத்துவரும்'' என்றான் சிறுவன்.

''ரொம்ப நேரம் ஆகுமா?'' என்றார் ராஜா.

சிறுவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்னமோ கஞ்சி உங்களுக்காக வருகிறது போல கேட்கிறீங்களே! வரப்போற கஞ்சி எங்களுக்காக'' என்றான் ஒரு சிறுவன்.

இதற்குள் அவர்கள் அக்கா ஒரு பெரிய பானையில் கஞ்சியுடன் வந்துவிட்டாள். விளையாட்டை நிறுத்திவிட்டு சிறுவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். பானையில் இருந்த கூழைக் கலக்கி, ஒரு இலை மடக்கில் ஊற்றி, தொட்டுக் கொள்ள ஒரு துண்டம் மாங்காய் ஊறுகாயையும் வைத்தாள் அக்கா. எல்லோரும் எடுத்துக் கொண்டனர். ராஜாவுக்கு மட்டும் தரவில்லை! அப்புறம்தான் ராஜா இருப்பதை அக்கா கவனித்தாள்.

''யாருங்க நீங்க!''

''இந்த நாட்டின் மகாராஜா... எனக்குப் பசிக்கிறது. எனக்கும் கூழ் கொடேன்'' - ராஜா பரிதாபமாகக் கேட்டார்.

''இவருக்குக் கொடுத்தால் எங்க பங்கு குறைஞ்சிடுமே....?'' என்று மறுப்பு எழுப்பினான் ஒரு சிறுவன்.

''எங்களோட நொண்டி ஆட வருவியா?''

''வரேன் தம்பி. சின்ன வயசுல நொண்டி ஆடினதுதான். நான் ராஜ பரம்பரைங்கறதால என்னை மற்றவர்களோட நொண்டி ஆட அனுமதிக்க மாட்டாங்க. இப்ப உங்களோட ஆடறேன்.''

''நொண்டி ஆட்டத்துல தோத்துப் போயிட்டால் என்ன தண்டனை தெரியுமா? எங்க எல்லோரையும் ஒவ்வொருத்தரா முதுகில் பச்சைக் குதிரை தூக்கிக்கிட்டு, இந்தப் பத்து மரத்தையும் சுத்திக்கிட்டு வரணும்.''

ராஜா ஒரு கணம் யோசித்தார்.

''ஒரு வேளை நான் ஜெயிச்சிட்டா.... என்ன செய்வீங்க?'' என்று கேட்டார் ராஜா.

அந்த பயங்கரத்தைக் கற்பனை செய்தபோதே சிறுவர்கள் கலங்கினர்.

''இந்த ஆள் பீப்பாய் கணக்கா இருக்கார். இவரைப் பச்சைக் குதிரை சுமக்கிறவன் செத்தான். எனக்கு வேண்டாம்பா நொண்டியாட்டம்'' என்று விலகிக் கொண்டான் ஒரு சிறுவன்.

''முதல்ல கூழ் கொடும்மா, பசி பயங்கரமா இருக்கு'' என்று கையேந்தினார் ராஜா.

அக்கா, கூழை இலைமடக்கில் ஊற்றிக் கொடுத்தாள்.

''நீங்க நொண்டி ஆட்டத்துல தோத்துட்டா, இனிமே எந்தப் படிக்கட்டிலும் நீங்க நேராக ஏறி இறங்கக் கூடாது. பின்பக்கமாத் திரும்பித்தான் ஏறணும் இறங்கணும். அதே மாதிரி இவங்களும் இருக்கணும்'' என்று யோசனை கூறினாள் அக்கா.

எல்லோருக்கும் அது பிடித்திருந்தது. நிபந்தனையைத் தன் கைப்பட எழுதி அக்காவிடம் கொடுத்தார் ராஜா. இன்னும் கொஞ்சம் கூழ் கிடைத்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு நொண்டியாட்டம் ஆரம்பமானது.

தொப்பை குலுங்க ராஜா நொண்டியடித்த காட்சி எல்லோருக்கும் சிரிப்பை வரவழைத்தது. அவரால் ஒரு சிறுவனைக்கூடத் தொட முடியவில்லை! மூச்சு வாங்கியது. தோற்றுப் போனார்.

இதற்குள் பணியாட்கள் குதிரையோடு ராஜாவைத் தேடி வந்து

விட்டனர். ''நிபந்தனையை மீறக் கூடாது. ஜாக்கிரதை'' என்று எல்லோரும் ராஜாவை வழியனுப்பி வைத்தனர்.

அரண்மனை வாசலில் எல்லோரும் கவலையுடன் காத்திருந்தனர்! ராஜா இறங்கி படியேறப் போனார். நிபந்தனை நினைவுக்கு வந்தது. பின்னால் திரும்பி நின்றபடி அரண்மனையின் இருபது படிகளையும் தட்டுத்தடுமாறி ஏறிவந்தார்! மூச்சு வாங்கியது. ராஜாவுக்குப் பசி எடுத்தது. படிகளில் இறங்கி சமையல் கூடத்திற்குப் போனார். நிபந்தனை நினைப்பு வந்தது. திரும்பி நின்று இறங்கினார். சிங்காதனத்தில் ஏறி இறங்கும் போதும் இதே மாதிரிதான்! கோவிலுக்குப் போனால் கூட ராஜா கோவில் படிகளில் இப்படித்தான் பின்னால் திரும்பியபடி ஏறினார்; இறங்கினார்!

அரசியாரும், அமைச்சரும் ராஜாவிடம் காரணம் கேட்டனர். ''இப்படி இருக்கும்படி ஒரு முனிவர் கூறியிருக்கிறார். இது ஒரு விரதமாம்'' என்று புளுகினார் ராஜா. அதோடு அரண்மனையிலும் சரி, தான் செல்லும் இடங்களிலும் சரி, எங்குமே படிக்கட்டு இருக்கக் கூடாது என்று உத்தரவிட்டார். வேலைப்பாடுமிக்க அரண்மனை, அரச மாளிகை, மண்டபங்களின் படிக்கட்டுகளை இடிக்கச் சொல்லி ஆணை பிறப்பித்தார்!

அமைச்சருக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தத் திடீர் மாற்றம் வேட்டையில் இருந்து திரும்பிய பிறகுதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர் அறிந்து கொண்டார். காட்டில் ராஜா தங்கியிருந்த இடத்தைக் கண்டு பிடித்து மாடு மேய்த்த சிறுவர்கள், அவர்கள் அக்காவைக் கண்டு பேசினார். அக்கா நேராக அமைச்சருடன் அரண்மனைக்கு வந்தாள்.

அக்காவைக் கண்டதும் ராஜா திகைத்துப் போனார்.

''உங்களுக்கு அளவுக்கு மீறிய தொப்பை இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத் தானே நான் இப்படி ஒரு தந்திரம் செய்தேன்?'' என்றாள் அக்கா.

''அப்படியா!'' என்று வியந்தார் ராஜா.

''ஆமாம் மகாராஜா. இந்த ஒரு வாரத்திலேயே உங்கள் தொப்பை கணிசமாகக் குறைந்துவிட்டது'' என்றார் அரசியார்.

''உங்களுக்குத் தொப்பை குறைந்து விட்டது. இப்பொழுது நொண்டியாட்டம் ஆடினால் என் தம்பிகளை எளிதில் ஜெயித்து விடலாம். நிபந்தனை காலாவதி ஆகிவிடும். அப்படியும் உங்களால் முடியவில்லை என்றால், திறந்த பல்லக்கில் ஏறி படிகளைக் கடந்து போங்கள். இதற்காக அரண்மனை மாளிகைகளை இடிக்கலாமா?'' என்று கேட்டாள் அக்கா.

''எனக்குச் சரியான மருமகள் நீதான், அடுத்த வாரமே திருமணம்'' என்றார் ராணியார்.


எல்லாரும் சிரித்தனர்.

சூரியனா? சந்திரனா?

ஒரு முறை நண்பர் ஒருவர், முல்லாவைச் சந்தித்து, '''சூரியன்', 'சந்திரன்', இவ்விரண்டில் சிறந்தது எது?'' என்று கேட்டார். அதற்கு முல்லா, ''இதிலென்ன சந்தேகம் சந்திரன்தான் சிறந்தது'' என்றார். திகைப்படைந்த நண்பர் முல்லா இவ்வாறு விடை அளித்ததற்குக் காரணத்தைக் கேட்டார். அதற்கு முல்லா, ''சூரியன் பகலில்தான் ஒளியைத் தருகிறது. ஆனால், சந்திரனோ, இரவில் எங்கும் இருட்டாக இருக்கும்போது ஒளியைத் தருகிறதே?'' என்று திருப்பிக் கேட்டாரே பார்க்கலாம்!



- கண்ணன் ராம்ஜோதி



✱ பெ. முருகன், கடுக்கரை.

? நீர்க்கடுப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம், டாக்டர்? அது ஏற்பட்டால் உடனே நிவாரணம் பெறுவதற்கு வழி சொல் லுங்கள், ப்ளீஸ்!

! சிறுநீர்ப்பாதையில் உண்டாகும் நோய்த்தொற்று காரணமாகவும், கல் அடைப்பு காரணமாகவும் நீர்க்கடுப்பு வரலாம். சிறுநீர்ப்புற வழியை (Urethra) சுத்தமாகப் பராமரிக்கத் தவறினால், சிறு நீர்ப்பாதையில் புண் உண்டாகி நீர்க்கடுப்பு ஏற்படலாம். வெகுதூரம் பயணம் செய்யும் பொழுது நேரத்தோடு சிறுநீர் கழிக்க இய லாமல் போகலாம். அச்சமயங்களில் சிறு நீர்ப் பையில் அதிக நேரம் சிறுநீர் தங்க நேரிடும். இதனால் சிறுநீரின் அடர்த்தி அதிகமாகி, சிறுநீர்ப்பையை அரிப்பதால், நீர்க்கடுப்பு உண்டாகும். கோடை காலத் தில் நிலவும் அதிக வெப்பத்தால் உடம் பில் வியர்வை அதிகமாக சுரக்கும்; அதே சமயம் சிறுநீரின் அளவு குறைந்து விடும். இம்மாதிரியான சமயங்களில் தேவையான அளவுக்கு தண்ணீரையோ, திரவ பானங் களையோ பருகாவிட்டால் நீர்க்கடுப்பு தோன்றலாம்! நீர்க்கடுப்பிலிருந்து நிவா ரணம் பெறுவதற்கு எளிய வழி திரவ உணவுகளை அதிகமாகச் சேர்த்துக் கொள் வதுதான்! பால், மோர், இளநீர், பதநீர், பழச்சாறு, பார்லிக் கஞ்சி, குளுக்கோஸ் கரைந்த தண்ணீர் போன்றவற்றை தாராள மாகச் சாப்பிட வேண்டும். மீண்டும் மீண் டும் நீர்க்கடுப்பு வந்தால், சிறுநீரை பரிசோ தித்து, வேறு நோய் உள்ளதா என்பதை அறிந்து மருந்துவம் பெற வேண்டும். சரியா, முருகன்?

✱ ல. ஸ்ரீவித்யா, கோயம்புத்தூர்.

? சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்குக் காயம் ஏற்பட்டால் எளிதில் ஆறுவ தில்லை! அது ஏன் டாக்டர்?

! சர்க்கரை வியாதி உள்ளவர்களின் இரத்தத்தின் குளுக்கோஸ் என்ற சர்க்கரை யின் அளவு மிக அதிகமாக இருக்கும். இந்த அளவுக்கு மீறிய சர்க்கரை, அவர்க ளுடைய இரத்தக் குழாய்களையும், நரம்பு களையும் சிதைத்து விடும். இதனால் காயம் எளிதில் ஆறுவதில்லை. மேலும் காயத்திலிருக்கும் கிருமிகள் அளவுக்கு அதிகமாக இருக்கும் சர்க்கரையை உண்டு, பல்கிப்பெருகும். இதனாலும் சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு காயம் ஆறு வதில் தாமதமேற்படும்.

✱ வி.கே. குமரேசன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

? தீயினால் சுட்ட இடத்தில்

தண்ணீரைத் தெளித்தால் ஆபத்துதானே, டாக்டர்?

! ஆபத்தில்லை, குமரேசன்! தீப் புண்ணில் தண்ணீரை விட்டதும் வெப்பம் குறைந்து விடுமல்லவா? அதனால் தீப் புண்ணால் ஏற்படும் பாதிப்பு நமக்கு குறையத்தான் செய்யும்!

✱ காகை ஜெ. ரவிக்குமார், காங்கேயம் - 1.

? என் தொடைச்சந்தில் இருபக்கமும் தடிப்பாக உள்ளது. அரிக்கிறது. சொறிந்தால் எறிகிறது. மருந்துக் கடைகளில் களிம்பு வாங்கிப் போட்டும் பயனில்லை. நீங்கள் தான் இதற்கு நல்லதொரு வழி சொல்ல வேண்டும், டாக்டர்!

! சொல்கிறேன், தம்பி. கேள்! தொடைச்சந்தில் தடிப்பும், அரிப்பும் வருவதற்குப் பொதுவான காரணம் 'ஃபங்கஸ்' (Fungus) எனும் காளான் வகை நோய் தான். இதைக் குணமாக்க 'Clotrimazole' எனும் களிம்பை சுமார் ஒரு மாத காலத்திற்கு - தினமும் இரவில் தொடைச் சந்தில் தடவிக் கொள். குணம் கிடைக்கும். அதே சமயம் இத்தொந்தரவு மீண்டும் திரும்பாமலிருக்க நீ 'சுயசுகாதாரம்' பேண வேண்டியது அவசியம். குளிக்கும் போது தொடையை நன்கு சுத்தப்படுத்த வேண்டும். நீ உபயோகித்து வரும் உள்ளாடைகளை (ஜட்டி, பனியன், அண்டர்வேர்) வெந்நீரில் அலச வேண்டும். உள்ளாடைகளை தினமும் மாற்றிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் பயன்படுத்திய சோப்பு, துண்டு, ஜட்டி, கைக்குட்டை போன்றவற்றை நீ உபயோகப்படுத்தக் கூடாது. இறுதியாக, சுத்தமான கழிப்பறைகளில் மட்டுமே மலம் கழிக்க வேண்டும்! செய்வாயா, ரவிக் குமார்?

✱ எம். சலீம் பாஷா, பேர்ணாம்பட்டு.

? வயிற்றில் எரிச்சல் ஏற்படுவது எதனால் டாக்டர்?

! காரம் நிறைந்த உணவுகளை அதிகமாக உண்பதாலும், அடிக்கடி காப்பி, டீ சாப்பிடுவதாலும், நேரத்தோடு உணவு உண்ணும் பழக்கம் இல்லாததாலும், மது அருந்துதல், புகையிலை போடுதல், புகை பிடித்தல் போன்ற தீய பழக்கங்களினாலும், ஆஸ்பிரின், அனால்ஜின் கலந்த மாத்திரைகளை அடிக்கடி சாப்பிடுவதாலும், மன அமைதியின்றி பரபரப்புடன் காணப்படுவதாலும் நம் இரைப்பையில் சாதாரணமாக சுரக்கக் கூடிய ஹைட்ரோகுளோரிக் அமிலம் அளவுக்கதிகமாகச்

டாக்டர். கு. கணேசன்



சுரந்து விடுகிறது. இதனால் இரைப் பையின் உட்சுவர் அரிக்கப்பட்டு நமக்கு வயிற்றெரிச்சல் உண்டாகிறது.

* கே. அரங்கநாதன், தொப்பூர்.

? எதிர்பாராமல் ஏற்படும் இரத்த காயத்திற்கு என்ன முதலுதவி செய்ய வேண்டும், டாக்டர்?

! முதலில் காயத்தைத் தண்ணீரால் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். மண், தூசு, மற்ற அழுக்குகள் எதுவும் காயத்தில் இருக்கக் கூடாது. காயத்திலிருந்து இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தால், சுத்தமான துணியொன்றை பல மடிப்புகளாக மடித்து, அதைக் காயத்தின் மேல் வைத்து சுமார் பத்து நிமிடங்களுக்கு அழுத்திப் பிடிக்க வேண்டும். காயத்திலிருந்து இரத்தம் கசிவது நின்றவுடன், மற்றொரு துணியால் காயத்திற்குக் கட்டுப்போட வேண்டும். பின்பு மருத்துவரிடம் காண்பித்து, முறையான சிகிச்சையைப் பெற வேண்டும்!

பேராசை!

"**தான்** நினைப்பது எல்லாம் நடந்து விட வேண்டும் என்று உடம்பு கொள்ளாத பேராசை ராமுவிற்கு. ஒரு நாள் அவன் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கினான். அவன் முன் கடவுள் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டார்.

''சுவாமி நான் நினைப்பது எல்லாம் நடக்க வேண்டும். அதற்கு நீங்கள் வரம் தர வேண்டும்'' என்றான் ராமு.

''தம்பீ,நினைப்பது எல்லாம் நடந்து விட்டால் பெரிய ஆபத்து ஏற்படும்'' என்றார் கடவுள்.


''அதைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம். வரத்தைக் கொடுங்கள்'' என்றான் ராமு.


கடவுள் அவனுக்கு வரத்தைக் கொடுத்து விட்டு எச்சரித்து விட்டு மறைந்து விட்டார்.

ராமு தனக்கு ஒரு பெரிய பங்களா வேண்டும் என்று நினைத்தான். உடனே அவன் எதிரில் ஒரு அழகான பங்களா தோன்றியது. தன் பங்களா நிறையப் பணமும், நகைகளும் வேண்டும் என்று நினைத்தான். உடனே பங்களாவில் பணமும், நகைகளும் குவிந்தன.

ஒரு நாள் என்னைப் பாம்பு கடித்தால் என்ன ஆகும் என்று நினைத்தான் ராமு. அடுத்த கணமே பாம்பு ஒன்று வந்து அவனைத் தீண்டியது. அதற்கு அடுத்த கணம் ராமு துடிதுடிக்க செத்துப் போனான். ராமுவின் பேராசை அவனை அற்ப ஆயுளில் கொண்டு போய் விட்டது.

– அ. முஸ்தபா, தக்கோலம்.




ஏன் பையனைத் திட்டறீங்க....?
மாட்டுக்கு பொட்டு வாங்கிட்டு வரச் சொன்னா வடிகட்டி பொட்டு வாங்கிட்டு வந்து நிக்கறானே!
சீர்காழி வி.ரேவதி
ஸ்கூலுக்கு லேட்டுன்னா ஏன் போர்டைப் பார்த்தேங் கறியே! என்ன போர்டு?
பள்ளி நெருங்குகிறது! மெதுவாகச் செல்லவும் என்ற போர்டு தான் சார்!
ஏ.வி.இளங்கோ
சிரிப்...
தினமும் நீங்க வெறும் வயிற்றில் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடக்கணும்
யார் வயிற்று மேல டாக்டர் நடக்கணும்?
சாம். சுரேஷ்
என்னய்யா குழம்பு இது...? வயித்துல குத்துது!
“முள்ளங்கி” குழம்பு தான் சார்!
மொரப்பூர் அ.சவ்சாத்
பறவைகள் குளிர் காலத்தில் வடக்கேயிருந்து தெற்கே ஏன் பறந்து வருகின்றன?
உயிரி
நடந்து வரதை விடப் பறந்து வரது சுலப மாச்சே!
நாகை.கே.ரவி

கொரியப் பழங்கதை

ஏழாவது பெண்!



மிக மிகப் பழங்காலத்தில் கொரியாவில் உயர்ந்த மலைகளும் ஆழ்ந்த கடலும் அடர்ந்தகாடும் கொண்ட நாட்டை ஒரு என்ற மன்னர் ஆண்டு வந்தார். அழகும் அறிவும் ஆற்றலும் வீரமும் மிக்க மன்னர் தனக்கு ஏற்ற வகையில் ஓர் அழகிய மனைவியைத் தேடினார். கடைசியில் அவர் விரும்பியபடி ஒரு பெண் கிடைத்தாள். அவளையே மணம் செய்து கொள்ள நிச்சயித்தார்.

அரண்மனை சோதிடர்கள் திருமண நாளைக் குறிக்க ஒன்று கூடினார்கள். இறுதியில் தலைமை சோதிடர் சொன்னார். ''மன்னர் பிரானே, தங்கள் திருமணத்தை அடுத்த ஆண்டு வைத்துக் கொண்டால், உங்களுக்கு ராஜகுமாரன் பிறப்பான். இப்போதே திருமணம் செய்து கொண்டால், ராணிக்குப் பெண் குழந்தைகளாகவே பிறக்கும்.''

உடனே திருமணம் செய்து கொள்ள விரும்பிய மன்னர், சோதிடர்கள் கூறியதை ஏற்கவில்லை. திருமண ஏற்பாட்டைச் செய்யச் சொல்லி உடனே தான் பார்த்து வைத்திருந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

சிறிது காலம் சென்றது. அரசியார் ஒரு குழந்தையைப் பெற்றாள். சோதிடர்களின் கணிப்பைப் பொய்யாக்கிக் கொண்டு, தனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும் என்று மன்னர் எதிர்பார்த்தார். ஆனால், பிறந்ததோ ஒரு பெண் குழந்தை! சோதிடர்கள் கூறியது சரியாயிற்று!

அடுத்த ஆண்டு மறுபடியும் ராணிக்குக் குழந்தை பிறந்தது. இந்த முறையும் பெண் குழந்தையே! சோதிடர்களின் வாக்குப் பலித்தது!

மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது குழந்தைகளும் கூட சோதிடர்கள் கூறியபடியே பெண் குழந்தைகளாகவே பிறந்தன. அரசருக்கு ஏமாற்றமான ஏமாற்றம்!

ராணிக்கு ஏழாவது குழந்தை பிறக்கும் வேளை வந்தது. இந்த முறையாவது கட்டாயம் ஆண் குழந்தை பிறக்கும் என்று அரசர் ஆவலுடன் எதிர்



பார்த்தார். ஆனால், ஏழாவது குழந்தையும் பெண்ணே என்பது தெரிந்ததும், மன்னருக்குக் கோபமும் ஏமாற்றமும் பொங்கி எழுந்தது. ''இந்த ஏழாவது பெண் குழந்தையை நான் பார்க்கவே மாட்டேன். கண்காணாது எடுத்துச் சென்று எங்காவது கடலிலே வீசிவிடுங்கள்'' என்று அரசர் அரண்மனை தாதிகளுக்குக் கட்டளையிட்டார். ஏமாற்றத்தை அவரால் தாங்க முடியவில்லை. ஏமாற்றமும் வெறுப்பும் பாசத்தை வென்றது!

''அரசே! எப்படியானாலும் சரி. குழந்தைக்கு அரச மரபுப்படி ஏதாவது ஒரு பெயர் இட வேண்டும். இல்லையேல் பாவம் சேரும்'' என்று தாதிகள் வேண்டிக் கொண்டனர். அரசர் வேண்டா வெறுப்புடன் அந்த ஏழாவது பெண் குழந்தைக்கு ''பா-ரீ'' என்று பெயர் சூட்டினார்.

அரசரின் கட்டளையைக் கேட்ட ராணி அழுதாள். எந்தத் தாய்க்குத் தான் தன் குழந்தையைக் கடலில் வீசிவிட மனம் ஒப்பும்? இருப்பினும் அரச கட்டளையை யாரால் மீற முடியும்? தாங்க முடியாத துக்கத்துடன் அரசி ஒரு துணியை, எடுத்தாள். அதிலே ''இந்தக் குழந்தை ஓர் அரசகுமாரி'' என்று சித்திர விசித்திரமாக எழுதினாள். துணி

தமிழில்: தம்பி சீனிவாசன்



யில் குழந்தையைச் சுற்றி அதை ஒரு மணிப்பெட்டியிலே வைத்துத் தாதி மாரிடம் கொடுத்தாள்.

தாதிகள் குழந்தையை எடுத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தனர். கடவுளை வேண்டிக் கொண்டு அலை கடலிலே அந்தப் பெட்டியை மிதக்க விட்டுவிட்டுத் தாங்க முடியாத துக்கத் துடன் திரும்பினர்.

கடலில் இருந்த தங்க ஆமைகள் நீந்தி வரும்போது, கடவுள் அருளால் அந்தப் பெட்டியைக் கண்டன. எல்லா மாகக் கூடி அந்தப் பெட்டியை மூழ்கி விடாது முதுகிலே தாங்கிக் கொண்டு கரையை நோக்கி நீந்திச் சென்றன.

உலகம் எப்படி நடக்கிறது என் பதைப் பார்க்க வானவீதியிலே பவனி வந்த பகவான் புத்தர், தங்க ஆமைகள் முதுகில் சுமந்து நீந்திய மணிப் பெட்டியையும் அதில் இருந்த அழகு மிக்க பெண் குழந்தையையும் கண் டார்.

அந்த நேரம் பார்த்து கடற்கரை யிலே ஒரு வயோதிக தம்பதியர் வந்து சேர்ந்தனர். தெய்வ நம்பிக்கை மிக்க நல்லவர்களான அவர்களுக்குக் குழந்தை இல்லை. பெட்டியைச் சுமந்து நீந்தி வந்த தங்க ஆமைகள் கரையை நெருங்கியதும், பெட்டியைக் கரையை நோக்கி உந்தித் தள்ளிவிட்டுக் கிளம்பின. மாணிக்கப்பெட்டி கரையில் வந்து ஒதுங்கவும், அந்த வயோதிக தம்பதியர் கரைக்கு வரவும் சரியாக இருந்தது.

புத்தபெருமான் வானிலிருந்து கீழே இறங்கி அந்த முதியவர்களிடம் வந்தார்.

''இந்தப் பெட்டியை நீங்கள் எடுத் துக் கொள்ளுங்கள். அதன் உள்ளே உங்களுக்குத் தேவையான ஒன்று உள்ளது. அதை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

முதியவர்கள் வீட்டுக்குச் சென்று அடக்க முடியாத ஆவலுடன் பெட்டி யைத் திறந்து பார்த்தனர். அதனுள் அழகிய பெண் குழந்தை இருப்பதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் நீந்தினர்.

குழந்தையைச் சுற்றியிருந்த துணியிலே ''இந்தக் குழந்தை ஓர் அரசகுமாரி'' என்று எழுதியிருந்ததைப் பார்த்தார்கள். பெட்டி மீது பா-ரீ என்று பொறித்திருந்தது.

புத்த பகவான் குழந்தையை ஆசீர்வதித்து மறைந்து விட்டார். கடவுளின் கட்டளை என்று முதியவர்கள் குழந்தையை எடுத்து அன்பைச் சொரிந்து வளர்த்தார்கள்.

அது ஓர் மலை நாடு. கடலை ஒட்டிய நெடியமலைப் பகுதியில் பா-ரீ அந்த முதியவர்களின் அன்புப் பிணைப்பில் செல்லமாக வளர்ந்தாள். பதினாறு ஆண்டுகள் ஆயின. பா-ரீ அழகிய இளம் பெண்ணாக வளர்ந்தாள். அதோடு எல்லா நல்ல குணங்களுக்கும் இருப்பிடமாகவும் திகழ்ந்தாள்.

ஒவ்வொரு மலைக்கும் ஓர் ஆவி வடிவம் உண்டு. அந்த மலை-ஆவி ஒரு நாள், பா-ரீயின் காதுகளில் கேட்கும்படி ஒலித்தது. "அருமை மகளே பா-ரீ, நீ சாதாரணப் பெண் அல்ல! ஓர் அரசகுமாரி. உன்னைப் பெற்ற தாயும் தந்தையும் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்கள். நீ அவர்களைப் பார்க்க வேண்டாமா? உடனே கிளம்பும்மா'' என்று அந்த மலை-ஆவி பா-ரீக்குக் கட்டளையிட்டது.

பா-ரீ அடக்க முடியாத திகைப்புடனும், மகிழ்ச்சியுடனும், வேதனையுடனும் மலையில் இருந்து இறங்கினாள். வீட்டுக்கு ஓடினாள். பெற்றோரிடம் மலைஆவி கூறியதைத் தெரிவித்தாள்.

''தெய்வீக ஆவி கூறியது உண்மைதான் மகளே. புத்த பகவான் அருளால் நீ எங்களுக்குக் கிடைத்தாய். உண்மையைக் கூறினால் எங்கே உன்னைப் பிரிய நேரிடுமோ என்ற பயத்தினாலேயே நாங்கள் இதை மறைத்தோம்'' என்று எல்லாவற்றையும் அவர்கள் கூறினர்.

''உண்மையில் நீ ஒரு அரசகுமாரிதான் அம்மா. தெய்வீக ஆவி கட்டளையிட்ட பிறகு அதை அலட்சியப் படுத்துவது நல்லது அல்ல மகளே. இதோ



நீ கிடைத்தபோது உன்னைச் சுற்றியிருந்த துணி. நீ மிதந்து வந்த மாணிக்கப் பெட்டி. இவற்றை எடுத்துக் கொண்டு உடனே கிளம்பு மகளே. தெய்வம் உனக்குத் துணை இருக்கும்'' என்று பா-ரீயை வழியனுப்பி வைத்தனர்.

''உனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக என்னை வெறுக்கிறாயா மகளே?'' என்று அழுதபடி கேட்டார் அரசர்.


''இல்லையப்பா. உங்கள் நிலையில் நான் இருந்திருந்தாலும், ஒருவேளை நீங்கள் செய்ததையேதான் செய்திருப்பேனோ என்னவோ. நான் உங்களை வெறுக்கவில்லை'' என்று அரசரைத் தேற்றிய பா-ரீ, ''அப்பா, நீங்களும் அம்மாவும் குணமடைய வேண்டுமென்றால், என்ன செய்ய வேண்டும்? எதுவாக இருந்தாலும் நான் செய்கிறேன்'' என்று கேட்டாள்.

''மிக உயரமான பனிமலை உச்சியில் மனிதர்களால் நெருங்க முடியாத பாதுகாப்புடன் ஜீவ நீர் ஊற்று ஒன்று இருக்கிறது. தேவர்களும் வணங்கும் புனிதமான நீர் ஊற்று அது. அதிலிருந்து ஜீவ நீரை எடுத்து வந்து எங்களுக்குக் கொடுத்தால் நாங்கள் குணமடைவோம். இதைக் கொண்டு வந்து தருவோருக்கு இராஜ்ஜியத்தையே பரிசு தருவதாக அறிவித்திருக்கிறோம்மா'' என்றார் அரசர்.

''உனக்கு மட்டும் சினிமாக்காரங்க ஒழுங்காப் பணம் கொடுத்து விடுகிறார்களே எப்படி?''

''பணம் கொடுத்தால் நடிப்பேன். பாக்கி வைத்தால் கடிப்பேன்!''

- எஸ். நிமலரசன்



''அதன் அபாயங்களுக்கு அஞ்சி யாருமே முன் வரவில்லை'' என்று வேதனையுடன் கூறினார் அரசியார்.

''எப்பாடு பட்டாகிலும் என்ன தியாகம் செய்தாகிலும் நான் அந்த ஜீவ நீரை எடுத்து வருகிறேன்'' என்று பெற்றோரை வணங்கிக் கிளம்பினாள் பா-ரீ.

நல்லெண்ணம் சிறிதும் இல்லாத ஆறு அக்காமார்களும் ''நாங்களும் உனக்குத் துணையாக வருகிறோம்'' என்று கிளம்பினர்.

''பனிமலை அடிவாரத்தில், பயங்கரமான குகைப் பாதையில் பார்த்தாலே பயந்து ஓடும்படியான தோற்றத்துடன் அவலட்சணமான ஒரு இராட்சசன் அவர்களை வரவேற்றான், ''என்னைத் தாண்டித்தான் மலையேற வேண்டும். வழியில் கொதிக்கும் ஆறு இருக்கிறது. எரியும் மரங்கள் இருக்கின்றன. இந்த இரண்டையும் வெல்ல எந்த மனிதனாலும் முடியாது. அதனால் திரும்பிப் போங்கள்'' என்று அவர்களை விரட்டினான் அரக்கன்.

''ஐயா, எப்பாடு பட்டாவது ஜீவ நீர் எங்களுக்குக் கிடைக்க நீங்கள்தான் வழிகாட்ட வேண்டும்'' என்று பணிவாக வணங்கினாள் பாரீ.

''உங்கள் பெற்றோரிடம் அவ்வளவு அன்பா! அப்படியானால், உங்களில் யாராவது ஒருவர் என்னை மணந்து கொள்ளுங்கள். என்னை மணப்பவர்களுக்கு நான் ஜீவ நீரை எடுத்து வரும் வழியைக் கூறுகிறேன்'' என்றான் அரக்கன்.

''ராஜாவும் ராணியும் வயதானவர்கள். அவர்களை குணமடைய வைக்க, இந்த அவலட்சண இராட்சசனை மணந்து கொண்டால் நம் வாழ்க்கை என்ன ஆவது? நான் இந்த அரக்கனை மணக்க மாட்டேன்'' என்று ஆறு அக்காமார்களும் திரும்பி விட்டனர்.

''நீ என்னம்மா கூறுகிறாய்?'' என்று தனித்து நின்ற பா-ரீயைக் கேட்டான் அரக்கன்.

''ஐயா, இதுதான் புத்த பெருமானின் திருவருள் என்றால் இதை



வரவேற்பதைத் தவிர வேறு வழி இல்லை. அதோடு, அழகு என்பது தோற்றத்தில் இல்லை, குணத்தில் இருக்கிறது. பெற்றோர்களுக்கு குண மாக வேண்டும் என்பதுதான் என் இலட்சியம். அது நிறைவேற நீங்கள் உதவுவீர்கள் என்றால், உங்களை மகிழ்ச்சியோடு மணக்க நான் தயராக இருக்கிறேன்'' என்றாள் பா-ரீ.

பா-ரீ, அரக்கனை மணந்து கொண் டதும், அங்கே ஓர் அதிசயம் நடந்தது. அரக்கன் அழகுமிக்க ஓர் ராஜ குமார னாக மாறினான்.

''ஜீவ நீர் ஊற்றில் இருந்து ஒரு கால்வாய் வெட்டி, நகரத்திற்குப் பாயும்படி செய்து, நோயுள்ள மக்கள் அனைவரையும் குணமடைய வைக்க வேண்டும் என்று கிளம்பினேன் நான். மந்திர மண் வெட்டி, பறக்கும் நாற் காலி, தானாகவே சண்டை போடும் ஈட்டி இரண்டையும் எனக்குத் தந்து வாழ்த்துக் கூறினார் ஒரு முனிவர். ஆனால், எதிர்பாராத விதமாக ஒரு மந்திரவாதி என்னை வஞ்சித்து, இப்படி அரக்கனாக மாறும்படி சபித்து விட்டான். உன் தியாக உள்ளம் என் சாபத்தை விலக்கிவிட்டது'', என்று கூறிய அரசகுமாரன், அருகில் உள்ள பாழுங்கிணற்றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த மந்திர மண் வெட்டியை யும், பறக்கும் நாற்காலியையும் தானா கவே சண்டை போடும் ஈட்டியையும் எடுத்தான்.

இருவரும் நாற்காலியில் பறந்து பனிமூடிய மலைச் சிகரத்தை அடைந் தனர். எதிர்த்த கொடிய மிருகங்களை ஈட்டி கவனித்துக் கொண்டது. ஜீவ ஊற்றிலிருந்து மந்திர மண்வெட்டியால் பா-ரீயின் உதவியுடன், இளவரசன் ஒரு கால்வாய் வெட்டினான். பா-ரீயின் பெற்றோர்கள் மட்டுமில்லாது அனை வரும் பயன்படும்படி ஜீவ நீர் நகரத் திற்குள் பாய்ந்து ஓடியது!

அந்த ஜீவ நீர் ஓடும் நதியில் குளித் தாலும் சரி, சடங்குகள் செய்தாலும் சரி, சொர்க்கம் அடைவோம் என்று மக்கள் நம்பினர். தங்கள் நன்றிக்கடனாக ஜீவ நீரை வரவழைத்து தங்களுக்கு நற்கதி கிடைக்க வழிவகுத்த பா-ரீயின் தியா கத்திற்கு நன்றி கூறும் வகையில் அதற் கான மந்திரங்களில் பா-ரீயின் பெய ரையும் குறிப்பிட்டு வருகிறார்கள்



பேசாதே! நான்தான் காட்டு ராஜா!'' என்றது.

முயல் சாமர்த்தியமாக ''ஏ மூடனே, நான் யார் என்று நினைத்தாய்? நான் முயல் இல்லை. நான்தான் காட்டு தேவதையின் ஒரே மகன். நான் நினைத்தால் உன்னை அப்படியே விழுங்கி விடுவேன். இந்தக் காடே என்னைப் பார்த்துப் பயப்படுகிறது. நீ நம்பாவிட்டால்,என்னுடன் வா!'', என் கூறி,காட்டு வழியே சிங்கத்தை அழைத்துச் சென்றது.

சிங்கத்தைப் பார்த்த இதர விலங்குகள் மருண்டு அஞ்சி, இங்கும் அங்குமாய்ச் சென்று ஓடி ஒளிந்து கொண்டன.

தேவதை மகன்

காட்டில் ஒரு முட்டாள் சிங்கம் வசித்து வந்தது. ஒரு சமயம் அது குகையைவிட்டுப் பசியுடன் வெளியே வந்ததும் ஒரு முயலைப் பார்த்து உணவாக்கிக் கொள்ள நெருங்கியது.

சிங்கம் நெருங்கி வருவதைப் பார்த்த முயல், `ஓடினால் நம் மீது பாய்ந்து கொன்று விடும். ஆகவே தந்திரமாகத்தான் தப்பிக்க வேண்டும்' என்று முடிவு செய்தது. பின்னர் சிங்கத்தைப் பார்த்து,''இங்குள்ள மிருகங்கள் அனைத்தும் என்னைப் பார்த்துப் பயப்படும் போது,நீ மட்டும் எனக்குப் பயப்படாமல் எனக்கு முன்னாலேயே வந்து கொண்டிருக்கிறாய்! என்ன தைரியம் உனக்கு?'' என்று இருமாப்புடன் கேட்டது.

சிங்கம் கோபமாக ''ஏ அசட்டு முயலே, யார் என்று தெரியாமல்

`உண்மையிலேயே நம்முடன் வருவது தேவதை மகன்தான். இது வரை நாம் பார்க்காததால் நமக்குத் தெரியவில்லை. மற்ற மிருகங்களுக்குத் தெரியும் போல் இருக்கிறது. அதுதான் மிருகங்கள் இப்படி ஓடுகின்றன' என முட்டாள் சிங்கம் மனத்தில் எண்ணிக் கொண்டது. சிங்கம் முயலைப் பார்த்த போது , முயல் கம்பீரமாக நடந்து வந்தது. தேவதை மகனுடன் இப்படியே சென்றால் முடிவில் தேவதை மகன் நம்மையே முழுங்கி விடுவான் என நினைத்துக் கொண்டு திரும்பிக் கூட பார்க்காமல் ஓடிவிட்டது சிங்கம்.

உயிர் தப்பிய முயல் மிகுந்த சந்தோஷத்துடன் தன் வழியே சென்றது.


- எஸ். முரளிராஜ்



''ஏண்டா உன் பாட்டியை 'பாட் பாட்'னு கூப்பிடுறே?''


''என் பாட்டிக்கு 'டி' போட்டுக் கூப்பிட்டா பிடிக்காதுடா!''


- எஸ். நிழலரசன்



குழந்தைக்கும் கருணை காட்டிய ஏகநாதர்
கதை: குமரன்
படம்: [signature]..
பானுதாசர், தம் பேரனிடம்...
குடும்பத்துக்கு ஒரே பிள்ளையாய்ப் பிறந்திருக்கே... உன்னை 'ஏக்யா'ன்னு தான் கூப்பிடணும்!
ஏகநாதன் சமஸ்கிருத சுலோகங்களை வெகு சீக்கிரம் கற்றான்.
பலே! கெட்டிக்காரன், நீ!
மந்திரங்கள் மனப்பாடமாயின..
எவ்வளவு அழகா பூஜை பண்றான்!
ஏழாவது வயதில் உபநயனம்..
ஓம், பூ: ஹ; ஓம், புவ: ...
ஏகநாதனின் தந்தை...
ஜனார்த்தன சுவாமி! என் மகனை சிஷ்யனா ஏத்துக் கொள்ளணும்..
ஆகட்டும்


ஜனார்த்தனர் அரசு உத்தியோகத்தில் இருந்த தர்ம சீலர்...
எனக்குத் தெரிஞ்சதையெல்லாம் சொல்லித் தரேன்.
ஒரு நாள் நள்ளிரவில் எழுந்த ஜனார்த்தனர்...
என்னப்பா செய்யறே?
குரு தேவா, ஒரு பைசாவுக்-குக் கணக்கு சரியா வரலை..
..ஆ! கணக்குல தப்பு எங்கேன்னு கண்டு பிடிச்சுட்டேன்!
ஷபாஷ்!
ஒரு பைசாவுக்காகத் தூங்காம கண் விழிச்சுத் தேடினாய் அல்லவா? இதே கவனத்துடன் இறைவனைத் தியானம் செய்!
குருகுல வாசம் முடிந்தது!.. ஒரு நாள் ஏகநாதர் கங்கையில் நீராடி...
கங்கா தேவி, சரணம்!



..கரை ஏறும்போது...
தூ!
ஏகநாதர் கோபம் அடையவில்லை.
மறுபடி ஸ்நானம் பண்ணிடறேன்.
மீண்டும் கரையேற...
தூ!
ஏகநாதர் கோபப்படாமல் மறுபடியும் குளித்தார். திரும்பத் திரும்ப...
இது நூற்றி எட்டாவது குளியல்!
சுவாமி உங்கள் மகிமை உணர்ந்தேன். இந்த மூடனை மன்னித்து, உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்.



தொடர்ச்சி பக்கம் 53-ல்...


உருட்டு விழி ஆந்தையார்!


A




B


இரு பாகங்களையும் தபால் கார்டு அளவு மெல்லிய அட்டையில் ஒட்டவும். C, D பாகத்தை வெட்டி எடுக்கவும். ஆந்தைகளின் கண்களை வெட்டி எடுத்து விடவும். A, B பகுதியில் கோடுள்ள இடத்தை மட்டும் பிளேடால் கிழிக்கவும். இந்த வெட்டினுள், C, D பகுதியை, A வழியாக நுழைந்து, B வழியாக வெளியே இழுத்து வைத்துக் கொள். இப்பொழுது C, D பகுதியை மெதுவாக இழுத்து மறுபடி உள்ளே தள்ளி அசைத்துப் பார். ஆந்தையார் மூவரும் ஒரே சமயத்தில் விழிகளைச் சுழற்றி உங்களைப் பார்ப்பார்கள்!




குரங்கும் பூ மாலையும்
கதை: வசுதா.
படம்: விநா--
என்டி சோகமா உக்காந்திருக்கிறே! மாப்பிள்ளை கோபிச்சாரா?
அதில்லமா! நம்ம பரம்பரைக்கே பூ மாலை ஒத்துவராதுன்னு ஜோசியர் சொல்லியும் கேக்காம இவர் 'பூக்கடை' ஆரம்பிக்கப்போயிருக்கார். அதான் கவலையா இருக்கு.
இன்று முதல் ஆரம்பம்
கிஷ்கிந்தை பூ மாலை கடை
விலை விபரம்:
மல்லிகை - 10
செவந்தி - 1
ரோஜா - 6
கதம்பம் - 3
துளசி - 1
விலை விபரம்:
மல்லிகை - 10
செவந்தி - 1
ரோஜா - 6
கதம்பம் - 3
துளசி - 1
ஏ... கடைக்காரரே! சீக்கிரமா ஒரு ரோஜா மாலை கொடுங்க... அனுமார் கோவிலுக்குப் போவணும்.



இன்னும் கடைல பூசையே போடல. சாம்ராணி போட்ட பிறகுதான் போணி ஆரம்பம்.
5
மெதுவாக தன் மனைவியிடம்
ரொம்ப அலட்டிக்கறான். வியாபாரம் பண்ணத் தெரியாத வனெல்லாம் பூக்கடை வெச்சுட்டானுங்க...
இருவரும் தங்களுக்குள் சிரித்தார்கள்.
6
கோபத்துடன் பாய்ந்து
டாய்! என்னய்யா சொன்னே! இந்தா வாங்கிக்க...
வியாபாரம்:
7
பளார் என்று கன்னத்தில் அறைய, இரண்டு குரங்குகளும் கட்டிப்புரண்டு- இருக்கிற மாலைகளையெல்லாம் பிய்த்து எறிந்து விட்டன.
8
9
தனியாக நின்ற தன் கணவனிடம்
அப்பவே சொன்னேன் கேட்டீங்களா! குரங்கு கைல கெடச்ச பூமாலை மாதிரி பண்ணிட்டீங்களே!!
10





எவை என்ன செய்யும்?
கோடை விடுமுறைப் போட்டி

பறவைகள், விலங்குகள், நமது உடல் உறுப்புகள், சில பொருள்கள் ஆகியவை செய்யக் கூடிய சில செயல் கள் இங்கே தரப்பட்டுள்ளன. எதிரே தனியாக இவற்றைச் செய்யக் கூடி யவை படங்களாக தரப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது, உரிய படங்களில் அதற்கு உரிய செயலைக் கத்தரித்து ஒட்டி ஆசிரி யருக்கு அனுப்ப வேண்டியதுதான். கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

அளக்கும்	நீந்தும்
தத்தும்	கூவும்
கொட்டும்	பாடும்
பேசும்	கொத்தும்
ஆடும்	தாவும்
சிமிட்டும்	சீறும்
ஊதும்	முட்டும்
கனைக்கும்	சுமக்கும்
வழுக்கும்	கடிக்கும்
ஊளையிடும்	ஒலிக்கும்
சிலிர்க்கும்	அரிக்கும்
உதைக்கும்	வெடிக்கும்

கோடை விடுமுறைப் போட்டி

பெயர்:..

வயது :..........................

முகவரி: ....

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.5.92



எலிக்கு லட்டு இருக்கும் இடத்தை அடைய வழி காட்டுங்கள்.



இங்கு எத்தனை மிருகங்கள் உள்ளன எனக் கணக்கிட்டுக் கூறுங்களேன்!

வட்ட வட்ட வெண்ணிலா!



வட்ட வட்ட வெண்ணிலா
வானில் தோன்றும் வெண்ணிலா
தொட்டுப் பார்க்க ஓடினால்
தூர ஓடிப் போகுது!

பட்டுப் போல மென்மையோ
பாலைப் போல வெண்மையோ
கட்டிப் போட்டால் அஞ்சுமோ
கையைக் காட்டிக் கெஞ்சுமோ!

அன்னை தந்தை இல்லையோ
யாரும் அற்ற பிள்ளையோ
சொன்ன பேச்சைக் கேட்குமோ
சுட்டித் தனங்கள் செய்யுமோ!

இருளைப் போக்க வானிலே
ஏற்றி வைத்த தீபமோ!
உருண்டை யான வடிவமோ
ஓடு கின்ற ஓடமோ!




மாதத் திலே பாதிநாள்
மறைந்து எங்கோ போகுதே
யாரைத் தேடிப் போகுதோ
அடுத்த ஊரைப் பார்க்கவோ!


பாவம் அந்த வெண்ணிலா
பள்ளிக் கூடம் போகுமோ!
யாரும் சோறு ஊட்டினால்
அதனை வாங்கித் தின்னுமோ!




நிலவு போல வானிலே
நீந்த எனக்கும் ஆசைதான்
ஏணி ஒன்று வேண்டுமே
இருந்தால் கொண்டு தாருங்கள்!

- வெற்றியூர்
சுப. திருஞானம்





ராமு பக்தியுடன் உணவு படைத்தார்...
எளிய உணவு.
அன்பினால் அமிர்தமாயிற்று!
ஏகநாதரை குப்பத்து மக்கள் வணங்கினர்.
ராம்.
மனித குலம் ஒன்றே; ஏற்றத்தாழ்வு இல்லை.
ஒரு சமயம் ஏகநாதர் வீட்டுக்குத் திருடர்கள் வந்தனர்.
டேய், இந்தாளு பணக்காரன்னு நினைச்சோம்; ஒண்ணும் காணோமே..
பாத்திரமோ பண்டமோ அகப்பட்டதைச் சுருட்டு...
ஏகநாதர் விழித்தெழுந்தார்...
ஆ, திருடர்கள்!
பாவம், அவர்களுக்கு மதிப்புள்ள ஒன்றும் அகப்படாதே...? என் மோதிரத்தைத் தந்து விடுகிறேன்.
இந்தாங்க, இதையும் கொண்டு போங்க. எனக்கு மோதிரம் எதற்கு?


திருடர்கள் வெட்கமுற்று...
சாமி மன்னிச்சுடுங்க.
இருங்க, சாப்பிட்டு விட்டுப் போகலாம்.
ஏகநாதர் மனைவி கிரிஜா பாய் உணவு தயாரித்து...
சூடா பூரி – சப்ஜி; சாப்பிடுங்க.
ஒரு சமயம் கிழவி ஒருத்தி...
சாகறதுக்குள்ள ஆயிரம் பேருக்காவது அன்னதானம் பண்ணணும்.
எல்லோரும் கேலி செய்தனர்...
சல்லிக்காசு இல்லாதவ, ஆயிரம் பேருக்கு விருந்து படைக்கணுமாம்! பைத்தியம்!
ஒரு பிராமணர் மட்டும்...
கிழவி! உண்மையான பக்தி கொண்ட ஒரு பிராமணனுக்கு உணவளி, போதும். அது ஆயிரம் பேருக்குச் சமானம்.



அப்படிப் பட்டவர் யார்?
உன் அதிர்ஷ்டம், அப்படி ஒருவர் இருக்கிறார்... ஏகநாதர்!
ஏகநாதர், கிழவியின் அழைப்பை ஏற்க, அவர் மகன் ஹரி பண்டிதன்...
அப்பா! இப்படிக் கண்டவர் வீட்டில் சாப்பிடலாமா?
ஏகநாதர் சாப்பிட்டு முடித்து...
ஹரி, இலையை எடுத்து விடு!
ஹரி பண்டிதர் இலை எடுக்க, அதனடியில் இன்னொரு எச்சில் இலை தோன்றியது!
இதென்ன ஆச்சர்யம்!
இம்மாதிரி ஆயிரம் இலைகள் தோன்றின...
998... 999... ஓ! ஆயிரம் பேருக்கு அன்னதானம் என்ற கிழவியின் ஆசை நிறைவேறியது! என் முதுகு ஒடிந்தது! புத்தி வந்தது!


ஒரு சமயம் ஹரி பண்டிதர் காசியிலிருந்து கங்கை தீர்த்தம் கொண்டு வந்தார்.
அப்பா! இதை ராமேஸ்வரம் எடுத்துப் போய் லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணப் போறேன்.
அச்சமயம் ஏகநாதர், ஒரு கழுதை நாவறந்த நிலையில் இருக்கக் கண்டு...
பாவம், தாகம் போலிருக்கு!
கங்கை ஜலத்தைக் கழுதை வாயில் ஊற்றினார்...
அப்பா! என்ன காரியம் செஞ்சீங்க!
அன்றிரவு ஹரிபண்டிதர் கனவில் ராமேஸ்வரர் தோன்றி...
நீ எனக்கு ஆயிரம் குடம் கங்கை நீர் அபிஷேகம் செய்திருந்தாலும், ஏகநாதர் தாகமுற்ற கழுதைக்கு நீர் அளித்ததால் பெற்ற புண்ணியம் உனக்குக் கிடைத்திருக்காது.
ஏகநாதர் பாவார்த்த ராமாயணம், ருக்மிணி கல்யாணம் முதலிய நூல்கள் எழுதினார்.
நலிவுற்ற மக்கள் நலனுக்குப் பாடு படுங்கள். அது தான் கடவுளுக்கு மகிழ்ச்சி தரும்.
முற்றும்



மலைக்கோட்டை மர்மம்

வி.ர.வசந்தன்



12 மர்மம் நீங்கியது!

நாகராஜனைப் பரிசோதித்த டாக்டர்கள், ''தம்பி, இந்தப் பையனோட நிலைமை ரொம்ப மோசமா இருக்கு. இது வசதியுள்ளவர்களுக்கான மருத்துவமனை. சுமார் இரண்டாயிரம் ரூபாயாவது ஆகும்னு நினைக்கிறோம்'' என்றனர் மணிமாறனிடம்.

ஒரு கணம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்த மணிமாறன், ''நீங்க சிகிச்சையை ஆரம்பிங்க. நான் இன்னும் ஒரு மணிநேரத்தில் பணத்தோட வர்றேன்'' என்று கிளம்பினான்.

மருத்துவ மனையை விட்டு வெளியே வந்த மணிமாறன், ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் புவனபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு விரைந்தான். அங்கே நிறைய மாட்டு வண்டிகளைச் சொந்தமாக வைத்துக் கொண்டு வாடகைக்கு விடும் ஒரு முதலாளியை அவனுக்குத் தெரியும். நேரே அவர் வீடு சென்று கதவைத் தட்டினர்

அதிகாலை நேரத்தில் தன் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டு நிற்கும் அவனை வியப்புடன் பார்த்த அந்த முதலாளியிடம் தன் வண்டியையும், மாட்டையும் விற்க விரும்புவதாகவும், தனக்கு அவசரமாகப் பணம் தேவைப்படுவதாகவும் தெரிவித்தான் அவன்.

மணிமாறனை ஏற்கெனவே தெரிந்திருந்ததால் வண்டியையும், மாட்டையும் பார்க்காமலேயே இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று விலை பேசி முடித்து முன் பணமாக ஆயிரம் ரூபாயை அவனிடம் கொடுத்தார் அந்த முதலாளி.

செந்நிறத் தீப்பிழம்பாக மலைக்கு மேல் உதித்து வந்த காலைச் சூரியனின் ஒளிக் கதிர்கள், மலைக்கோட்டைக்கு மறுபுறத்தில் இருந்த மலைப் பள்ளத்தாக்கில் பாய்ந்து, புதிதாக முளைத்திருந்த குடிசைகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்களைத் துயில் எழுப்பியது. பல விதமான பறவைகளின் ஆனந்தக் குரல்கள் எங்கும் பரவி புதிய நாளை உற்சாகத்துடன் வரவேற்றன.

நேற்றிரவு வெகு நேரம் விழித்திருந்து பேசிக் கொண்டிருந்த முதியவர்களும், பெண்களும், குழந்தைகளும் விழித்தெழுந்து தங்கள் குடிசைகளின் முன்னால் செய்வதறியாது மனச் சோர்வுடன் வந்து உட்காரலாயினர். நேற்று இரவு மூட்டைகளைத் தூக்கிச் சென்ற அவர்களைச் சேர்ந்தவர்கள் இன்னும் திரும்ப வந்து சேரவில்லை. அரிசியோ, சோளமோ எதுவாயினும் அவர்கள் வாங்கி வந்தால் தான் இவர்கள் சமைத்துத் தங்கள் பசியை ஆற்றிக் கொள்ள முடியும்.

நேற்றிரவு உட்கார்ந்திருந்த அதே மரத்தடியில் இருந்த வேம்பு தன் அருகிலிருந்த ரங்கனிடம், ''மணிமாறன் இந் நேரம் ஊர் போய்ச் சேர்ந்திருப்பான் இல்லியா?'' என்று கேட்டான்.

ரங்கனின் முகத்தில் ஒரு வினாடி மகிழ்ச்சி படர்ந்தது. ''நிச்சயமா போயிருப்பான்..... அவன் இந்தக் காரியங்களை எல்லாம் ஆனந்த் கிட்ட சொல்லாம இருக்க மாட்டான்... இனி அவன் மூலமா நமக்கு ஏதாவது வழி பிறந்தாத்தான் உண்டு'' என்று பெருமூச்செறிந்தான்.

தொலைவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த வேம்பு, திடீரென்று குதித்தெழுந்தான். ''டேய் ரங்கா, அதோப் பாரு'' என்று உற்சாக மிகுதியினால் கூவினான்.

அவன் காட்டிய திசையை உற்று நோக்கிய ரங்கனுக்கும் உடல் சிலிர்த்துப் போயிற்று. அங்கே நேற்றிரவு மூட்டைகளைத் தூக்கிச் சென்றவர்களை அழைத்துக் கொண்டு நூற்றுக் கணக்கான போலீஸ் காவலர்கள் மலைச் சரிவில் இறங்கி வந்து கொண்டிருந்தனர்.

வேம்புவைக் கட்டிப் பிடித்துக் கொண்ட ரங்கன், ''மணிமாறன் சொன்னதைச் செய்துட்டான்டா'' என்று உற்சாக மிகுதியில் ஆர்ப்பரிக்க, கிராமத்து மக்கள் காவல் துறையினரை திடீரென்று பார்த்த அதிர்ச்சியில் ஒன்றும் புரியாமல் எழுந்து நின்றனர்.

மூட்டைகளை எடுத்துச் சென்றவர்களை அழைத்துக் கொண்டு அந்தக் குடிசைகளை நெருங்கி வந்தனர் காவல் துறையினர். பெரும் பீதியும், பதற்றமும் அடைந்த ஜனங்களைப் பார்த்து காவல் துறை அதிகாரி பேசலானார். ''நீங்க பயப்பட வேணாம். உங்களை இதுவரை அடிமைகளாக வைத்து சட்ட விரோதமான இந்தப் பாவத் தொழிலில் ஈடுபடுத்தி வந்த பாஞ்சாவையும், அவனது ஆட்களையும் நாங்கள் ஏற்கெனவே கைது செய்து விட்டோம்... இனி எங்கள் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டியதுதான் உங்கள் வேலை.... உங்களை இங்கிருந்து மீட்டுச் சொல்லவே நாங்கள் வந்திருக்கிறோம்'' என்றார்.

மேலும் குழப்பமடைந்த அந்த



★ புகழ்பெற்ற பௌதிக விஞ்ஞானி அவர். ''ஒளி என்பது சக்திதான்.துகள்களின் இணைப்பாக உள்ள அதைத் துண்டு துண்டாகச் சிதறச் செய்ய முடியும்'' என்னும் தத்துவத்தைக் கண்டுபிடித்தவர். அந்தத் தத்துவத்திற்கு, 'குவான்ட்டம் கோட்பாடு' என்று பெயர்.

அந்த விஞ்ஞானி அஞ்சா நெஞ்சம் கொண்டவர். சர்வாதிகார ஆட்சிக்கு அடி பணியாதவர்; அசைந்து கொடுக்காதவர். தள்ளாத வயதிலும் அஞ்சாத நெஞ்சம் கொண்டவராகவே அவர் விளங்கினார்.

ஒருநாள், சர்வாதிகார ஆட்சியின் இராணுவ வீரர்கள் வந்தனர். கூடவே, அந்த விஞ்ஞானியின் ஒரே மகனையும் அழைத்து வந்தனர்.

''இந்த ஆட்சிக்கு முழு ஆதரவு தருவதாகக் கூறி, இந்த அறிக்கையில் கையொப்பம் இடுங்கள். இல்லாவிட்டால், உங்கள் மகனைக் கொன்று விடுவோம்!'' என்று பயமுறுத்தினர்; நிர்ப்பந்தப்படுத்தினர்; சவால் விட்டனர்!

ஆனால் அந்த விஞ்ஞானி அடிபணிய மறுத்து விட்டார். அதன் விளைவு? அவரது மகனுக்கு மரண தண்டனை கிடைத்தது; தூக்கிலிடப்பட்டு விட்டான்!

இவ்வாறு, தனது 86வது வயதிலும் கூட சர்வாதிகாரத்திற்கு அடிபணியாமல் வாழ்ந்த அந்தப் புகழ்பெற்ற விஞ்ஞானி யார் தெரியுமா? மாக்ஸ்பிலாங் என்பவர்.

அவரை அடிபணிய வைக்க முயன்று தோற்றுப் போனவர் யார் தெரியுமா? உலகத்தின் மிகப் பெரிய சர்வாதிகாரியான ஹிட்லர்!

- பி. லதா, சென்னை - 114.

மக்கள் ஒன்றும் பேசாமல் சிலைகளாக அசைவற்று நின்றனர். பாஞ்சாவால் தங்களுக்குக் கிடைத்து வந்த வருமானம் போயிற்றே என்ற வேதனையும், வேற்று மனித முகத்தைப் பார்க்க முடியாத இந்த மலையிலிருந்து விடுதலையடையப் போகிறோம் என்ற மகிழ்ச்சியும் அவர்கள் முகங்களில் தோன்றி மறைந்தன.

அவர்களது முகக் குறிப்பிலிருந்தே அவர்களது எண்ணங்களைப் புரிந்து கொண்ட காவல்துறை அதிகாரி, ''கஞ்சா என்ற போதைப் பயிர் மனித அறிவை இயங்காமல் வைத்துப் படுகுழியில் ஆழ்த்துகிறது என்பதால் உலக நாடுகள் எல்லாமே இதைத் தடை செய்து வருகின்றன. அப்படிப்பட்ட சட்ட விரோதமான கஞ்சாவை, உங்கள் அறியாமையைத் தனக்கு சாதகமாக்கி உங்கள் உழைப்பைப் பயன் படுத்திப் பயிரிட்டு வந்திருப்பதோடு உங்கள் அனைவரையும் கொத்தடிமைகளாகத் தன் பிடியில் வைத்திருந்த அந்தக் கொடியவனைப் பற்றி நல்ல நேரத்தில் எங்களுக்குச் செய்தி கிடைத்தது. வெள்ளியாற்று அணையால் உங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய அரசாங்கம் முன் வந்திருப்பது உங்களுக்குத் தெரியும்..... அதை ஏற்றுக் கொண்டு மறுவாழ்வு தொடங்குவதில் இனி எந்தத் தடையும் இருக்காது என்று கூறியதும், கிராம மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

காவல் துறை அதிகாரி தொடர்ந்து பரிவுடன் அவர்களைப் பார்த்து, ''உங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி இனி நீங்கள் எந்தக் கவலையும் கொள்ள வேண்டாம். அரசாங்க உதவி கிடைக்கும் வரை அணைக்கட்டு வேலையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள தலைமைப் பொறியாளர் பிரேம்நாத் இசைந்துள்ளார். எங்களோடு ஒத்துழைக்க வேண்டியதுதான் உங்கள் வேலை'' என்றார்.

தங்கள் நன்மைக்காகவே அவர் பேசுகிறார் என்பதை உணர்ந்து கொண்ட அவர்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தர சம்மதம் தெரிவித்தனர். அவர்கள் சுயமாக செயல்படுவதைத் தடுத்து, தன் பிடிக்குள் வைத்திருந்த பாஞ்சா இப்போது இல்லை என்பதும் அவர்களுக்கு மிகுந்த துணிவைத் தந்தது. வெகு காலமாகத் தாங்கள் ஏங்கியிருந்த நல்வாழ்க்கை தங்களைத் தேடி வந்து விட்டதை நினைத்து இளை



ளூர்களும், சிறுவர்களும் பெருமகிழ்ச்சி யடைந்தனர்.

இதுவரை நாகராஜனைக் கூட்டத் தில் பரபரவென்று தேடிக் கொண் டிருந்த அவன் தந்தை வீரமாணிக்கம் மிகுந்த கலக்கத்துடன் காவல் அதிகாரி யைப் பார்த்து, ''ஐயா, எம் மவன் நாக ராஜவைக் காணோங்க.... நேற்றைக்கு ராத்திரி கஞ்சா மூட்டைகளைத் தூக்கிக் கிட்டு அவனும் போனான்.... இப்போ காணோம்'' என்று புலம்பினான்.

நாகராஜனைப் பற்றி அவனோடு சென்றவர்களை விசாரிக்க, அவர்கள் தங்களுக்கு எதுவும் தெரியாதென்றும், கடைசியாக கொக்கி வீசுவதற்கு அவன் நின்று கொண்டிருந்தான் என்றும் தெரி



வித்தனர்.

நாகராஜனைத் தேடுவதற்காகச் சென்ற காவலர்களை வீர மாணிக்கமும் தவிப்புடன் பின் தொடர்ந்தான். ரயில் பாலத்தினடியில் சென்று அவர்கள் பார்த்த போது அங்கே கஞ்சா மூட்டையும், கொக்கி மாட்டப்பட்ட கயிறும் அனாதையாகக் கிடந்தன. அவை அலங்கோலமாகக் கிடப்பதைப் பார்த்ததுமே பாலத்தின் மேலிருந்து நாகராஜன் விழுந்திருக்க வேண்டும் என்பது தெரிந்து போயிற்று.

அங்குமிங்கும் தேடிக் கொண்டிருந்த காவலர்களில் ஒருவர் திடீரென்று பதற்றத்துடன், ''இதோ, இங்க வந்து பாருங்க'' என்று சத்தமிட்டார்.

அவர் காட்டிய இடத்தில் ஒரு கல்லின் மீது இரத்தத் துளிகள் விழுந்து உறைந்து போயிருந்தன மேலும் இரத்தம் ஆங்காங்கே சிந்தியிருப்பதையும், பாலத்தினடியில் ஓரிடத்தில் அதிகமாகச் சிந்தியிருப்பதையும் பார்த்தவர்கள் பாலத்திலிருந்து விழுந்து கிடந்த நாகராஜனை, ஏதோ கொடிய காட்டு விலங்கு தூக்கிக் கொண்டு போயிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். நாலாபுறமும், வெகு தூரம் சென்று தேடியும் உடல் எதுவும் அகப்படாததால் அவர்கள் தோல்வியுடன் திரும்ப வேண்டியதாயிற்று.

வீரமாணிக்கம் தன் தலையில் அடித்துக் கொண்டு புலம்பி அழுதான். ''நாகராஜா என்னை விட்டுட்டு போயிட்டியேப்பா.... ஒரு பாவமும் அறியாத முத்தையாவுக்கும் மணிமாறனுக்கும் நான் செய்த துரோகத்துக்கு தெய்வம் தண்டனை கொடுத்துட்டுது'' என்று பரிதவித்தான். அவனைத் தேற்ற வழி தெரியாத காவலர்கள் மௌனமாகத் திரும்பி நடக்க, வீரமாணிக்கமும் அரற்றியவாறு நடந்தான்.

தாங்கள் பயிரிட்டு வளர்த்த கஞ்சாத் தோட்டங்களை தங்கள் கையாலேயே அழித்து நிர்மூலமாக்கிய சந்திரகிரி மக்கள் அன்று மாலை ஊர் திரும்பி வந்தனர். கடந்து போனவைகளைக் கனவாக மறந்து விட்டு ஒரு புதிய திருப்பத்தை எதிர் நோக்கி அவர்கள் வந்து கொண்டிருந்தனர். ஊர் எல்லையில் பிரேம்நாத்தும், மற்ற அரசாங்க அதிகாரிகளும், அவர்களுக்காகக் காத்திருந்தனர். அவர்களோடு தாடிக்காரப் பெரியவரும் இருந்தார். ஆனந்தும், அஸ்வினியும் ஆவலுடன் மணிமாறனை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தொலைவில் வரும் போதே ஆனந்தையும், அஸ்வினியையும் பார்த்து விட்ட ரங்கனும், வேம்புவும் ஓடோடி வந்து, ''மணிமாறன் வந்துட்டானா, அவன் எங்கே?'' என்று கேட்டு மூச்சு வாங்கினர்.

அண்ணனும், தங்கையும் திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஆனந்த் பதற்றத்துடன், ''ஏன் அவன் உங்கக் கூட வரல்லையா... பாஞ்சா, அவனைக் கடத்திட்டு வந்தது உண்மைதானே?'' என்று கேட்டான்.

பாஞ்சா, மணிமாறனைக் கடத்திக் கொண்டு வந்ததையும் நேற்றிரவு தானும், வேம்புவும் அவனை விடுவித்ததையும் விவரித்த ரங்கன், ''அவன் தப்பித்து இங்கதான் வந்திருக்க வேண்டும்... நிச்சயமா மலை மேல இல்லை'' என்றான்.

எல்லோர் முகத்திலும், குழப்பம்

''டேய்! நாளைக்கு என்னை டி.வி. யில பார்க்கலாம்!''

''ஏதாவது சாதனை புரிந்தாயா?''

''நாளையிலிருந்து நான் காணாமல் போகப் போறேன்!''

- கே. திலகம்



அதிகரித்தது. மணிமாறன் எங்கு போயி ருப்பான் என்று புரியாமல் அனை வரும் திகைக்க புவனபுரம் செல்லும் மண்பாதையில் மிகத் தொலைவில் தள்ளாடியவாறு நடந்து வந்து கொண் டிருந்த ஒரு சிறுவனைச் சுட்டிக் காட் டிய அஸ்வினி, ''அதோ பாருங்க, அங்க வர்றது மணிமாறன் போல இல்லே?'' என்று கேட்டாள்.

எல்லோரும் அந்தத் திசையை உற்று நோக்கினர். ஆமாம் அது மணி மாறனே தான். மிகவும் சோர்வுற்ற வனாய், உடலெங்கும் புழுதி படிந்து, அலங்கோலமாக நடந்து வந்தான் அவன். ஊர் முழுவதும் அங்கு திரண் டிருப்பதைப் பார்த்து, எதுவும் புரியா மல் அவர்களை நெருங்கி வந்தான்.

எல்லோரும் பெரும் வியப்புடன் மணிமாறன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருக்க, ஒரு மூலையில் நாக ராஜன் இறந்து போனதாக நினைத்துக் கண்கலங்கி அழுது கொண்டு நின்ற வீரமாணிக்கம், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடி வந்து மணிமாறனைக் கட்டி அணைத்துக் கொண்டு விம்மிய வாறு தன் உணர்ச்சிகளை வார்த்தை களாகக் கொட்டலானான்.

''மணிமாறா, என்னை மன்னிச்சு ருப்பா, உங்க அப்பாவுக்கும், உனக்கும் நான் எவ்வளவு பெரிய துன்பங்களைத் தந்திருக்கேன். ஆனா நீ அதையெல் லாம் மனசுல நினைக்காம, எம் மவனை உயிரோட மீட்டுக் கொடுத்தி யேப்பா... உனக்கு என்ன செய்து என் நன்றியைத் தீர்ப்பேன்..? கடைசி வரை இந்த ஊர் ஜனங்களுக்காகக் கவலைப் பட்ட உங்க அப்பா முத்தையாவுக்கு எதிரா ஊர் ஜனங்களைத் திருப்பி விட்ட இந்தப் பாவிக்கு, நீ எப் பேர்ப்பட்ட உதவியைச் செஞ்சி ருக்கே....!'' என்று புலம்பி அரற்றி னான்.

ஆனந்தும், அஸ்வினியும் மணிமாற னின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு, ''மணிமாறா, இவ்வளவு நல்ல காரியம் செய்திருக்கியே, உனக் கும் நாங்க ஒரு நல்ல செய்தி வச்சி ருக்கோம்'' என்றனர்.

ஒன்றும் புரியாமல் அவர்கள் இரு வரின் முகங்களையும் பார்த்து விழித்த மணிமாறனிடம், ''அதோ நிற்கிறாரே, அந்தத் தாடிக்காரப் பெரியவர், அவர் யாருன்னு நல்லாப் பாரு'' என்றாள் அஸ்வினி.

இதுவரை அவரைக் கவனியாத மணிமாறன், அவர் முகத்தை உற்று நோக்கினான். ஒரு கணம் தன் கண் களையே அவனால் நம்ப முடிய வில்லை. உள்ளுக்குள் பொங்கிப் பீரிட்டுக் கிளம்பும் உணர்ச்சியை அடக்க முடியாதவனாய், ''அப்பா'' என்று கூவிக் கொண்டு அவரிடம் ஓடி னான். நெஞ்சிலிருந்து பொங்கிவரும் கேள்விகளை வாயினால் கேட்க முடி யாமல், உதடுகள் நடுங்க அவர் முகத்தை விழி வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

தன் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்து விட்டு அவனை அணைத்துக் கொண்ட பெரியவர், ''மணிமாறா நான் உன்னுடைய அப்பா முத்தையாவேதான். தாடியும், மீசை யுமா இது என்ன கோலம்னு தானே பார்க்கிறே... இதுவெல்லாம் பாஞ்சாக் கிட்ட இருந்து என்னைக் காப்பாத்திக்க நான் போட்ட வேஷம்பா... இந்த ஜனங்களை எப்படியும் அவன் கிட்ட இருந்து மீட்கணும் என்கிற வேகம் என்



''டாக்டர்... வர, வர ஞாபக மறதி அதிகமாயிட்டது. பாருங்க...! நேத்துக் கூட உங்களைப் பார்க்கணும்னு நெனைச்சிட்டு வக்கீல் வீட்டுக்குப் போயிட்டேன்..''

''நாசமாப் போச்சு. நான் என்ஜினி யர்யா...''

- கே. எல். குமணன்



''ஔவையார் இப்போ இருந்திருந்தா 'அறம் செய்ய விரும்பை' எப்படி எழுதியிருப்பார்...?''

''தெரியாதே...!''

''பே னா வா ல தா ன் எழுதியிருப்பார்....''

– கே. எல். குமணன்

மனசு முழுவதும் நிறைஞ்சிருந்ததாலத்தான், இந்த ஊரை விட்டு ஓடிப் போகாம, தண்ணீர்ல மூழ்கிப் போனதா பாஞ்சாவை நம்ப வச்சேன்.... மறைவா அலைஞ்சு அவனுடைய நடவடிக்கைகளைக் கண்காணிச்சேன்.... இந்த ஜனங்கள் வாழறதுக்குச் சரியான வழி சொல்லாமல், பாஞ்சாவைக் காட்டிக் கொடுக்கறது, இவங்களைப் பட்டினி போடறதுக்கு சமம்னு தோணிச்சு. அதுதான் காலம் கனியட்டும்னு காத்திருந்தேன்... இப்ப தம்பி ஆனந்த் மூலமா எல்லாம் நல்லபடியா நடந்திருக்கு.... அவனும், அவன் பெற்றோரும் தங்கள் பிள்ளையா, உன் மேல அன்பு செலுத்தினதாலத்தான் என்னால உன்னைத் தனியா விட்டுட்டு, அவ்வளவு தைரியமா இருக்க முடிஞ்சுது...... எந்தச் சூழ்நிலையிலேயும் உண்மை தவறாம, நடந்து என் பிள்ளைதான் என்பதை நீ நிருபிச்சுட்ட'' என்று வாஞ்சையுடன் அவன் தலையை வருடினார் தாடிக்காரப் பெரியவராக நின்று கொண்டிருந்த முத்தையா.

மணிமாறன் இன்னும் தன்னை நம்பக் கூடாதவனாய் அவர் கைகளைத் தடவித் த ட வி ப் பார்த்துக் கொண்டான். உணர்ச்சிப் பெருக்கினால் பேச முடியாமல் அவர் முகத்தைப் பார்த்து தேம்பித் தேம்பி அழுதான்.

இதற்குள் முத்தையாவை அடையாளம் கண்டு கொண்ட சந்திரகிரி மக்கள், ''முத்தையா, முத்தையா'' என்று ஆனந்தக் கூச்சலிட்டனர். அவர் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த வீரமாணிக்கம் சட்டென்று ஓடி வந்து அவர் காலில் விழுந்தான். ''நீங்க எங்க மேல வச்சிருக்கிற அன்பை உணராமல், பாஞ்சாவோட வலையில் விழுந்துட்டேன்யா, என்னை மன்னிச்சுருங்க'' என்று கண்ணீர் வடித்தான்.

அவனை எழுப்பி நிறுத்திய முத்தையா, ''நடந்தது போகட்டும். இனியாவது நாம எல்லோரும் ஒற்றுமையா இருக்கணும்.... முதல்ல போய் நாகராஜனைப் பாரு.... மற்றதையெல்லாம் பிறகு பேசிக்கலாம்'' என்றார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த காவல்துறை அதிகாரி, மணிமாறனையும், ஆனந்தையும் பிரமிப்புடன் பார்த்து வியந்தார். ''உங்களைப் போன்ற தைரியமும், நேர்மையும் உள்ள சிறுவர்கள்தான் இந்த சமுதாயத்தில் ஒளிவிட்டு பிரகாசிக்கிற மணிக்கற்கள்'' என்று மனதாரப் பாராட்டினார்.

பின் சந்திரகிரி மக்களிடம், ''அரசாங்க உதவி உங்களை அடையும் வரை, அணைக் கட்டு வேலையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்... உங்களுக்கு நல்வழிகாட்ட இதோ இந்த அதிகாரிகள் காத்திருக்கிறார்கள்'' என்று பிரேம்நாத்தையும் மற்ற அதிகாரிகளையும் காட்டினார். அதை ஏற்றுக் கொண்டு அவர்கள் எழுப்பிய உற்சாகக் கு ர ல் விடுதலையடைந்த பறவைகளின் மகிழ்ச்சி கீதமாய் ஒலித்தது.

பிரேம் நாத்திடமும், பிறரிடமும் கைகுலுக்கி விடை பெற்றுக் கொண்ட அதிகாரி எல்லோரையும் பார்த்து, ''புதிதாக உருவாக இருக்கும் சந்திரகிரிக்கு மூல காரணமே, மணிமாறனும், ஆனந்தும், அதோ நிற்கும் ரங்கனும், வேம்புவுந்தான் என்று உறுதியாகச் சொல்லலாம். வெள்ளியாறு அணை

திறப்பு விழா, இந்தக் குழந்தைகளுக்கு பெரிய பாராட்டு விழாவாகவும் அமையப் போகிறது'' என்று தெரிவித்து விட்டு, தன் வாகனத்தில் ஏறிக் கொண்டார்.


வாகனங்கள் சென்று மறைந்ததும் மணிமாறன் அவசரமாகக் கிளம்ப முயன்றான். அதைக் கவனித்த ஆனந்தும் அஸ்வினியும் அவனைப் பிடித்துக் கொண்டு, ''எங்க புறப்படறே? மூணு நாளா உன் கதை இல்லாம எப்படி தவிச்சுப் போயிட்டோம் தெரியுமா?'' என்றனர்.

மணிமாறனின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அவன் மிகுந்த சிரமத்துடன் தன்னை அடக்கிக் கொண்டு, ''நான் சொன்னபடி இப்ப என்னோட வண்டியையும், மாட்டையும் அந்த முதலாளி கிட்ட ஒப்படைக்கணும், அதுக்குத் தான் கிளம்பறேன்'' என்றான். தன் தந்தை தன்னை விட்டுவிட்டுச் சென்ற பின்னரும் தன் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்த அவைகளை இழக்கப் போகும் ஏக்கம் அவன் குரலில் நன்றாகவே தெரிந்தது.

பக்கத்தில் நின்ற பிரேம்நாத் அவன் தோளில் அன்புடன் தட்டினார். ''மணிமாறா, நீ வண்டியையும், மாட்டையும் விற்க வேண்டியதில்லை. நாகராஜனோடா மருத்துவச் செலவுகளை நான் ஏத்துக்கறேன்... நீ கவலைப் படாதே, மறுபடியும் பள்ளிக் கூடம் திறக்கும் போது ஆனந்தும், அஸ்வினியும் உன் வண்டியிலத்தானே பள்ளிக் கூடம் போகணும்? அதை மறந்துட்டியே?'' என்றவர் தன் பிள்ளைகளைப் பார்த்து, ''அப்படித்தானே?'' என்று கேட்டார்.

''ஆமாம்பா. சந்திரகிரிக்கு என்னதான் வாகன வசதி ஏற்பட்டாலும், அதுவெல்லாம் மணிமாறனோட வண்டிக்கு ஈடாகாது.. நாங்கள் அவனோட வண்டியிலதான் எப்பவும் பள்ளிக் கூடம் போவோம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் ஆனந்த். அவனோடு அஸ்வினியும் சேர்ந்து கொள்ள, தன் மகிழ்ச்சியைக் கட்டுப் படுத்த முடியாமல் மணிமாறனும் கலகலவென்று சிரித்தான்.

(நிறைந்தது)



பார்வையற்றவர்களுக்கு பூங்கா!

★ ஹாங்காங்கில் பார்வை இழந்தவர்களுக்காக தனிப்பட்ட இரு தோட்டங்களை அமைத்திருக்கின்றனர். அவற்றில் எண்பது வகையான தாவரங்களும், மலர்களும் காணப்படுகின்றன. பார்வையற்றோர் அவற்றின் மணத்தை நுகர்ந்தும் இலைகளைப் பிடித்தும் பார்த்து அதன் நீள அகலங்களைக் கொண்டு அவற்றை உணர்ந்தும் மகிழ்ச்சி அடைகின்றனர். உண்மையில் இது புதுமையான முயற்சி அல்லவா?

- சிவரஞ்சன்.



பாம்புக்கும் ஆபரேஷன்!

★ குஜராத் மாநில காட்டுப் பகுதியில் ஒரு மலைப் பாம்பு, ஒரு ஆட்டுக் கடாவை விழுங்கும் போது, ஆட்டின் கொம்பு பாம்பின் தொண்டையைக் கிழித்து விட்டது! பாம்பு ஆட்டை விழுங்கவும் முடியாமல், வெளியே தள்ளி விடவும் முடியாமல் அவதிப்பட்டதைக் கண்ட மக்கள், அதை பரோடா வனவிலங்குக் காட்சிச் சாலை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பாம்புக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுக் கழுத்தில் தையல் போடப்பட்டது. இப்போது பாம்பு நலமாக உள்ளதாம்!

- ஜோதி, மதுரை.

நற்பணி செய்தேன்

ஆண்டுத் தேர்வுகள் முடிந்ததும் சிறுவர்கள் ஆவலோடு எதிர்பார்ப்பது நீண்ட விடுமுறையைத்தான். விடுமுறையை எப்படிச் செலவிடுவது, பெற்றோர்கள் நம்மை வெளியூருக்குக் கூட்டிச் செல்வார்களா, ஏதாவது விளையாட்டைத் தேர்ந்தெடுத்து சிறப்பாகப் பயிற்சி பெறலாமா, நண்பர்களுடன் சேர்ந்து பிக்னிக் போகலாமா, கதைப்புத்தகங்கள் படிக்கலாமா என்று பலவிதமாகச் சிந்திப்பது இயல்பு. ஆனால், விடுமுறையில் தமக்குச் சம்பந்தமில்லாத பிறருக்கு உதவும் வகையில் ஏதாவது நற்பணி செய்வதைச் சில சிறுவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சிலரது அனுபவங்கள் இதோ.

தேவிப்ரியா : எங்க பள்ளிகூடத்துக்கு ஒரு சமூக சேவை குழு வரும். அவங்க எங்களுக்கு சில விளையாட்டுப் பயிற்சி குடுப்பாங்க. மொதல்ல, எதுக்காக இந்த மாதிரிப் பயிற்சி குடுக்கறாங்கன்னு புரியாம இருந்தது. அந்த விளையாட்டெல்லாம், பார்வை இழந்தவங்க, பேச- கேட்க முடியாதவங்களுக்காகவே ஸ்பெஷலா தயாரிக்கப்பட்டது. வெகேஷன்ல மெட்ராஸ்ல சாந்தோம்ல இருக்கற பேச-கேட்க முடியாதோர் பள்ளிக் கூடத்துக்குப் போய் அந்த ஃப்ரெண்ட்ஸ்களோட விளையாடிட்டு வருவோம். தங்களுக்கு உடல் குறை இருந்தாலும், உடல் குறையில்லாத மிச்சப் பசங்களும் தங்களை ஒதுக்காம, தங்களுக்குச் சமமா விளையாடறதைத் தெரிஞ்சுக்கிட்டு அவங்க ரொம்ப சந்தோஷப்படுவாங்க.



✱ உடல் குறையில்லாத பசங்களும் தங்களை ஒதுக்காம விளையாடறாங்கன்னு அவங்க சந்தோஷப்படுவாங்க - தேவிப்ரியா

பி.கே. பிரேம்நாத் : நகரத்துல எங்க பார்த்தாலும், தொழுநோய் ஒரு தொத்து வியாதியில்லே. அது எந்த நிலையிலேயும் குணப்படுத்தக் கூடியதுதான்'ன்னு எழுதி வைச்சிருக்காங்க; நோட்டீஸ் ஒட்டியிருக்காங்க. அப்படி இருக்கும் போது, எதுக்காக அந்த நோய் கண்டவங்களை நாம ஒதுக்கணும்னு நான் அடிக்கடி யோசிச்சுப் பார்ப்பேன். அவங்களோட நல்வாழ்வுக்காக எங்க பள்ளிகூடத்திலே நான் என்னால முடிஞ்ச வரைக்கும், தெரிஞ்சவங்க, தெரியாதவங்க எல்லார்கிட்டயும் பணம் திரட்டி அனுப்பிச்சு வைச்சேன். வெகேஷன்ல இன்னும் நிறைய பேரைப் பார்க்க முடியும். என்னோட கலெக்ஷனும் அதிகமாவே இருக்கும். ரோட்ல சில தொழு நோயாளிங்க பிச்சை எடுத்துகிட்டு போறதைப் பார்க்கிறபோது, மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்கும். வாரத்துக்கு ஒருநாள் அவங்களை முகாம்லேருந்து, அவங்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடிய, அவங்கவிடம் எந்த அருவருப்போ, இகழ்ச்சியோ பாராட்டாத சொந்தக்காரங்க அல்லது ஃப்ரண்ட்ஸ்களோட இருக்கறதுக்காக அனுப்பறாங்க. ஆனா சிலர், தெருத் தெருவா போய்ப் பிச்சை எடுக்கறது வேதனையா இருக்கு. அவங்ககிட்ட பேசி, பிச்சை எடுக்கறது ரொம்பக் கேவலம்,

முகாம்ல உங்களுக்கு எல்லா வசதியும் பண்ணித் தராங்க. உங்களை வாரத்துக்கு ஒரு நாளைக்குக்கூட யாரேனும் சொந்தக் காரங்க ஏத்துக்கத் தயாரா இல்லேன்னாலும் பரவாயில்ல, முகாம்லயே தங்கிடுங்கன்னு சொல்லிகிட்டு வரேன். வெறுமே நிதி வசூல் பண்ணிக் கொடுக்கறதை விட,இந்த மாதிரி அவங்களோட தோழமையா நடந்துக்கறதே சிறந்த பணின்னு நான் நினைக்கறேன்.

எம். ஈஸ்வரி : நான் பெரம்பூர்ல இருக்கற சத்யசாய் பாலவிகார் மாணவி. சின்ன சின்ன பசங்களுக்கு நிறைய ஒழுக்க முறைகளை அங்க போதிக்கறாங்க. குறிப்பா வெகேஷன் நாள்ல 'ஸம்மர் கேம்ப்'னு ஒண்ணு நடத்தறாங்க. இதிலே கை வேலைப் பொருட்கள் தயாரிக்கிறது, ஜாதி மதம் பாராட்டாது எல்லோரிடமும் அன்பா பழகறது, பெரியவங்களுக்கும் மரியாதை காட்டறது, வீடு, பள்ளிகூடம், மிச்ச பொது இடங்கள்ல எப்படி ஒழுக்கமா நடந்துக்கறதுன்னு சொல்லி குடுக்கறாங்க. என்னோட ப்ரண்ட்ஸுங்க சில பேர்கிட்ட அதைபத்தி நான் சொல்லுவேன். சிலர் அலட்சியமா இருப்பாங்க. 'ஜாலியா ஊர், ஊர் போறதை விட்டிட்டு ஸம்மர் கேம்ப் பாம்!'னு கேலி பேசுவாங்க. நான் வருத்தப்பட மாட்டேன். ஆனா சிலர் 'நானும் சேரலாமா'ன்னு ஆசையா கேட்பாங்க. இஷ்டம் இருக்கறவங்களை அழைச்சிட்டு போய் சேர்த்துவிடுவேன். ஸம்மர் கேம்ப் முடிஞ்சதும் இவங்க, தான் தெரிஞ்சுக் கிட்டதையெல்லாம், எல்லார்கிட்டயும் சொல்லுவாங்க. அப்ப முதல்ல கேலி பண்ணாங்களே, அவங்களும், 'அடடா.... நாமும் போயிருக்கலாமே. வாய்ப்பை விட்டுட்டமே. இந்த வெகேஷனை பிரயோஜனமேயில்லாம வீணாக்கிட்டோமே'ன்னு வருத்தப்படுவாங்க.



* அட்டா! இந்த வெகேஷனை பிரயோஜனமில்லாம வீணாக்கிட்டோமேன்னு வருத்தப்படுவாங்க - எம். ஈஸ்வரி

வி. ஸி. கார்த்திகேயன் : நான் எங்க ஸ்கூல் சாரணர் படையிலே இருக்கேன். தேசிய ஒருமைப்பாடு, தேசிய தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை, நாட்டிடம் இருக்க வேண்டிய பக்தி எல்லாமே என் மனசுக்குள்ள ஊறிப்போன சமாசாரம். அப்பப்ப தேசிய ஒருமைப்பாடு பற்றி வைக்கப்படற கட்டுரைப் போட்டியில கலந்துக்குவேன். என் கட்டுரையை ரொம்பப் பேர் பாராட்டுவாங்க. ஒரு சின்னப் பையனோட கோணத்லேருந்து பார்த்தா தேசிய ஒருமைப்பாடு இப்ப எவ்ளோ அத்யாவசியமான ஒண்ணுன்னு தெரியுதும்பாங்க. எனக்கு ஒரு ஐடியா வந்தது- இந்த கட்டுரைகளை அச்சடிச்சு, எல்லாருக்கும் விநியோகிச்சா என்னன்னு யோசிச்சேன். அப்பாவும் உடனே சம்மதிச்சு, பணமும் குடுத்தார். என் கட்டுரைகளை பெரியவங்க கிட்ட காமிச்சேன். அவங்க அதிலே ஒரு சில திருத்தங்கள் பண்ணி மெருகு குடுத்தாங்க. அதை பிரிண்ட் பண்ணி, நிறைய பேருக்கு விநியோகம் பண்ணினேன். எல்லாருக்கும் சந்தோஷம். நான் ஸ்கவுட்ல வேற இருக்கறதால என்னோட இந்த நற்பணிக்கு நல்ல பேர் கிடைக்குது. மொத்தத்திலே சின்ன பசங்கள்ளாம், நாமெல்லாம் இந்தியன்னு ஒரே இனமா தங்களை நினைக்கணும், அதுக்கு என் கட்டுரைகள் உதவுதுங்கறதுதான் என் மகிழ்ச்சி.

* என் கட்டுரை உதவுதுங்கறதுதான் என் மகிழ்ச்சி - வி.ஸி. கார்த்திகேயன்



ராஜேஷ் : விடுமுறையை நான் மத்த



✱ நிதி வசூல் பண்ணித் தருவதை விட இது சிறந்த பணி - பி.கே. பிரேம்நாத்

வங்களுக்கு பயன்படும் முறையில கழிக்கறேன். என் கூட படிக்கறவங்கள்ள சில பேர் சில சப்ஜக்ட்ல வீக்கா இருப்பாங்க. விளையாடற போதே அவங்ககிட்ட சந்தேகம் கேட்கற மாதிரி அவங்க வீக்கா இருக்கற பாடத்தைப் பத்திப் பேசுவேன். அவங்களும் பதில் சொல்லுவாங்க. சில சமயம் அவங்க தப்பா சொன்னாலோ, பதில் தெரியலைன்னாலோ, நான் சரியான பதிலைச் சொல்லுவேன். விளையாடிகிட்டிருக்கும் போதே பாடமும் படிச்சுடறோம்! இதனால எனக்கும் பாடங்கள் ரிவைஸ் ஆகறது. எனக்குக் கீழ் வகுப்பிலே படிக்கற பசங்களை கூட்டி வெச்சுகிட்டு அவங்களுக்கும் பாடம் சொல்லித் தருவேன். 'பெரியவங்கன்னா பொறுமையில்லாம திட்டறாங்க, அடிக்கறாங்க. நீதான் நமக்குக் கரெக்ட்' அப்படீன்னு அந்தப் பசங்க சொல்லுவாங்க. எனக்கு ரொம்பவும் சந்தோஷமா இருக்கும்.

வி.வி. அஸ்வினி : ஆஸ்பத்திரில படுத்துக்கிட்டு இருக்கற நோயாளிகளைப் பார்க்க அவங்களோட உறவினர்களோ, நண்பர்களோ வந்து பழம், பிஸ்கட் வாங்கிக் குடுத்து ஆறுதலா ஆதரவா பேசிட்டு போவாங்க. அப்படி ஆதரவில்லாத நோயாளிங்களெல்லாம் மனசுக்குள்ள ஏங்குவாங்கன்னு எங்க டாக்டர் பெரியப்பா சொல்லியிருக்கார். அப்படிபட்டவங்களுக்கு நாம போய் ஆறுதல் சொன்னா என்னன்னு தோணிச்சு. பெரியப்பாகிட்டயே கேட்டேன். சில பேர் ஏற்கனவே பண்றாங்க. நீயும் அவங்களோட சேர்ந்துக்கலாமேன்னு சொன்னார். உடனே புறப்பட்டேன். மொதல்ல கோவிலுக்குப் போய், 'சாமி, ஆண்டவனே, உலகத்ல யாருக்குமே நோய் நொடின்னு வரக் கூடாது. அப்படியே வந்தாலும் அதனால் அவங்க ரொம்ப வலிவேதனை படக் கூடாது. அப்படியே பட்டாலும் அவங்களுக்கு உடம்பு சீக்கிரமா குணமடைஞ்சு வீட்டுக்குப் போயிடணும் சாமி'ன்னு



★ ஒரு சமயம் கல்கத்தாவில் இந்திய விஞ்ஞான காங்கிரஸ் தனது ஆண்டு விழா நிகழ்ச்சிகளைத் துவக்கி வைக்க ஒரு பிரபல அரசியல் தலைவரை அழைத்திருந்தது. அதற்கான சிறப்பு அழைப்பு ஒன்று இந்திய நோபல் பரிசு விஞ்ஞானி சி. வி. இராமனுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் சி. வி. இராமன் அந்த அழைப்பை ஏற்று அந்த மகாநாட்டில் கலந்து கொள்ள மறுத்து விட்டார். ''ஒரு விஞ்ஞான ஆண்டு விழாவில் அரசியல் தலைவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது என்பது என் மனத்திற்குப் பிடிக்காத விஷயம். தன்மானமுள்ள எந்த விஞ்ஞானியும் விஞ்ஞான உலகிற்குத் துளியும் தொடர்பில்லாத ஓர் அரசியல்வாதியின் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்க மாட்டான்'' என்று தன் கருத்தை வெளியிட்டார்.

- ஆர். சசிவக்குமார், நல்லாலம்

வேண்டிக்கிட்டேன். விபூதி, குங்குமப் பிரசாதங்களை நிறைய பாக்கெட் கட்டிக் கிட்டேன். இதே மாதிரி சேவை செய்யும் ஆர்வமுள்ள சில பெரியவங்களோட ஆஸ்பத்திரிக்குப் போனேன். நோயாளிங்க கிட்ட பிரசாதம் குடுத்து, 'உங்களுக்கு ஒடம்பு சீக்கிரம் குணமாயிடும், சாமி

✱ அவங்களுக்கு சந்தோஷத்துல கண்ணீரே வந்துடும்!
- வி.வி. அஸ்வினி





✱ நீதான் நமக்குக் கரெக்ட் அப்பாடீம்பாங்க! - ராஜேஷ்

காப்பாத்துவார், கவலைப் படாதீங்க'ன்னு சொல்லுவேன். அவங்களுக்கு சந்தோஷத்ல கண்ணீரே வந்திடும். யாரோ முன்ன பின்ன தெரியாத ஒரு சின்ன பொண்ணு நமக்காக சாமிகிட்ட வேண்டிகிட்டு, பிரசாதமும் கொண்டு வந்து குடுத்து, ஆறுதலா பேசு தேன்னு அவங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்க. எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்கும்.

படங்கள், பேட்டி : பிரபுசங்கர்

காமிரா வேண்டாம்!

★ ஜப்பானியக் கம்பெனி ஃப்யூஜி. இந்தக் கம்பெனி ஒரு புது மாதிரி போட்டோ பிலிமைத் தயாரித்து உள்ளது. பிலிம் இருக்கும் டப்பாவிலேயே ஒரு லென்கம், திறந்து மூடும் ஷட்டரும் பொருத்தப்பட்டுள்ளன! கா மி ரா வே தேவை இல்லை! காமிரா இல்லாமல் அப்படியே போட்டோ எடுத்து விடலாம்! காமிரா பற்றிய அனுபவம் இல்லாதவர்கள் கூட அருமையாக இதன் மூலம் படம் எடுத்து விடலாம்!
- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.


எந்த வால் எதற்கு? - போட்டி

இதோ சிலவற்றின் வால்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. இவை எதனுடையவை என்பதை, அவற்றின் எண்களைக் குறிப்பிட்டு எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்பவும்.


1



2



4



3



**எந்த வால் எதற்கு?
- போட்டி**

பெயர் :..

வயது :..

முகவரி :..

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.5.92



மக்கள் மனதில் நிலைத்தவர்

ஒரு சமயம் பிரான்சு இங்கிலாந்து மீது போர் தொடுக்க விரும்பியது. அதற்காகப் 'பொலோன்' என்ற இடத்தில் பாசறை அமைத்துத் தகுந்த நேரத்துக்குக் காத்திருந்தது.

அப்போது ஒருநாள், பிரான்சு மன்னன் அவ்வூர் மக்கள் வாழும் பகுதியைச் சுற்றிப் பார்த்தான். ஒரு பெண் அழுது கொண்டிருப்பதைக் கண்டான். அருகில் அவளது மகன். ஐந்தாறு வயது இருக்கும். அவனும் தேம்பித் தேம்பி அழுதான்.

மன்னன் அவளருகில் போனான். ''ஏன் தாயே அழுகிறீர்கள்...?'' என்று வினவினான்.

அவள் மிகுந்த துக்கத்தில் இருந்தாள். தவிரவும் மன்னனை அதுவரையில் அவள் பார்த்ததில்லை. எனவே, பதில் உரைக்கவில்லை.

உடனே மன்னன், அவள் மகனை அருகில் அழைத்து ஆதரவுடன் அணைத்துக் கொண்டான். ''தம்பி! உன் அம்மா ஏன் அழுகிறார்கள்...? என்ன நேர்ந்தது..?'' என்று வினவினான்.

அதற்கு அவன் கண்களைக் கசக்கியவாறு, ''ஐயா! என் அப்பா அம்மாவை அடித்து விட்டார்...'' என்றான்.

உடனே மன்னன், ''அப்படியா? உன் அப்பா யார்? பெயர் என்ன...?'' என்று கேட்டான் சற்றுக் கோபத்துடன். அவன் அதற்குப் பதில் கூறுவதற்குள், அப் பெண் தன் மகனை அருகில் இழுத்து, அவன் வாயைப் பொத்தினாள்.

மன்னனுக்கு, அவள் தன் கணவனைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை என்பது புரிந்து விட்டது. எனவே, அங்கிருந்து தன் இருப்பிடத்துக்குத் திரும்பி விட்டான்.

ஆனால், அவன் சும்மாயிருக்கவில்லை. ஒரு படை வீரனை அழைத்தான். அப் பெண் இருந்த இடத்தை அடையாளம் கூறி, உடனே அவனை அழைத்து வர உத்திரவிட்டான்.

அப் பெண்ணின் கணவன் ஒரு இளைஞன். மன்னனின் படையில் புதிதாகச் சேர்ந்த வீரன். அவனும் மன்ன

ஜானகிமணாளன்

னும் அதுவரையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதில்லை.

தன் எதிரில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட இளைஞனிடம் மன்னன், ''தம்பி! நீ உன் மனைவியை அடித்தாயாமே...?'' என்று கேட்டான்.

''ஆம்...'' என்றான் இளைஞன்.

''பார்த்தால் நற்குண நங்கையாகத் தெரிகிறாளே... ஏன் அடித்தாய்...?'' என்று கேட்டான் மன்னன்.

உடனே அவ்வீரன், ''அது எங்கள் குடும்பப் பிரச்சினை'' என்றான்.

அரசன் சற்றுக் கோபமாக, ''இந்த இளம் வயதில் ஒரு வீரனுக்கு இவ்வளவு கோபம் இருப்பது கவலையளிக்கக்கூடியது. அது நாட்டுக்கே கேவலம். உன்னை நம் மன்னர் அழைத்து இதுபற்றிக் கேட்டால் என்ன சொல்வாய்...?'' என்று கேட்டான்.

அதற்கு அவன், ''ஐயா! அவள் என் மனைவி. தவறு செய்தால், அவளைத் தண்டிக்கும் உரிமை எனக்கு உண்டு...'' என்றான்.

''உரிமை இருக்கட்டும் தம்பி... மறுக்கவில்லை. ஆனால் நான் கேட்பது, நம் மன்னர் உன்னை அழைத்துக் கேட்டால், என்ன பதில் சொல்வாய் என்பதுதான்..?''

''மன்னரிடம்தானே?' நாட்டுக்குத் தலைவனாகிய நீங்கள் உங்கள் விரோதிகளைக் கவனியுங்கள்... வீட்டிற்குள் என் மனைவியைக் கவனிக்கும் பணியை என்னிடம் விட்டு விடுங்கள்...'' என்பேன் என்றான் அவ்விளைஞன் தீரத்துடன்.

மன்னன் அவனது துணிவை மெச்சினான். ''அப்படியா? தம்பி! நான்தான் உன் மன்னன்...'' என்றான் புன்முறுவலுடன்.

இளைஞன் பதறிப் போனான். ''அரசே! என்னை மன்னித்து விடுங்கள்... நீங்கள்தான் மன்னர் என்பதை அறியாது பேசி விட்டேன். என்ன செய்ய வேண்டுமோ கட்டளையிடுங்கள்... அதன்படி நடக்கிறேன்...'' என்றான்.

''தம்பி! உன் மனைவியைப் பற்றி நன்கு விசாரித்தேன். எல்லாரும் அவளைப் புகழ்கிறார்கள். 'உன்னை அடித்த கணவன் பெயரைக் கூறு' என்று நான் கேட்ட போது கூட, நான் உன்னைத் தண்டிப்பேன் என்று அதைக் கூற மறுத்து விட்டாள். இத்தனை நற்குணம் உடையவள், ஏதேனும் தவறு செய்தால் கூட நீ அவளை மன்னித்து விடலாமே! அப்படியிருக்க,அவளை நீ அடிக்கலாமா? அன்பு காட்ட வேண்டாமா? எனினும் உன் துணிவைப் பாராட்டுகிறேன். உனக்குப் பதவி உயர்வு அளித்துள்ளேன். போ... அவளுடன் சண்டை சச்சரவு இன்றிக் குடும்பம் நடத்து...'' என்றான் மன்னன்.

இளைஞன், மன்னனிடம் விடை பெற்று வீடு திரும்பினான். மனைவியுடன் இன்பமாக வாழத் தொடங்கினான்.

பல ஆண்டுகள் கழித்து ஒருநாள் மன்னன் தற்செயலாக அந்தப் பெண்மணியைச் சந்தித்தான்.

பெண்மணி மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டாள். மன்னனைக் கண்டதும் அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியத் தொடங்கியது. கால்களில் விழுந்து வணங்கினாள். பிறகு சொன்னாள், ''அரசே! நீங்கள் என்னைப் பார்த்து விட்டுச் சென்ற நாளிலிருந்து

''கரடி இங்கே வாயேன்...!''

''என்னை இனிமே 'டி' போட்டுக் கூப்பிடாதே...!''

''சரி... 'கரடா' இங்கே வாயேன்!''

- வலங்கை ஜி. ராஜசேகர்





இன்று வரை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன். என் கணவர் என்னிடம் பாசத்தைப் பொழிகிறார். எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை...'' என்றாள்.

அதைக் கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ந்தான். அவளை வாழ்த்தி விட்டு விடைபெற்றான். மக்கள் நலன் பேணிய அந்த மன்னன்.

நாட்டின் அரசாட்சியுடன், வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் மக்களின் அன்றாடக் குடும்பப் பிரச்னைகளையும் வலியச் சென்று விசாரித்து அறிந்து, தகுந்த பரிகாரம் கண்டு உதவிய அந்த மன்னன் யார் தெரியுமா? அவன்தான் மாவீரன் நெப்போலியன்.

நெப்போலியன், ஐரோப்பாவின் மத்தியதரைக் கடலில் உள்ள இத்தாலியின் தீவாகிய 'கார்சிகா'வில் 1769 ஆகஸ்ட் 15 ஆம் நாள் பிறந்தார். தந்தை பெயர் சார்லஸ் போனபார்ட். தாயின் பெயர் லதீதா ரமோலினி!

அவருடைய உண்மையான உழைப்பு அவரை சிகரத்தில் தூக்கி வைத்துப் பிரான்சு நாட்டின் சக்கரவர்த்தி ஆக்கியது. அவரது பெயரும் புகழும் ஐரோப்பா முழுவதும் பரவியது. கூடவே எதிரிகளும் அதிகமாயினர். அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு அவரை வீழ்த்தி வெற்றி கண்டனர்.

முதலில் அவர் 'எல்பா' என்ற

தீவில் சிறை வைக்கப்பட்டார். மீண்டும் பிரான்சு சென்று போரிட்டு வெற்றி கண்டார். எதிரிகள் மீண்டும் ஒன்று திரண்டு தாக்கினர். இறுதியில் நெப்போலியன் வாட்டர்லூ போரில் தோல்வி அடைய நேரிட்டது.

ஐரோப்பிய நாடுகளை மீண்டும் நெப்போலியனின் பிடியில் சிக்க விடாமல் தடுக்க, அவரது பகைவர்கள் ஒன்றுகூடி, ஐரோப்பாவிலிருந்து 6200 மைல் தூரத்தில் உள்ள செயின்ட் ஹெலினா என்ற தீவில் அவரைச் சிறை வைத்தனர். அங்கு அவர் பட்ட துன்பங்களுக்கு அளவில்லை. தீவு மக்கள் அவரை மிகவும் நேசித்தனர். அங்கு ஆறு ஆண்டுகள் கழித்தார். இறுதியில் 1821, மே 5 ஆம் நாள் அந்த மாவீரன் இந்த உலகை விட்டுப் பிரிந்தார்.

அவருடைய உடல் செயின்ட் ஹெலினா தீவிலேயே அடக்கம் செய்யப்பட்டது. அவரது கல்லறை மீது 'சக்கரவர்த்தி நெப்போலியன்' என்று கூடக் குறிப்பிட்ட பிரிட்டிஷ் அரசு அனுமதி தரவில்லை.

எனினும், பிரான்சு நாட்டு மக்கள் அவரை மறந்து விடவில்லை. 19 ஆண்டுகளுக்குப் பிறகு, 1840ல் அவரது உடலை அத் தீவிலிருந்து முழு அரசு மரியாதையுடன் கொண்டு வந்தனர். பாரிஸ் நகரில், அவரது விருப்பப்படியே மக்கள் மத்தியில் 1940, டிசம்பர் 15 ஆம் நாள் அவர் உடலை மீண்டும் புதைத்தனர். அவரது பெரிய நீண்ட வாளும் அவருடன் வைக்கப்பட்டது. ஒரு மாபெரும் நினைவுக் கட்டிடமே அங்கு எழுப்பப்பட்டது. இன்றும் கூட மக்களும் வெளிநாட்டினரும் அங்கு சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். பிரெஞ்சு மக்கள் இன்றைக்கும் கூட அவரைத் தமது கடவுளைப் போல் வணங்கி வருகின்றனர். அந்த அளவுக்கு அவர் மக்கள் மனத்தில் நிலைத்து வாழ்கிறார்.

மாமரம்


ஒரு நாள் பீர்பலிடம் ராமு, சோமு என்று இருவர் வந்தார்கள். ''ஐயா என் தோட்டத்தின் எல்லையில் ஒரு மரம் இருக்கிறது அது இவருடையது என்கிறார்,'' என்றான் சோமு. ''அது உண்மையிலேயே என்னுடையது தான் ஐயா'' என்றான் ராமு.

''சரி நீங்கள் இன்று போய் நாளை வாருங்கள்'' என்று அனுப்பினார் பீர்பல். அவர்கள் போனவுடன் வேலைக்காரனை அழைத்து, ''நீ போய் இரண்டுபேர் வீட்டிலும் அந்த மரத்தில் சில மாம்பழங்கள் திருடு போய்விட்டன'' என்று சொல்லச் சொன்னார். அவ்வாறு வேலைக்காரன் முதலில் சோமுவிடம் சென்று பீர்பல் சொன்னதைச் சொன்னான். ''அப்படியா? கொஞ்சம் வேலை இருக்கு அப்புறமா போய்ப் பார்க்கிறேன்'' என்றான் சோமு. வேலைக்காரன் இதையே ராமுவிடம் சொன்னான். அவர் ''ஐயையோ மாம்பழம் திருடுப் போச்சா'' இதோ போறேன்'' என்று ஓடினார்.



மறுநாள் பீர்பல் கோர்ட்டில் ''ராமு தான் மாமரத்தின் உண்மையான சொந்தக்காரன்னு தெரியுது. பொய் சொன்ன இந்த சோமுவை ஒரு மாதம் சிறையில் அடையுங்கள்'' என்று சொல்லிவிட்டு உண்மை பேசிய ராமுவைப் பாராட்டி அனுப்பினார்.


- அ. முஸ்தபா, தக்கோலம்.



பறவைக்கு நினைவிடம்!

★ விக்டோரியாவிலுள்ள கிரைஸ்டு சர்ச்சைக் கட்டும் போது ராபின் பறவை ஒன்று அங்கு வந்து கூடு கட்டியது. அந்தப் பறவையின் நினைவைக் கௌரவிக்கும் வகையில் சர்ச்சில் உள்ள தூணின் மீது ராபின் பறவையின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இந்த மாதா கோவிலுக்குப் புகலிடம் தேடி வந்த முதல் உயிரினம் என்ற காரணத்தினாலேயே இந்தச் சிறப்பு ராபினுக்குக் கிடைத்துள்ளது!

- கே. எஸ். சரவணன்,
கம்புகாலப்பட்டி.





சுடாத துப்பாக்கி!

★ பறவைகளைச் சேதமில்லாமல் உயிரோடு பிடிப்பதற்காக ஒரு புதிய துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் உதவியுடன் இரத்தக் காயமின்றி மிக எளிதாகப் பறவைகளைப் பிடித்து விட லாம். எப்படி? துப்பாக்கியில் குண்டுக்குப் பதிலாக ஒரு வலை பொருத்தப்பட்டிருக் கும். பறவையை நோக்கிச் சுட்டவுடன் இந்த வலை பறந்து சென்று பறவையை மூடிப் பறக்க விடாமல் செய்து விடும். கனடாவில் உள்ள பறவைகள் ஆராய்ச்சிக் கழக மாணவர்களுக்காகவே இது தயாரிக் கப்பட்டுள்ளது!

- கே. எஸ். சரவணன்,
கம்புகாலப்பட்டி.



தூக்கக் கணக்கு

★ யானையின் தூக்கம் இரண்டு மணி நேரம்.

★ மனிதனின் தூக்கம் எட்டு மணி நேரம்.

★ சிங்கத்தின் தூக்கம் ஆறு மணி நேரம்.

★ கழுதையின் தூக்கம் 30 நிமிடங்கள் மட்டுமே.

- மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு - 57.



போட்டோகிராபி!

★ "Photography (போட்டோகிராபி) என்பது ஆங்கில வார்த்தை அல்ல. ஜெர்மன் வார்த்தை. இதற்கு ''ஒளியால் எழுது'' என்று அர்த்தம்...!"

- பி. எஸ். மணிமாறன், பரங்கிப்பேட்டை.



உயில் கதை!

★ இறந்தவர்கள் தமது சொத்துக்கள் குறித்து உயில் எழுதுகிறார்களல்லவா? இந்த வழக்கம் 1102 ஆம் ஆண்டில்தான் ஆரம்பமாயிற்று. சிசிலி நாட்டு மன்னன் ரோஜர் என்பவனே அதைத் தொடக்கி வைத்தான். மிஃனா என்ற ஆங்கிலச் சொல் தான் உயில் என்று தமிழாகியுள்ளது.

- சி. ஸ்ரீதர் ஸ்ரீராம், வந்தவாசி.



சூரியனில் பாதி!

★ மின்விளக்குகளில் உள்ள ஒளி கொடுக்கும் 'டங்ஸ்டன்' உலோகத்தை உருக்குவது மிகவும் கடினம். அதை 3370 டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலை வரை உஷ்ணப்படுத்தும் போதுதான் உருகத் தொடங்குகிறது! இந்த வெப்பநிலை சூரியனின் மேற்பரப்பில் இருக்கும் வெப்ப நிலையில் பாதியாகும்!


- என். ஆர். சுப்ரமணியன், பூனாம்பாளையம்.



பேனா கதை!

★ பேனா, என்ற பெயர் எதிலிருந்து வந்தது தெரியுமா? 'பென்னா' என்ற இலத்தீன் மொழியிலிருந்து, இறகு என்று அர்த்தம். அந்தக் காலத்தில் பறவை இறகுகளில்தான் எழுதினார்கள். எனவே பென்னா என்பதே நாளடைவில் பேனா என ஆயிற்று!

- மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.



தண்ணீராலேயே வெள்ளத்தைத் தடுக்கலாம்!

★ ஜப்பானில் வெள்ளத்தைத் தடுப்பதற்குத் தண்ணீரையே உபயோகிக்கலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்! எப்படித் தெரியுமா? ஆற்று ஓரத்தில் மணல் மூட்டைகளை அடுக்குவதற்குப் பதிலாக நீர் நிரப்பிய பிளாஸ்டிக் பைகளை அடுக்கினால் இன்னும் அதிகப் பாதுகாப்பு கிடைக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். வெறும் பிளாஸ்டிக் பைகளைக் கொண்டு போனால் போதும். கரை புரண்டு ஓடும் நீரையே எடுத்து நிரப்பி அதே வெள்ளத்தைத் தடுத்து விடலாம்.


- ஆர். மகாதேவன்.



கூப்பிடு தூரம்

★ தீர்மானமாகச் சொல்ல முடியாத ஒன்று ஒரு 'கூப்பிடு தூரம்'. கூப்பிடு முன்னே வந்து ஒட்டிக் கொள்ளும் ஆளுமுண்டு. காது கேட்காது போவோர்களும் உண்டு. ஆணின் சராசரி கூப்பிடு தூரம் 200 கஜம். மில்ஸ் டார்டன் என்பவர் கூப்பிட்டால் 6 மைல் தொலைவு கேட்குமாம்! காணரி தீவில் உள்ளவர்களின் சில்போ பாஷையில் இருந்து கூப்பிட்டால் 5 மைல் தொலைவு கூடக் கேட்குமாம்! இரவில் ஏரிக்கரையில் நின்று கூப்பிட்டால் 10½ மைல் கேட்குமாம்! சென்னைப் பல்கலைக் கழக லெக்சிகன்படி ஒரு கூப்பிடு தூரம் என்பது 2¼ மைல். வின்சலே அகராதியின்படி 4000 முழம்!

- சி. அருள்மணி, அரூர்.



பசுவுக்கும் சிலை!

★ "1969 ஆம் ஆண்டு கியூபா அரசு இறந்து போன பசு ஒன்றிற்கு மாபெரும் ஊர்வலம் நடத்தி இறுதி அடக்கம் செய்தது. காரணம்? அமெரிக்கா பரிசோதித்த ராக்கெட் ஒன்று கியூபாவில் விழுந்து இந்தப் பசுவைக் கொன்று விட்டது. அதற்காகத்தான். அந்தப் பசுவிற்குத் தற்போது சிலை ஒன்றையும் கியூபாவில் அமைத்துள்ளனர்.

- அ. முஸ்தபா, தக்கோலம்.



மோனலிசா

★ மோனலிசா ஓவியத்தை வரைந்து முடிக்க லியானார்டோ டாவின்ஸிக்கு மொத்தம் மூன்றரை ஆண்டுகள் ஆயின! அதாவது 1503 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1507 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இந்த அற்புத ஓவியத்தை முதலில் வாங்கியவர் யார் தெரியுமா? நெப்போலியன்தான்!

- சங்கை. க. கோகிலா.



குழந்தையும் தெய்வமும்!

நான்கு வயது முரளி பிடிவாதம் பிடித்தால் அவ்வளவுதான்! ஒருநாள் அப்பாவின் நண்பர் வந்திருந்தார்.

''முரளி, மாமாவுக்கு வணக்கம் சொல்'' என்று கேட்டார் அப்பா.

''குழந்தையும் தெய்வமும் ஒன்னு. அதனால் தெய்வம் மற்றவங்களை வணங்கலாமா? உங்க நண்பர்தான் என்னை வணங்கணும்!'' என்றான் முரளி.

பாவம். நண்பர் முகத்தில் ஈயாட வில்லை! தான் முரளிக்காகக் கொண்டு வந்திருந்த பெரிய சாக்லேட்டினை, நண்பர் வெளியே எடுத்தார். முரளி ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந் தான். டின்னைத் திறந்து அவனிடம் காட்டி விட்டு மறுபடி மூடித் தனது பைக்குள் வைத்துக் கொண்டார் நண்பர்.

''மாமா, சாக்லேட் எனக்குத் தானே? கொடுங்க,'' என்று கேட்டான் முரளி ஆவலுடன்.

''குழந்தையும் தெய்வமும் ஒன்றாச்சே. அதனால், சாமிக்குப் படைக்கலாம். அதே மாதிரி உனக்கு எதிரே திறந்து காட்டி விட்டேன். எந்தத் தெய்வமாவது படைத்த பொருளை எல்லோர் எதிரிலும் சாப்பிடுமா?'' என்று கேட்டார் நண்பர்.

''எனக்குப் புத்தி வந்தது. நான் சாமியில்லே. வணக்கம் மாமா. சாக் லேட்டைக் கொடுங்க'' என்று கையை நீட்டினான் முரளி.

நண்பர் மகிழ்ச்சியுடன் சாக்லேட் டின்னைக் கொடுத்தார்!


– ரெ. இராமா தேசிகன்,
மாத்தூர்.



''டேய்! உன் ராசியில இன் னைக்கு 'ஜெயம் அடிக்கும்'ன்னு போட்டிருந்ததே என்ன ஆச்சு?''

''அது உண்மைதான்டா. கணக்கு டீச்சர் ஜெயா என்னை இன்னைக்கு நல்லா அடிச்சாங்க!''

– சோமசேகர்






★ து. தணிகை முத்து, நாமக்கல்.

பிறந்த தேதியன்றே இறந்தவர்கள் இருக்கிறார்களா?


கஷ்டமான கேள்வி. ஒரே ஓர் உதாரணம் கிடைத்திருக்கிறது. இலங்கை யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சிங்கம் ஆறுமுக நாவலர் அவர்கள் 1822 டிசம்பர் 18 ஆம் நாள் தோன்றினார். 1979 ஆம் ஆண்டு அதே டிசம்பர் 18 ஆம் நாளன்று மறைந்தார்!



★ ரூ. லட்சுமி, திருவண்ணாமலை.

சிறுவர்களும் பெரியவர்களும் மென்று சுவைக்கும் சுயிங்கத்தை யார் கண்டு பிடித்தார்கள்?

இது ஓர் அமெரிக்கக் கண்டு பிடிப்பு. கண்டு பிடித்தவர் வில்லியம் செம்பிள். கண்டு பிடித்த ஆண்டு 1869.




★ மு. அப்துல் லப்பை, வாணியம் பாடி.

யுரானஸ் கிரகத்தைக் கண்டுபிடித்தது யார்?

சேரநம்பி


இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் ஹெர்ஸ்செல் என்ற வான்வெளி விஞ்ஞானி.



★ மு. சிதம்மா, சத்தியமங்கலம்.

குறுக்கெழுத்துப் போட்டிகள் முதலில் எந்த மொழியில் எப்பொழுது வெளிவந்தது?

ஆங்கிலத்தில்தான் வெளி வந்தது. வெளியிட்ட பத்திரிகை ''தி நியூயார்க் வேர்ல்டு'' ஆண்டு 1913 டிசம்பர்.



★ கு. ரோசம்மா, கன்யாகுமரி - 2.

தீப்பெட்டி கண்டு பிடிக்கப் படுவதற்கு முன்பு எப்படித் தீயை உண்டாக்கினார்கள்?

Fire Drill எனப்படும் முறையில் மரங்களைக் கடைந்தோ, சிக்கி முக்கிக் கற்களை உரசியோ தீப்பொறி உண்டாக்கிப் பயன்படுத்தினார்கள். இதற்கும் முன்னால், பக்குவப்படுத்தப்பட்ட தாமரை இலைகளைத் தேய்த்துத் தீ உண்டாக்கும் முறை இருந்தது என்பதை அதர்வண வேதம் உரைக்கிறது. குறிப்பாக இந்த முறையை அறிமுகப் படுத்தியவர் அதர்வணர் என்கிறது இந்த வேதம். இவரது காலம் கி.மு. 4000.



★ து. கண்ணாயிரம், பத்தமடை.

காந்தியைப் பற்றி ரிச்சர்ட் அட்டன் பரோவுக்கு முன் யாருமே படம் எடுக்கவில்லையா?

ஏன் இல்லாமல்? இந்தப் பெருமைக்கு உரியவர் 'உலகம் சுற்றிய தமிழன்' என்ற பட்டப் பெயர் பெற்ற 'குமரிமலர்' பத்திரிகையின் ஆசிரியர், ஏ.கே. செட்டியார் அவர்கள். இவர் எடுத்த 'காந்தி' திரைப்படம் 1949 லேயே தமிழில் வெளிவந்துவிட்டது. ஆனால் இது ஒரு தொகுப்புப்படம். இது ஒரே நேரத்தில் தமிழ் தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் வெளியானது! சாதனைதானே?



★ நா. பொன் மொழி, திருமங்கலம்.

முதன் முதலில் வெளிவந்த புத்தகத்தின் பெயர் என்ன?


முதல் உலகப் புத்தகத்தின் ஆசிரியர் ஒரு சீன தத்துவஞானி. பெயர் ''வாங்கி''. இது வெளியான ஆண்டு கி.மு. 868! இந்த நூலின் பெயர் ''வஜ்ர சூத்ர''. ஆறே ஆறு பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகம் முழுக்க முழுக்கக் களிமண்ணில் ஆனது!



★ வி. சாலமன் பிள்ளை, இரணியல், கன்யாகுமரி.

பேராசிரியர் அமரர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் சூரியனைப் பற்றி அறிவியல் நூல் ஏதாவது எழுதியுள்ளாரா? அது எங்கு கிடைக்கும்?

அவரது நூல்களில் நீங்கள் கேட்டுள்ளது போன்ற ஒரு புத்தகம் இல்லை. ஆனால் வையாபுரிப் பிள்ளை அவர்கள், அறிவியல் கட்டுரைகளை மொழி பெயர்த்திருக்கிறார். இவை 'கலைமகள்' இதழில் அவ்வப்பொழுது வெளிவந்தன. 'சூரியன்' கட்டுரை இந்த வரிசையில் அவரது மொழிபெயர்ப்பு. இது கலைமகள் 1943 ஜனவரி (பொங்கல் மலர்) இதழில் வெளிவந்துள்ளது. அறிவியல் கட்டுரையாளர் பலரும் பின்பற்ற வேண்டிய ஒரு நெறிமுறையையும் இந்தக் கட்டுரையில் அவர் காட்டியுள்ளார். கட்டுரையின் அடியில் ''ஓர் ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். எத்தகைய நேர்மையாளர்!



★ வ. குட்டியப்பன், வ. தேனப்பன், சிறு முகைபுதூர்.

சிம்ம சொப்பனம் என்கிறார்களே, இது என்ன? புராண விளக்கம் வேண்டாம். அறிவியலாக பதில் கூறுங்கள்.


யானையை மாய்க்கக்கூடிய மிருகங்கள் இரண்டு. சிங்கம், புலி. இந்த இரண்டையும் பற்றி யானைக்கு எப்பொழுதும் பயம் இருந்து கொண்டே இருக்கும். யானைகள் நம்மைப் போல் தூக்கத்தில் கனவு காணக்கூடியவை. நாம் தூக்கத்தில் பயங்கரமான கனவுகளைக் கண்டு பயந்து, உளறி, நடுங்கித் தவிப்பது போல், யானையும் கனவில் சிங்கம் வந்தால் மிரண்டு நிலைகுலையும். இதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. இதைத்தான் சிம்ம சொப்பனம் என்கிறார்கள். சரியாகப் பார்த்தால் இது 'யானைக்கு சிம்ம சொப்பனம்' என்று இருக்க வேண்டும். இவ்வளவு அறிவியல் வளர்ந்த பிறகு, இதற்கு விளக்கம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால், எந்த நவீன ஆராய்ச்சிகளும் வளர வாய்ப்பில்லாத காலத்திலேயே இந்த உண்மையை அறிந்து இதை உவமையாகப் பயன்படுத்திய முன்னோர்களின் அறிவுத் திறமை மலைப்பைத் தருகிறது இல்லையா?



★ பூ. முத்துக்காளத்தி, புகலூர்.

சத்தியவான் சாவித்திரி கதை எந்த புராணத்தில் வருகிறது?

எந்தப் புராணத்திலும் இது வரவில்லை. இது மகாபாரதத்தில் ஒரு கிளைக்கதை.



◆ சாதனை வீரர் பேடி

ரஞ்சி கோப்பை

நடந்து முடிந்த 1991 - 92 ஆம் ஆண்டுக்கான ரஞ்சிக் கோப்பை இறுதிப் போட்டியில் டெல்லி தமிழ் நாட்டை வென்றதன் மூலம் இந்த 58 ஆண்டு கால ரஞ்சிக் கோப்பை வர லாற்றில் ஆறாவது முறையாகத் தனது ஆற்றலை நிரூபித் துள்ளது. இதற்கு முன் 1978-79, 1979-80, 1981-82, 1985-86, மற்றும் 1988-89 ஆகிய ஆண்டுகளில் ஏற் கெனவே டெல்லி இக் கோப்பையை வென்றுள்ளது.

இந்தியா 1932 முதலே டெஸ்ட் போட்டிகளில் ஆடி வந்துள்ளது. ஆனால், முதல் ரஞ்சிக் கோப்பைப் போட்டிகள் 1934-35 ல் தான் ஆரம்ப மாயின. முன்னாள் இங்கிலாந்து ஆட்டக்காரரும் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் தனி இடம் பெற்றுவிட்ட வருமான ராஜா ரஞ்சித் சிங்கின் நினை வாக இந்தப் போட்டி நடைபெற்று வருகிறது.

இதுவரை நடந்துள்ள ரஞ்சி கோப் பைக்கான 58 (வருட) போட்டிகளில் பம்பாய் அணிதான் மிகவும் அதிகமாக 30 முறை வென்றுள்ளது.

இதுவரை தமிழ்நாடு ரஞ்சிக் கோப் பையை இரண்டு முறை வென் றுள்ளது.

ரஞ்சிக் கோப்பைப் போட்டிகள் League, மற்றும் Knock-out என்ற இரு கட்டங்களில் நடத்தப்படுகின் றன. அதாவது, இந்தியாவில் உள்ள

◆ 88-89 ல் வெற்றிக்கு வழிகோலிய தமிழ்நா அணி



மாநிலங்கள் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, முதற்சுற்று League போட்டிகள் மண்டலங்களுக்குள் அடங்கும் அணிகளுக்கு இடையே ஒவ்வொன்றும் நான்கு நாட்கள் நடைபெறும். இப்போட்டிகளில் பங்கேற்கும் அணிகளுக்கு அவர்கள் ரன்கள் மற்றும் விக்கெட்டுகள் எடுக்கும் விதத்தை அடிப்படையாக வைத்துப் புள்ளிகள் தரப்படும்.

இம்முதல் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்த நிலையில் ஒவ்வொரு மண்டலத்திலும், முதல் இரண்டு இடங்களில் இருக்கும் அணிகள் Knock-out போட்டிகளுக்குத் தகுதி பெறும். இப்போட்டிகள் 5 நாட்கள் நடைபெறும்.

இவ்வாண்டு நடைபெற்ற நாக் அவுட் போட்டிகளில் கால் இறுதிப் போட்டி முடிந்த பிறகு, அரை இறுதிப் போட்டிகளில் தமிழ்நாடு ஹரியானாவையும், டெல்லி பம்பாயையும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இதற்கு முன் இரு முறை தமிழ்நாடு அணி ரஞ்சி கோப்பையை வென்ற தருணங்களைப் பார்ப்போம்.

1954-55 ல் பாலு அலகண்ணன் தலைமையில் ஆடிய மதராஸ் அணி, இந்தூரில் நடந்த இறுதிப் போட்டியில் 'முஷ்டாக் அலி' தலைமையில் ஆடிய 'ஹோல்கர்' அணியை வென்றது. அப்பொழுது, மதராஸ் அணிக்கு A.G. கிரிபால் சிங் மிகவும் சிறப்பாக ஆடி வெற்றிக்கு வழிவகுத்தார்.

1987-88 – ல் சென்னையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் எஸ். வாசுதேவன் தலைமையில் ஆடிய தமிழ்நாடு அணி 'ஹைதர் அலி' தலைமையில் ஆடிய இரயில்வேஸ் அணியை மிகவும் சுலபமாக வென்றது. அப்பொழுது டபுள்யூ.வி.ராமன், ராபின் சிங் ஆகிய இருவரும் பேட்டிங்கிலும், கேப்டன் வாசுதேவன் வெங்கட்ரமணா ஆகிய இருவரும் பௌலிங்கிலும், தங்கள் திறமைகளைக் காட்டி வெற்றிக்கு வழிகோலினர்.

இந்த முறை டபுள்யூ.வி. ராமன், வி.பி. சந்திரசேகர், ராபின் சிங், செந்தில் நாதன் ஆகியோர் பேட்டிங்குகளிலும், கணில் சுப்ரமணியம், திவாகர்வாசு ஆகியோர் பௌலிங்கிலும் திறமை காட்டி தமிழ்நாடு இறுதி ஆட்டத்தில் இடம் பெற வழிவகுத்தனர்.

• 88-89 ல் தமிழ்நாடு வென்ற போது பரிசுக்கோப்பையைப் பெறும் வாசுதேவன்





''எப்படி தாத்தா எங்க கிளாஸில் மொத்தம் 40 பேர்தான் படிக்கி றாங்கன்னு அவ்வளவு கரெக்டா கண்டுபிடிச்சீங்க?''

''உன் ரேங்க்கை வெச்சுத்தான்.''

- தக்கோலம். அ. முஸ்தபா



''நேற்று டாக்டர் ஊசி போடும் போது நான் அழவே இல்லை.''

''அப்படியா!''

''ஊசி போட்டது தம்பிக்குத் தானே.எனக்கில்லையே?''

- நல்லாலம் காசிதாசன்



''சுத்தம் சோறு போடும்.''

''குழம்பை எது சார் ஊற்றும்?''

- கு. கருணாநிதி

ரஞ்சி கோப்பைப் போட்டிகளில் நிகழ்த்தப்பட்டுள்ள சாதனைகளில் சில வற்றைப் பார்ப்போம்.

★ ஒரு இன்னிங்ஸில் அதிக ரன்கள் எடுத்த அணிகள் :

a) 912 for 8, ஹோல்கர், மைசூர் அணிக்கு எதிராக 1945 ல் இந்தூ ரில் நடந்த போட்டியில்.

b) 912 for 6 decl. தமிழ் நாடு, கோவா அணிக்கு எதிராக, 1988 ல் பனாஜியில் நடந்த போட்டியில்.

★ ஒரு இன்னிங்ஸில் அதிக ரன்கள் எடுத்த பேட்ஸ்மேன்!

443-நாட் அவுட், பி.பி. நிம்பால்கர். மஹாராஷ்டிராவிற்காக கத்தியவார் அணிக்கு எதிராக 1948 ல் பூனாவில் நடந்த போட்டியில்.

★ ஒரு இன்னிங்ஸில் பத்து விக் கெட்களையும் வீழ்த்தியவர்கள் :

a) P. சாட்டர்ஜி, பெங்காலுக்காக அஸ்ஸாம் அணிக்கு எதிராக, 1956 ல்.

b) P. சுந்தரம், ராஜஸ்தானிற்காக விதர்பா அணிக்கு எதிராக, 1985 ல்.

★ ஒரே மேட்சில் அதிக விக்கெட் கள் வீழ்த்தியவர் :

P. சுந்தரம், 16 விக்கெட்டுகள், ராஜஸ்தானிற்காக விதர்பா அணிக்கு எதிராக 1985 ல்.

★ தாம் ஆடிய எல்லாப் போட்டி களையும் சேர்த்து அதிக ரன்கள் எடுத் துள்ளவர் கர்நாடகாவின் பிரிஜேஷ் பட்டேல். (7126 ரன்கள் - 150 போட்டி களில்.)

★ தாம் கலந்து கொண்ட எல்லாப் போட்டிகளையும் சேர்த்து அதிக விக் கெட்டுகள் எடுத்துள்ளவர் ஹரியானா வைச் சேர்ந்த ரஜீந்தர் கோயல் - 630 விக்கெட்கள்.

★ ஒரே வருடத்தில் 1000 ரன்கள் எடுத்த பெருமை இருவரைச் சேரும்.

i) 1944 ல் பம்பாய் அணிக்காக ஆடிய ஆர்.எஸ். மோடி, (7 மாட்ச் களில் 1008 ரன்கள்)

ii. தமிழ்நாட்டின் டபுள்யூ.வி. ராமன் 1988 ல் 9 மாட்சுகளில் 1018 ரன்கள்



• பி.பி. படேல்

ரஞ்சிக் கோப்பைப் போட்டிகளில் நம் நாட்டின் 27 அணிகள் பங்கு கொண்டு ஆடினாலும், அதிக அளவாக 15 அணிகளே வலிமை மிக்கவை. இதனால் பல போட்டிகள் ஒரு தலைப் பட்சமாகவே அமைகின்றன. ஒரு ஆட்டக்காரரின் திறமை, அவர் சார்ந்திருக்கும் கட்சியின் பலவீனம் காரணமாக, அவர் எவ்வளவுதான் சிறப்பாக ஆடினாலும், நன்கு வெளிவர முடியாமல் போய் விடுகிறது. இதனாலேயே இந்திய கிரிக்கெட் கன்ட்ரோல் போர்ட், அடுத்த ஆண்டிலிருந்து புதிய முறையில் இப்போட்டிகளை நடத்த உத்தேசித்துள்ளது. இதன்படி இப் போட்டிகளில் இந்தியா முழுவதுமாக 15 அல்லது 20 அணிகள் பங்கு கொள்ளும். இவற்றை ஒரு தனியார் நிறுவனம் 'ஸ்பான்சர்' செய்யும். இதனால் ஒரு மாநிலத்தைச் சேர்ந்த வீரர் வேறொரு மாநில அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆடலாம். உதாரணமாக, பம்பாயைச் சேர்ந்த டெண்டுல்கர் கேரளாவிற்காக ஆடலாம். அல்லது தமிழ்நாட்டைச் சேர்ந்த டபுள்யூ.வி. ராமன், உத்திரப் பிரதேசத்திற்காக ஆடலாம்.

இப்புதிய முறை ஏதாவது பெரிய மாற்றத்திற்கு வழிவகுத்து சர்வதேச அரங்கில் நமது கிரிக்கெட்டின் தரம் உயர உதவும் என்று கருதப்படுகிறது.

– நீ. சூர்ய பிரகாஷ்

★ ஒரே வருடத்தில் அதிக விக்கெட்கள் எடுத்தவர் :

1974 ல் டெல்லிக்கு ஆடிய பி.எஸ். பேடி - 64.

★ இந்த வருடம் ஹரியானாவிற்கு எதிராக நடந்த அரை இறுதிப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இரட்டை சதமும் இரண்டாவது இன்னிங்ஸில் சதமும் எடுத்து சாதனை புரிந்தார் டபுள்யூ.வி. ராமன். இதற்கு முன்னால் 1966 இல் தான் ஹனுமந்த் சிங் இம்மாதிரியான சாதனையைப் புரிந்துள்ளார்.



★ சுவரில் ஆணி அடிக்கும் போது ஒரு தரமாவது விரலை நசுக்கிக் கொள்ளாதவர்கள் குறைவு! அந்தக் கவலை இனி இல்லை. சுவிட்சர்லாந்தில் ஒரு கருவி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்தினால் குழந்தைகள் கூட சிறு காயமும் இல்லாமல் ஆணி அடித்துவிடலாம். எவ்வளவு கடினமான சுவரிலும் இதைப் பயன்படுத்தி ஆணி அடிக்க முடியுமாம்!

- டி.எஸ். உசேன், செஞ்சி.



★ இதுவரை சந்திர மண்டலத்தில் 12 மனிதர்கள் நடந்திருக்கிறார்கள். அவர்கள் சந்திரனில் விட்டு விட்டு வந்திருக்கும் கருவிகளின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? 60 கோடி டாலர்கள்!

- கு. கருணாநிதி, சோழன் மாளிகை.


புதிய தொடர்கதை
* 'இவனா!' என்று எள்ளி நகை
யாடியவர்களை அயர வைத்த ஒரு
சிறுவனின் சாதனைக் கதை!
* உடனேயே முழுக்கப் படித்து
விடத் தூண்டும் விறுவிறுப்பான
கதைத் தொடர்!
* குழந்தை இலக்கியத்தின்
உயர்ந்த விருதைப் பெற்ற
யரின் உன்னதமான படைப்பு
நூறு ரூபாய் இரகசியம்
டாக்டர் பூவண்ணன்
கோகுலம்
ஜூன் இதழில்
ஆரம்பம்



குழந்தை இலக்கியத்திற்குப் பெருமை

சிறுவர் கலைக் களஞ்சியம் - மணவை முஸ்தபா - பக். 235 - ரூ. 60/- மீரா பப்ளிகேஷன்ஸ், AE-103, அண்ணா நகர், சென்னை - 600 040.

அகில் புகை என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த அகில் என்பது என்ன என்ற மேல் விவரம் எத்தனை பேர்களுக்குத் தெரியும்? இதோ கேளுங்கள். அகில் சந்தன மரத்தைப் போல் மணம் தரும் மரம். இலைகள் பச்சை நிறம். மென்மையாகவும் பளபளப்புடனும் இருக்கும். 23 மீ உயரம் வரை மரம் வளரும். மலர்கள் வெண்மை நிறம். கனிகள் பஞ்சுபோல் மென்மையானவை. முட்டையின் தலைகீழ் வடிவம். மரத்தை சிறுசிறு துண்டுகளாக வெட்டி சாம்பிராணிக்குப் பதிலாக நறுமணப் புகைபோட உபயோகிப்பார்கள். இந்த மரத்தில் இருந்து நகைப் பெட்டிகள், புத்தக மேலட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. அகில் எண்ணெய் ஒரு நறுமணப் பொருள். மருந்தாகவும் பயன்படுகிறது. அகில் மரத்தூள், துணிகள், தோலுக்குப் பாதுகாப்பு. இதன் நார் காகிதம் தயாரிக்க உதவுகிறது.

இதுபோன்ற பல புதிய செய்தி களை இந்தக் கலைக் களஞ்சியம் தருகிறது. அறிவியல் தகவல்களுக்கும் பஞ்சமில்லை. மேல் நாடுகளில் வெளி யாவது போல் மினி கலைக்களஞ்சியம் தமிழில் இல்லையே என்ற பெரும் ஏக்கத்தை இது பூர்த்தி செய்கிறது. பயன் மிக்க பரிசு நூல். தரமான தயாரிப்பு. ஆசிரியரின் உழைப்பும் கவனமும் நூலெங்கும் தெரிகிறது. குழந்தை இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பது.

உன்னால் முடியும் - மாணிக்க பாண்டியன் - பக். 76 - ரூ. 9/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.

செல்வந்தர் வீரபத்ரன் தன்மகன் கண்ணனுக்கு படிப்பில் போட்டியாக விளங்கும் பாபுவை, முன்னேறவிடாது தடுக்கும் தடை கல்லாக இருக்கிறார். பாபுவுக்கு உதவத் துடிக்கும் ஆசிரியர், வீரபத்ரனின் தடைகளை விலக்கி பாபுவை ஊக்குவிக்கிறார். நாவலின் முக்கால் பகுதி இந்த இருவருக்கும் நடக்கும் போர்தான். இறுதி வெற்றி பாபுவுக்கே. டாக்டராகி, முடக்குவாதத்தால் தவிக்கும் வீரபத்ரனுக்கு அவனே வைத்தியம் செய்ய வருகிறான். சுவையான நிகழ்ச்சிகள் பல மனதைத் தொடுகின்றன. தெளிந்த நடை. நாவலின் செய்தியை மிக உறுதியாக; சுவையாக; திறமையாக வலியுறுத்தியுள்ளார் ஆசிரியர். இது குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய, எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளையின் குழந்தைக் கவிஞர் நினைவுப் பரிசைப் பெற்றுள்ள நூல் என்பதும், வானதி வெளியீடு என்பதும் நூலின் தரத்தை உணரப் போதுமானவை.

பாவேந்தரும் குழந்தைகளும் - **இரா. இளங்குமரன் - பக். 68 - ரூ. 8/- சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.**

'பாவேந்தர் இலக்கியம்' என்றதுமே அவர் பெரியவர்களுக்காகப் படைத்த கவிதைகளும், காவியங்களும், நாடகங்களும் தான் என்று பலரும் எண்ணுகிறார்கள்.

அவர் குழந்தைகளுக்காகவும் பாடல்கள் எழுதியுள்ளார் என்பது பலருக்கும் தெரிய வில்லை. தனியாக பி.எச்.டி செய்யக்கூடிய அளவுக்கு பாவேந்தரின் குழந்தைப் பாடல் கள் உள்ளன. தன் சுகாதாரம் பேணல், சுற்றுப் புறத் தூய்மை போன்றவைகளில், பாவேந்தர் கூறிய அளவுக்குக் குழந்தை களுக்காக யாரும் எழுதவில்லை. 'பாவேந் தர் நெஞ்சில் குழந்தைகள்' என்ற தனது நூலில் , அமரர் புத்தனேரி, ரா. சுப்பிர மணியம் அவர்கள் இதற்கான சில முயற்சி களைச் செய்தார்.

புத்தனேரி சுப்பிரமணியத்தை அடுத்து பாவேந்தரின் குழந்தை இலக்கிய நயத்தை நன்கு அறிமுகப் படுத்தும் நூலாக இந்த நூல் வெளியாகியுள்ளது. நூலாசிரியருக்குப் பாவேந்தரின் படைப்புகளில் உள்ள ஆழ்ந்த ஈடுபாடு நூல் நெடுகிலும் தெரி கிறது. பல பி.எச்.டி. ஆய்வுகளுக்குத் தேவையான பொருள்களை வரிசைப் படுத்தி, அடித்தளத்தை ஆசிரியர் போட்டுத் தந்துள்ளார். இதைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டியது குழந்தை இலக்கியத் திறனாய்வாளரின் கடமை.

அணு முதல் அண்டம் வரை - கே.என். ராமச்சந்திரன் - பக். 152 - ரூ. 17/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.

தமிழில் தோன்றியுள்ள அறிவியல் இயக்க வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக உள்ளவர்களில், குறிப்பிடத்தக்க இடத்தை வகிப்பவர் இயற்பியல் பேராசிரியர் கே.என். ராமச்சந்திரன் அவர்கள். இதில் வந்துள்ள பல கட்டுரைகள் ஏற்கெனவே தினமணியில் வெளியானபோது பலரது பாராட்டுதல்களையும் பெற்றவை. மாண வர்களுக்கு நன்கு பயன்படும் வண்ணம் கோள்கள், உலகத்தின் தோற்றத்தை மிக எளிய நடையில் தந்துள்ளார். ஆசிரியரை யும் பதிப்பகத்தாரையும் எத்தனை பாராட் டினாலும் தகும்.

விட்டுப் போனவை எவை? - போட்டி முடிவு

இந்தப் போட்டியிலும் 900 பேர்க ளுக்கு மேல் கலந்து கொண்டிருக்கி றார்கள். நாய்க்கு மீசை, பற்கள் விட் டுப் போனதையும், கடிகாரத்தில் பெண் டுலம், சின்ன முள் விட்டுப் போன தையும் பல தம்பி தங்கைகள் சுட்டிக் காட்டி எழுதியிருக்கிறார்கள். கோகுலம் வாசகர்கள் ஆயிற்றே! உங்கள் கண் ணில் படாமல் போகுமா?

சரியான விடை :

1. கடிகாரத்தில் பெண்டுலம், நிமிஷ முள்.
2. நாற்காலியில் 4 வது கால்
3. பெண்ணின் ஒரு காதில் ஜிமிக்கி
4. யானைக்குக் காது
5. தபால் பெட்டியில், எடுக்கும் நேரம்
6. ரோஜா மலரில் முட்கள்
7. ஒரு கால் செருப்பில் மோதிரம் இல்லை
8. குழாயில் நீர் பொழிவது
9. பையனின் சைக்கிளில் ஒரு பெடல் இல்லை
10. நாய்க்கு மீசை, பற்கள் இல்லை

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக் கப்பட்ட அதிர்ஷ்ட சாலிகள் :

ரூ. பத்து பரிசு பெறுவோர் :

1. ரு. அன்பு மணி, வை.கோயில், 609 117
2. மா. சக்திவேல், குமாரபாளையம்
3. ம. கருணாநிதி, அகமதாபாத்
4. ம. பழனிச்சாமி, உடுமலை
5. பா. பத்ரிநாராயணன், தம்மம்பட்டி P.O.
6. கி. ஆனந்த், கொரட்டூர், சென்னை - 80
7. முஹமது சாதிக், 605 001
8. லோ. தனபால், பட்டீஸ்வரம்
9. ம. சங்கரி தேவி, திண்டிவனம்
10. கை. தேவகுமரன், சென்னை - 5

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். போட்டி யில் கலந்து கொண்டவர்கள் அனைவ ருக்கும் நன்றி.



எங்களது இல்லை

செல்வன் பணக்கார வீட்டுப் பையன். அவனுடைய வீட்டுக்கு நாலாவது வீட்டில் கந்தன் வசித்து வந்தான். அந்த வீட்டில் பத்துக் குடித்தனங்கள். அதில் கந்தனின் குடும்பமும் ஒன்று. அவனுடைய தந்தைக்கு காய்கறி வியாபாரம். கை வண்டியில் காய்கறி வைத்து தெருத் தெருவாக அலைந்து செய்யும் வியாபாரம்.

ஒரு நாள் கந்தனின் அப்பா காய்கறி வண்டியோடு வீடு திரும்பும் போது இரவு நெடு நேரமாகிவிட்டது. மழை வேறு இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. ''கந்தா கூடைகளையெல்லாம் வண்டியிலிருந்து எடுத்து உள்ளே வை'' என்று மகனுக்கு உத்தரவிட்டு விட்டு உள்ளே வந்தார் அப்பா.

''அப்பா அப்பா,' உருளைக் கிழங்குக் கூடையில் ஒரு சின்ன நாய்க் குட்டி இருக்கு!'' என்று குரல் கொடுத்தான் கந்தன்.

எல்லோரும் ஓடிவந்து பார்த்தனர்.

கண்கள் கூட இன்னும் முழுசாகத் திறக்காத நிலையில் ஒரு நாய்க்குட்டி! பழுப்பு நிறம். நாட்டு ஜாதி வகைதான்!

''எப்படி வந்திருக்குன்னு தெரியலையே! எப்படி வந்திருந்தா என்ன? தூக்கி வெளியே போட்டுவிட்டு வண்டியப் பூட்டிவை'' என்றார் அப்பா.

''அப்பா, ரொம்ப சின்னக் குட்டிப்பா. வெளியே போட்டு விட்டால், பெரிய நாய்ங்க ஏதாவது கடித்துவிடும். நாமே வளர்க்கலாம்பா'' என்றான் கந்தன்.

''நமக்கே இங்க சோத்துக்கு வழியில்லே... இதுல நாய் வேறயா?'' என்று மறுத்தார் அப்பா.

''இருக்கட்டும்பா'' என்றாள் கந்தனின் தங்கை உமா. அம்மாவும் மறுப்பு ஏதும் எழுப்பாததால், அப்பா, நாய்க் குட்டியை அந்த வீட்டில் வளர்க்க அனுமதிக்கும்படி ஆயிற்று. கந்தனும், உமாவும் அதற்கு 'சீசர்' என்று பெயர் வைத்து வளர்த்தனர்.

செல்வம் வீட்டில் வளர்ந்து வந்த அல்சேஷன் நாயின் பெயரும் சீசர்தான்! இதுவே செல்வத்திற்கு அவமானமாக இருந்தது.

''டேய் என்ன திமிர் இருந்தா என் நாய்க்கு வைத்திருக்கும் அதே பெயரை உன்னுடைய தெருப் பொறுக்கி நாய்க்கும் வைப்பே? பேசாம உன் நாயின் பெயரை மாத்திக்க'' என்று உறுமினான் செல்வம்.

கந்தன் மசியவில்லை. தன்னுடைய செல்ல நாய்க்கு உயரம் தாண்டுதல், துரத்திப் பிடித்தல், பந்து உருட்டுதல் போன்ற எல்லா விளையாட்டுகளையும் அவன் கற்றுக் கொடுத்தான். பள்ளியில் நடைபெற்ற 'செல்லப் பிராணிகள்' போட்டியில் அதைப் பங்கு கொள்ள வைக்க ஏற்பாடுகளைச் செய்து வந்தான்.

செல்வத்தின் நாய் சீசர், செழுமையாக வளர்ந்திருந்ததே தவிர, கந்தனின் சீசரைப் போல் சுறுசுறுப்பு இல்லை.



காரணம் செல்லம்தான். அவன் அதற்கு உணவு வகைகளை மட்டும்தான் வாங்கிப் போட்டானே தவிர, விளையாட்டுகளைச் சொல்லித் தரவில்லை.

போட்டி நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. கந்தனின் அப்பா, கறிகாய் வண்டியைத் தள்ளிக் கொண்டு வரும்போது, ஒரு லாரி மோதி, வண்டி சுக்கல் சுக்கலாகி விட்டது. அதைச் சரி செய்ய ஆயிரம் ரூபாயாவது தேவைப் பட்டது.

செல்வத்தின் தந்தையிடம் கந்தனின் அப்பா ஆயிரம் ரூபாய் கடன் கேட்க வந்தபோது, செல்வமும் இருந்தான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அப்பாவின் காதில் ஏதோ கூறினான்.

''ஆயிரம் ரூபாய் கடன் தரேன், ஆனால், கந்தனின் சீசரை எங்களிடம் தந்து விட வேண்டும். அது எங்க செல்வத்தின் நாய்தான் என்பதையும் எழுதித் தந்துவிட வேண்டும்'' என்று நிபந்தனை போட்டார் அவர்.

கடைசியில் கந்தனின் சீசர் செல்வத்தின் வீட்டுக்குக் குடிமாறியது! கந்தனின் அப்பாவுக்கு வண்டியை சரி செய்ய பணம் கடனாகக் கிடைத்தது.

பள்ளியில் 'செல்லப் பிராணிகள்' போட்டி நாள். கந்தன் அன்போடு வளர்த்த சீசர், செல்வம் வளர்க்கும் செல்ல நாயாகப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசைப் பெற்றது!

மாணவர்கள் அனைவரும் ''அது கந்தனின் நாய்'' என்று கூக்குரல் எழுப்பிய போது, பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்த உள்ளூர்ப் பிரமுகர் ஒன்றும் புரியாது தலைமை ஆசிரியரைப் பார்த்தார். தலைமை ஆசிரியர் இரகசியமாக 'என்ன நடந்தது' என்பதைக் 'கிசுகிசுத்தார். செல்வத்தை அழைத்து விழாத் தலைவர் விசாரித்தார்.

''எங்கள் வீட்டு நாய்தான் இது. கந்தனின் அப்பா எங்கள் வீட்டில் வேலை செய்பவர். அவரோடு கந்தனும் வருவான். அப்போ, நாய் அவனுடன் பழகியது அவ்வளவுதான். இது



என்னுடைய நாய்தான் எங்களிடம் இன்னொரு நாயும் இருக்கு. அதுவும் சீசர். இதுவும் சீசர்.'' என்று பொருத்தமாகப் புளுகி விட்டான் செல்வம்! பரிசளிப்பு விழா முடிந்தது.

அடுத்த நாள் மாலை, பங்களா வாசலில் ஏதோ கூச்சலைக் கேட்டு, வெளியே வந்தான் செல்வம். இரண்டு மூன்று சிறுவர்கள் காலில் கட்டோடு நின்று கொண்டிருந்தனர்! கட்டையும் மீறி இரண்டு மூன்று இடங்களில் இரத்தம் கசிந்தது தெரிந்தது! கூடவே அவர்களது பெற்றோர்கள்.

''இந்த சீசர் நாய்க்குட்டி யாருதுங்க? விளையாடிக் கொண்டிருந்த ஏழெட்டுப் பையன்களைக் கடிச்சிடுத்து! நாங்க மாநகராட்சிக்கு புகார் தரப் போறோம். அதோடு நஷ்ட ஈடும் கேட்கப் போறோம்,'' என்றார் ஒருவர்.

''இந்தச் சனியன் பிடித்த கந்தனின் நாய் பண்ணின வேலை போல இருக்கு! கட்டித் தானே போட்டிருந்தேன்? எப்படியோ அறுத்துக் கொண்டு போய்க் கடிச்சிருக்கு போல இருக்கு. நாய் நம்முதுன்னா இத்தனை பேருக்கும் நாமதான் பதில் சொல்லணும்'' என்று தந்தையின் காதில் கிசுகிசுத்தான் செல்வம்.



''ஆமாம். நாய் நம்முடையது இல்லைன்னு சொல்லி, கந்தனை மாட்டி விடுவோம்'' என்று இரகசியமாக மகனின் காதைக் கடித்த அவன் தந்தை, ''இத பாருங்க. உங்களைக் கடிச்ச நாய் சீசர் எங்களுடையது இல்லே. காய்கறி வியாபாரியின் மகன் கந்தன் வளர்த்து வரும் தெருநாய். இதுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை'' என்றார் கூட்டத்தினரைப் பார்த்து.

''அப்படிச் சொல்லுங்க'' என்று மகிழ்ச்சியுடன் கூறிய கூட்டத்தினர், கால் கைகளில் போட்டிருந்த கட்டுகளை அவிழ்த்தனர்! யாருக்கும் எதுவுமே காயமோ, கடியோ இல்லை! எல்லாம் வேஷம்!

''என்ன திகைக்கிறீங்க! உங்க வாயால உண்மையை வரவழைக்க நான் போடச் சொன்ன நாடகம்தான் இது! பரிசுக் கோப்பையை நீங்களே கொண்டுவந்து கந்தனிடம் தந்துடறீங்களா?'' என்று மறைவில் இருந்து வெளியே வந்தார் விழாத் தலைவர்!

– கு. கார்த்திக், கோபி.



வந்திருந்தாள். இது பெரும்பாலும் தினமும் நடைபெறும் நிகழ்ச்சிதான். நாளாக ஆக, நாமும் ஏன் நீச்சல் கற்கக் கூடாது; அண்ணாக்களைப் போல் நீச்சல் போட்டிகளில் பங்கேற்கக் கூடாது என்ற ஆர்வம் சிறுமிக்குப் பிறந்

சபாஷ்! சரவண வடிவு!

எவ்வளவோ தேசிய நீச்சல் சேம்பியன்கள் உருவாகக் காரணமாக இருக்கும் புகழ்பெற்ற மெரீனா நீச்சல் குளம். அதிகாலை நேரம். புதிதாக நீச்சல் பழகவருவோரும், நீச்சலைக் கலையாகக் கொண்டு சாதனை படைக்கத் துடிப்போடும் பயிற்சியாளர்களின் கண்காணிப்பில் குளத்தை இரண்டாக்கிக் கொண்டிருந்தனர்.

அந்த ஆறு வயதுச் சிறுமி சரவண வடிவு, தனது தந்தையோடு தன் அண்ணாக்கள் இருவரும் நீச்சல் பயிற்சி பெறுவதை வேடிக்கை பார்க்க

தது.

தந்தையார் பஞ்சநாதனிடம் தனது விருப்பத்தைக் கூறினாள்.

பஞ்சநாதன் விளையாட்டுக்களில் ஆர்வமுடையவர். அவரே ஒரு விளையாட்டு வீரரும் கூட. தன் குழந்தைகள் படிப்பதோடு விளையாட்டுக்களிலும் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்பது அவருடைய பேரவா. அந்த ஆசையில்தான் அவர் தனது இரு பிள்ளைகளையும் நீச்சலில் பழக்கி

• திலகவதி ஏ. என். பரிமளா





◆ பள்ளியில் பரிசளிப்பு

வந்தார். இவ்வளவுக்கும் பஞ்சநாதன் வசதியானவர் அல்ல. இருந்தாலும் மற்ற செலவுகளைக் குறைத்துக் கொண்டு தன் குழந்தைகள் விளையாட்டில் சாதனை புரிய வேண்டும் என்ற இலட்சிய நோக்கில் அவர்களுக்குப் பயிற்சியளித்து உற்சாகப் படுத்தி வந்தார். அப்படிப்பட்ட தந்தையிடம் அண்ணாக்களைப் போல் நீந்தப் பழக வேண்டும் என்று கேட்டால் அவர் மறுக்கவா போகிறார்?

அன்றே, அப்பொழுதே, பாதுகாப்பு வளையத்தை மாட்டி சரவணவடிவை நீச்சல் குளத்தில் இறக்கி விட்டார் அந்த இலட்சியத் தந்தை! மகளுக்கு நீந்துவதில் உள்ள ஆர்வத்தை நன்கு உணர்ந்து கொண்ட அவர், எப்பாடு பட்டாகிலும் சாதனை படைக்கும் அளவுக்கு அவளை நீச்சல் கலையில் உயர்த்த உறுதிகொண்டார்!

நீச்சல் பயிற்சியில், முன்னேறி சாதனை படைக்க உறுதுணையாக இருப்பது தரையில் செய்யும் உடற்பயிற்சிகள். நீச்சலுடன் இவற்றையும் முறையாக இனமும் செய்து உடலைப் பந்தைப் போல் வைத்துக் கொண்டால்தான், நீச்சல் பயிற்சியில் சில குறிப்பிட்ட இலக்குகளை எட்ட முடியும். அதனால், நீச்சல் பயிற்சிக்கு என்று ஒரு தனிப் பயிற்சியாளரையும், தரைப் பயிற்சிகளுக்கு என்று தனிப் பயிற்சியாளரையும் மகளுக்கு ஏற்பாடு செய்தார் பஞ்சநாதன். தரைப் பயிற்சிகளில் முக்கிய இடத்தை வகிப்பது ஓட்டம். தந்தைக்கும் மகளுக்கும் இருந்த ஆர்வத்திற்கு ஈடுகொடுக்கக் கூடியவர்களாக பயிற்சியாளர்களும் கிடைத்தனர்.

தந்தை பஞ்சநாதனும் பயிற்சியாளர்களும் எதிர்பார்த்தபடியே, சிறுமி சரவணவடிவு ஒரிசாவில் நடைபெற்ற பெண்களுக்கான நேஷனல் ஓப்பன் சேம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு, வெற்றியோடு திரும்பி வந்தாள்!

ஒரிசாவில் பெற்ற வெற்றி காரணமாக, விளையாட்டுத் துறை நிபுணர்களின் கவனம் சரவணவடிவின் மேல் விழுந்தது. அவளுடைய பயிற்சி, ஆர்வம், போட்டிகளில் பங்கு கொள்ளும் போது காட்டும் திறமை ஆகியவைகளை அவர்கள் கவனித்தார்கள். பயிற்சித் திட்டங்களை மாற்றி முறைப்படி பயிற்றுவிக்கப்பட்டால்

எதிர்காலத்தில் நாட்டுக்கே பெருமை சேர்ப்பாள் என்று உறுதி பலருக்கும் ஏற்பட்டது. அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் திருமதி. ரேகா ராமச்சந்திரன். இவர்தான் தமிழ்நாடு டிரயத்லான் சங்கத்தின் செயலாளர்.

டிரயத்லான் என்பது மூன்று விளையாட்டுக்கள் கலந்த கடுமையான ஒரு ஆட்டம். கடலில் நீச்சல் போட்டி. நீந்திக் கரையேறியதும் சைக்கிள் ஓட்ட வேண்டும். சைக்கிள் ஓட்டி முடிந்ததும் ஓட்டப் பந்தயம். இந்த மூன்று போட்டிகளும் ஒன்றின் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக இருக்கும். இடையில் இடைவெளி கிடையாது. நீச்சல், சைக்கிள், ஓட்டம் ஆகிய மூன்றிலும் திறமை இருந்தால்தான் இதில் பங்கு கொள்ளவே முடியும்.

மாநில அளவிலும், தென் மண்டல அளவிலும் நீச்சல் சப்ஜூனியர் அளவில் சரவணவடிவு பல பரிசுகளைப் பெற்று தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்திருந்தாள்.

நீச்சலுக்காக . ஓட்டத்திலும் ஏற்கெனவே அவளுக்குப் பயிற்சி இருந்தது. அதனால், சைக்கிள் ஓட்டத்தில் மட்டும் போதிய பயிற்சி பெற்று, கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய அளவிலான டிரயத்லான் சப்ஜூனியர் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் பங்குகொண்டாள். பதினான்கு வயதிற்கு உட்பட்டவர்களுக்கான இந்த டிரயத்லான் சப்ஜூனியர் போட்டியில், பதினோரு வயதான சரவணவடிவு மூன்றாவது இடத்தைப் பெற்றாள். முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்கள் இவளை விடப் பெரியவர்கள்; வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தது சரவணவடிவு ஒருத்திதான்!

நேரில் பார்க்கப் போன போது மிகச் சிறிய இந்தச் சிறுமியா, நேஷனல் சப்ஜூனியர் மூன்றாவது என்று திகைப்பாக இருந்தது. அவர்கள் வசித்த சின்னஞ்சிறு போர்ஷனில் சரவணவடிவு பெற்றிருந்த கணக்கிலடங்காத பதக்கங்களையும், கோப்பைகளையும், பரிசுத் தட்டுகளையும் வைக்க இடமில்லாது திண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

சரவண வடிவிடம் பேசிக் கொண்டிருந்த போது, இவள் ஒரு அசாதாரணமான சிறுமி என்ற எண்ணமே உறுதிப்பட்டது.

''விளையாட்டில் புலியாக இருக்கிறாயே... படிப்பில் எப்படி?'' என்று கேட்ட போது, ''வகுப்பில் முதல் நான்கு ரேங்கிற்குள் வந்து விடுவேன்'' என்றாள். ''நீ இந்த அளவுக்கு உயர யார் காரணம்?'' என்று கேட்டோம்.

''முதலில் என் பெற்றோர்கள். நான் உலக அளவில் சாதனை படைக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் இலட்சியம். அதற்காக அவர்கள் எத்தகைய தியாகம் செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது எனக்கும் ஒரு வேகம் வந்து விடுகிறது. எனக்குப் பயிற்சி அளித்துள்ள டி. ஜெயராமன், சாலமன், சந்திரசேகரன், வீரபத்ரன், பிரதாப் போன்ற பலர் என் முன்னேற்றத்தில் அளவில்லாத ஈடுபாடு கொண்டவர்கள். நாங்கள் நடுத்தரக் குடும்பம். இவர்களுக்கெல்லாம் என் தந்தையார் பயிற்சிக்காகப் பணமாகத் தந்தது மிகவும் சொற்பத் தொகைதான். ஆனாலும், அவர்கள் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஆர்வத்தோடு பயிற்சியளிக்கிறார்கள்.''

''ஆனாலும் இந்த கிரிக்கெட் காரங்க ரொம்ப மோசம்மா....''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''யாராவது ரன்னே எடுக்காம அவுட் ஆயிட்டா, உடனே நம்ம படத்தைப் போட்டுக் காட்டி கேவலப் படுத்தறாங்களே!''

- சீர்காழி. வி. ரேவதி





• சரவணா போட்டியில் பயிற்சியாளர் ஆறுமுகம், தந்தையுடன்.

- சரவண வடிவு தொடர்ந்தாள்.

''எங்கள் பள்ளித் தலைமை யாசிரியை திருமதி சகுந்தலா சர்மாவை யும், வகுப்பு ஆசிரியைகளையும் என் னால் மறக்கவே முடியாது. எனக்கு வெளியூர் போகும்படி இருந்தால்,எனக் காகத் தனி தேர்வு வைப்பார்கள். நான் வர முடியாத நாட்களில் நடந்த பாடங் களை, அவர்களே எனக்கு சொல்லித் தருவார்கள். நான் பரிசு பெறும்போ தெல்லாம், இறைவணக்கம் முடிந்த தும், என்னை மேடையில் ஏற்றி, நான் பெற்று வந்துள்ள பரிசையும் காட்டி, என்னைப் பாராட்டிப் பேசுவார்கள். என்னைப் போல் மற்ற மாணவிகளும் வளர வேண்டும்; பள்ளிக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று உற்சாகமூட்டு வார்கள். இந்த உற்சாகம் மட்டும் எனக் குக் கிடைக்கவில்லை என்றால், என் னால் இந்த அளவுக்கு முன்னேறி யிருக்க முடியாது.''

- சரவண வடிவு மறுபடி தொடர்ந் தாள்.

''எல்லாவற்றிற்கும் மேலாக திருமதி. ரேகா ராமச்சந்திரன் அவர் களை மறக்கவே முடியாது. இவர்தான் தமிழ்நாடு டிரயத்லான் சங்கத்தின் செய லாளர். வசதி இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த என்போன்ற எத்தனையோ குழந்தைகளின் திறமைகளைக் கண்டு பிடித்து, அவர்கள் முன்னேற எல்லா வகைகளிலும் உதவி, உற்சாகமளித்து வருகிறார்கள். எங்களுக்கு சத்துணவு கொடுப்பதில் இருந்து, பயற்சி கொடுப் பது வரை அவரே எல்லாவற்றையும் கண்காணிக்கிறார். உற்சாகமூட்டு கிறார். அவரது ஆதரவு மட்டும் கிடைக் காமல் இருந்தால் நான் இந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது.''


சரவணவடிவின் குரலில் இருந்த நெகிழ்ச்சி அவளுடைய நன்றி உணர்வை வெளிப்படுத்தியது.

''உன்னுடைய இலட்சியம் என்ன?''

''நான் இன்னும் கடுமையாகப் பயிற்சி பெற்று பி. டி. உஷாவைப் போல உயர்ந்து தாய்நாட்டுக்குப் பெருமைசேர்க்க வேண்டும்.''

திறமை, கடுமையான பயிற்சிகள், மகளுக்காக எதையும் தியாகம் செய்யும் பெற்றோர்கள், தட்டிக் கொடுக்கக் காத் திருக்கும் நல்மனமுடையோர் என்று எல்லாம் நல்லபடியாக வாய்த்திருக்கும் சரவண வடிவு, கண்டிப்பாக வருங் காலத்தில் ஒரு பி. டி. உஷாவாக உயர்ந்து நாட்டுக்குப் பெருமை சேர்ப் பாள் என்பதில் சந்தேகமே இல்லை. இப்பொழுதே கோகுலம் வாசகர் சார் பில் நமது அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.

அட்டை வண்ணப்படம் : யோகா



மெய்மறக்க வைக்கிறது!

★ கடந்த மூன்று மாதங்களாகத்தான் கோகுலம் படித்து வருகிறேன். என்னை மெய்மறக்க வைக்கிறது கோகுலம்.
வெஸ்ட் மலேஷியா, க. பாஸ்கர்

★ ரம்சான் சிறப்பிதழா, புத்தாண்டு சிறப்பிதழா, ஒருமைப்பாடு இதழா என்று பிரித்து உணர முடியாது திண்டாடினோம். வெல்க கோகுலத்தின் பணி!
பெர்ணாம்பட்டு,
ஓ. கே. என். நுருல் அமீன்.

★ ஈத்பெருநாள் நல்வாழ்த்து இதழை வெளியிட்ட ஒரே ஓர் சிறுவர் இதழ் கோகுலம்தான்! வெல்க இதன் பணி!
மதுராந்தகம், கலைமான்.

★ சுகுமார் சுகுமார்தான் த ர ம ான படைப்பு. கதையைப் படித்து வாயடைத்துப் போனேன்! அறிவியல் தூண்டு கோலுக்கு உதவும் படைப்பு!
ஆசனாம்பட்டி, என். டி. லட்சுமி.

★ மலைக்கோட்டை மர்மம், திகில் மர்மமாகவே இருக்கிறது!
தென்னங்குடி, சந்துரு.

★ வலிமைக்கு வாலி - புதுமையாகவு... அருமையாகவும் இருந்தது.
மூஞ்சூர்பட்டு, மூ. பூபாலன்.

★ விடுகதைப் போட்டி முடிவு அருமையான தேர்வு!
சென்னை - 40, என். பாலகிருஷ்ணன்.

★ பிருந்தாவனக் கவியரங்கத்திற்காகவே கோகுலத்தைப் பிள்ளைகள் வாங்கும்படி நச்சரிக்கிறார்கள். பள்ளி விழாவில் குழந்தைகள் பாடும்படி இருக்கிறது.. பக்கத்தை இன்னும் கூட்டுங்கள்.
விருத்தாசலம், வ. சந்திரகாந்தா.

★ சின்ன பாபுவுக்கு 'சிரிக்க வைக்கும் சின்னபாபு' என்று பட்டம் தரலாம். என்னமாய் சிரிக்க வைக்கிறார் மனிதன்!
வாணியம்பாடி, து. கண்ணபிரான்.

★ 'கட்டிப் பிடிக்க முடியாத கபில்தேவ்!' கட்டுரையை எத்தனை பாராட்டினாலும் தகும். எத்தனை செய்திகள்! சூர்யபிரகாஷ் அருமையாகத் தந்திருக்கிறார்!
அரியலூர், வ. செல்வராஜன்.

★ சிவ குருநாதனின் உழைப்பே உயர்வு கதை அருமையான கதை!
ஆரூர், ஏ. அன்பரசு.

★ எட்டாவது வள்ளல் அழகப்பரைப் பற்றி எழுதிய கட்டுரை பிரமாதம். நல்லவர்களை யார் மறந்தாலும் கோகுலம் மறக்காது!
கோட்டையூர், மாணிக்கவல்லி.

★ தாவரங்களில் அதிசயங்கள் பிரமாதம். எங்களுக்கு நன்கு பயன்படும்.
கருமத்தம்பட்டி, ஆர். அருண்பிரகாஷ்.

★ யானைக் குட்டியை நிரந்தரமாகத் தங்க வைத்த 'கோமதியும் குட்டி யானையும்' கதை. அலுப்புத் தட்டாது மிக அருமையாக இருந்தது. படம் பிரமாதம்!
பரங்கிப்பேட்டை, சாரதா.

★ டாக்டரின் பதில்கள் மிகவும் பயனுள்ளவை. பக்கத்தை இன்னும் கூட்டவும்.
குண்டூர், சுரேஷ் சந்திரா.

★ உடும்பைப் பற்றி அறிவியலாக எனக்குத் தெரிந்து எழுதியுள்ளது கோகுலம் தான்!
அரக்கோணம், மு. நவ..ப் ஷெரீப்.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா : 2344157; டைரக்டர் : 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-.
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

